# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்




விலை : 250/-

மார்ச்-யூன் 2024

# ஒரு பலஸ்தீனக் குரல்

**எம். ஏ. நுஃமான்**

நீ சொல்கிறாய்
நாங்கள் விலங்குகளுடன் போரிடுகிறோம் என்று
அவர்களை அப்படித்தான் நடத்தவேண்டும் என்று
சொல்கிறாய்
நீ அப்படித்தான் சொல்வாய்
உன் மூளை மரத்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது

விலங்குகளை அவமதியாதே
விலங்குகள் மனிதரின் தோழர்கள்
விலங்குகள் இல்லாத உலகில்
நீயும் நானும் வாழமுடியாது
விலங்குகளை அவமதியாதே

விலங்குகள் ஆக்கிரமிப்பதில்லை
விலங்குகள் குண்டுவீசி மனிதரைக் கொல்வதில்லை
விலங்குகள் ஒரு தேசத்தை அபகரிப்பதில்லை
விலங்குகள் மனிதரைத்
தங்கள் வீடுகளை விட்டுத் துரத்துவதில்லை
கிராமங்களை நிர்மூலமாக்குவதில்லை
விலங்குகள் மனிதரை அகதிகளாக்குவதில்லை
விலங்குகளை அவமதியாதே

நீ யார் என்று யோசித்துப்பார்
நீ எங்கிருந்து வந்தாய்
எப்படி இங்குவந்தாய்
என்பதை எண்ணிப்பார்
எப்படி எங்கள் மண்ணில் காலூன்றினாய்
எப்படி எங்களைத் துரத்தினாய்
எப்படி எங்கள் கிராமங்களை அழித்தாய்
எப்படி எங்களைக் கொன்றுகுவித்தாய்
எப்படி எங்களை அகதிகளாக்கினாய்
எப்படி எங்களைச் சிறையில் அடைத்தாய்
என்பதை எண்ணிப்பார்

உன்மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே

எங்கள் அமைதியைக் குலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் தேன்கூட்டைக் கலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் ஒலிவ மரங்களை அழித்தவன்
நீ இல்லையா
எங்களைத் துப்பாக்கி தூக்கவைத்தவன்
நீ இல்லையா
எங்கள் குழந்தைகளைக் கல்பொறுக்கவைத்தவன்
நீ இல்லையா
இப்போது நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே

நீ சொல்கிறாய்
நாங்கள் நாகரீகத்தின் எதிரிகளுடன்
போரிடுகிறோம் என்று
இது நாகரீக சக்திகளுக்கும்
காட்டுமிராண்டிகளுக்கும்
இடையிலான போர் என்று சொல்கிறாய்
இந்த நூற்றாண்டின் பெரிய நகைச்சுவை
இல்லையா இது
நான் சொல்லவேண்டியதை நீ சொல்கிறாயா
சாத்தான் வேதம் ஓதுகிறதா
ஹிட்லருக்குப் பிறகு
அவன்பாதையில் செல்லும்
மனித நாகரீகத்தின் மோசமான எதிரி
நீ இல்லையா

உலகின் பெரிய பயங்கரவாதிகள்
உன்னை ஆதரிக்கிறார்கள்
ஆனால் உன் கண்களைத் திறந்துபார்
நீதி உணர்ச்சி கொண்ட மக்கள்
உலகெங்கும் உனக்கெதிராகக்
கிளர்ந்தெழுகிறார்கள்
நீதி உணர்ச்சி மிக்க உன் சொந்த மக்களே
உனக்கெதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள்
உங்கள் முடிவு நெருங்கிவிட்டது

அநியாயக் காரர்கள் நிலைத்திருப்பதில்லை
வரலாறு அவர்களைக் காறி உமிழ்கிறது
அந்த வரிசையில் நீ வந்துநிற்கிறாய்
உன்முடிவு நெருங்கிவிட்டது

50ம் பக்கம் பார்க்க...

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்
THAYAKAM
Art, Literature and Social science Magazine

**இதழ் 110 மார்ச்-யூன், 2024**

பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்

ஆசிரியர் குழு :
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
பி. முத்துலிங்கம்
மு. அநாதரட்சகன்
க. சிவகரன்
ந. பார்த்திபன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
சி. கிருஷ்ணப்பிரியன்
ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்
மோகனதர்சனி
செம்மலர் மோகன்

விநியோகச் செயலர் :
ச. தனுஜன்

அட்டைப் படம் :
தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50வது ஆண்டுவிழாவில் சூழலியலை உட்பொருளாக கொண்ட நாடக காட்சி.

வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்

உள் ஓவியங்கள் :
இணையத்திலிருந்து

அச்சுப் பதிவு :
குரு பிறிண்டேஸ், திருநெல்வேலி

தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com

தாயகம் அடுத்த இதழிலிருந்து தேசிய கலை இலக்கிய பேரவையின் தேசிய மாநாட்டில் தெரிவான புதிய ஆசிரியர் குழுவின் கூட்டுழைப்பாக வெளிவரும் என்பதனை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர்குழு

## உள்ளடக்கம்

**கவிதைகள்**

எம். ஏ. நுஃமான் 00
சி. கிருஷ்ணபிரியன் 04
VK றொபின் 30
தம்பா 44
இரா. தனவந்தன் 59
அலெக்ஸ் பரந்தாமன் 60

**மொழிபெயர்ப்புக் கவிதைகள்**

டொமிங்கோ அல்போன்சோ 55
லூயிஸ் சுர்டியாஸ் 56
டிடோரா அலொன்ஸோ 57

**சிறுகதைகள்**

க. சிவகரன் 13
அநாதரட்சகன் 31
சை. கிங்ஸ்லி கோமஸ் 46
சிவ. இராஜேந்திரன் 51

**கட்டுரைகள்**

ஞாலசீர்த்தி மீநிலங்கோ 13
சோ. தேவராஜா 41

**நூல் அறிமுகம்**

சந்திரலேகா கிங்ஸ்லி 27
செண்பகன் 37

**மாநாட்டு அறிக்கை** 05

**தேசிய கலை இலக்கியப் பேரவை**

*62, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி*
*கொக்குவில், இலங்கை*

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு
இதழ் 110
மே, 2024

# ‘தாயகத்’தின் ஐம்பது ஆண்டுகளும் இன்றைய நிலையும்

50 ஆண்டுகளுக்கு முன் 1974இல் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ‘தாயகம்’ சஞ்சிகை முதல் இதழ் வெளிவந்தபோது உழைக்கும் மக்களின் தாயகமாக இலங்கையை வெளிப்படுத்தி இருந்தது. பேரினவாத முதலாளித்துவத் தேசியத்தை முற்றாக நிராகரித்திருந்தது, ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதியாக ஏற்றிருந்தது. இனவாதத்தை தூண்டி வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வரும் முதலாளித்துவ அரசுகளிடம் கையேந்தி நின்று சுயநிர்ணய உரிமையைப் பெறமுடியாது என்ற யதார்த்த நிலையை அன்றே கருத்திற்கொண்டு, இனவாதமற்ற அனைத்தின உழைக்கும் மக்களின் ஆட்சியை இலங்கையில் உருவாக்கும் விடுதலைப் பணிக்கு கலை இலக்கியம் மூலம் பங்களிப்பதை ‘தாயகம்’ இதழ் தனது இலக்காக்கிக் கொண்டது.

தேசிய இன விடுதலை என்பது அவ்வினத்தைச் சேர்ந்த அனைத்து மக்களினதும் பூரண விடுதலையைப் பெற்றுத் தருவதாக அமைவதில்லை. அதற்குள்ளும், உழைக்கும் மக்கள் மீதான ஒடுக்குமுறை உட்பட பல்வேறு ஒடுக்குமுறைகளும் ஏற்றத்தாழ்வுகளும் தொடர்ந்து இருந்துவரும். எனவே தேசிய இன விடுதலைக்கான இருமார்க்கங்களான ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு, பிரிவினைத் தீர்வு என்பதில் ஒன்றைத் தேர்வுசெய்யும் பொழுது அனைத்து மக்களின் விடுதலைக்கான சாதக பாதகங்களைக் கருத்திற் கொண்டே அதனைத் தேர்வு செய்ய வேண்டும்.

இலங்கையின் புவிசார் அரசியற் சூழலில், தேர்வுசெய்யும் தேசிய இன விடுதலை மார்க்கத்துக்கு ஏற்ப அவ் விடுதலைக்கான நண்பர்களும் பகைவர்களும் வேறுபடுவர். இலங்கைக்குள் தீர்வை ஏற்கமுனையும் பொழுது அனைத்தின இலங்கையின் உழைக்கும் மக்களும் நண்பர்களாவர். அவர்கள் அனைவரையும் சுரண்டி ஒடுக்கும் முதலாளித்துவ தேசஅரசும், அந்த அரசின் நலன்களைப் பாதுகாத்து நிற்கும் ஏகாதிபத்தியமும் உழைக்கும் மக்கள் அனைவர்க்கும் பொது எதிரிகளாவர்.

பிரிவினையை மார்க்கமாகக் கொண்டால் அனைத்தின மக்களும் எதிரிகளாகத் தெரிவர். இன வரையறைக்குள்ளும் சாதி, இன, மத, வர்க்க வேறுபாடுகள் தொடர்வதற்கான பொருளாதார கலாசார அடித்தளம் தொடரும். அனைத்து மக்களது விடுதலைக்கும் நலன்களுக்கும் எதிரிகளான, அதிகாரவர்க்க ஆட்சிகளுடன் கூட்டுச் சேரும் ஏகாதிபத்திய சார்பு நாடுகளும், பிராந்திய மேலாதிக்க வல்லரசுகளும், பிரிவினைக்கான ஆதரவைப் பெறுவதற்கான நண்பர்களாகத் தோற்றம் தருவர்.

இவற்றைக் கருத்திற்கொண்டே, விரிந்த மானுட நோக்குடன், தேசிய இனங்களின் விடுதலைக்குத் தீர்வாக உழைக்கும் மக்கள் தலைமையிலான தேச விடுதலை மார்க்கத்தை ‘தாயகம்’ ஏற்று தனது கலை இலக்கியப் பயணத்தை பல்வேறு இடர்கள் மத்தியிலும் தொடர்ந்தது. மக்களைப் பிரிக்கும் அதிகார வர்க்க அரசியலுக்குச் சார்பாக, முன்வைக்கப்படும் ‘அரசியல் நீக்கம் பெற்ற’ கலை இலக்கியக் கோட்பாட்டு மாயைகளைப் புறம்தள்ளி, மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுக்க முனைந்தது. எத்தகைய கலை இலக்கியப் படைப்புக்களும் வெற்றுவெளியில் இருந்து உருவாகுவதில்லை. அதிலும் மக்கள் விடுதலைக்கான கலை இலக்கியப் படைப்புக்களை, மக்கள் வாழ்வின் யதார்த்தச் சூழலில் இருந்து, வரலாற்று இயங்கியல் உள்ளுணர்வுடன், கால, வெளியை தளமாகக் கொண்டுதான் படைக்கப்பட முடியும். அவ்வாறு உருவாகும் படைப்புக்களே மக்கள் விடுதலைக்குச் சார்பான படைப்புக்களாக அமையும் என்பதில் ‘தாயகம்’ உறுதியாக இருந்தது.

அறுபதுகளின் ஆரம்பத்திலிருந்து இலங்கை மக்களின் வாழ்வும் உணர்வும் இன்றைய நிலையில் இருந்து வேறுபட்டிருந்தது. அன்றைய உலக நாடுகள் பலவற்றில் ஏற்பட்டது போலவே கொலனித்துவத்தின் தொடர்ச்சியான ஏகாதிபத்தியச் சார்பான சுரண்டல் அதிகார ஆட்சி அமைப்புகளுக்கு எதிராக மக்கள் விழிப்படைந்து அணிதிரளும் நிலை இங்கும் இருந்தது. சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக அடிப்படைச்

சமூக மாற்றத்தை நோக்கிச் சிந்திக்கும் அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், இளைஞர்களின் எண்ணிக்கை இலங்கை முழுவதும் அதிகரித்துச் சென்றது. தேசமெங்கும் தொழிலாளர்கள் விவசாயிகளின் போரட்டங்கள் தொடர்ந்தன. வடபகுதியில் தீண்டாமைக்கு எதிரான வெகுஜனப் போரட்டம் எழுச்சிபெற்றது, தென்னிலங்கையில் ஏப்ரல் 71 கிளர்ச்சி ஏற்பட்டது. வடபகுதியில் கல்வியில் தரப்படுத்தலுக்கு எதிராக மாணவர் எழுச்சி ஏற்பட்டது. சமூக மாற்றத்துக்கான சிந்தனை குறிப்பாக சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் பரவலாக எற்பட்டு வந்தது. தமிழ் இளைஞர் இயக்கங்கள் மத்தியிலும் இத்தகைய கருத்துக்கள் ஆரம்பத்தில் எழுந்திருந்தன. இத்தகைய அரசியல் விழிப்புகளும், எழுச்சிகளும் தமது நலன்களுக்கு எதிராகத் திரும்புவதை உணர்ந்த ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்கத் தரப்புக்கள் தமக்குள் ஒன்றுகூடியும், தத்தம் நிலைகளில் நின்றும் வேகமாகச் செயற்பட ஆரம்பித்தன.

இலங்கைத் தேர்தலில் 1977ல் ஏற்பட்ட அதிகார மாற்றத்தை தமக்குச் சாதகமாக்கி இலங்கை முழுவதையும் நவகொலனித்துவ பொருளாதார கலாசாரப் பிடிக்குள் உட்படுத்த அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளான மேற்குநாடுகளும் முனைப்புடன் செயற்பட்டன. அப்பொருளாதார முறைமையை அப்பொழுது ஏற்றிராத பிராந்திய மேலாதிக்க நாடான இந்தியா, இலங்கை அரசால் கூர்மைப் படுத்தப்பட்ட, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை முனைப்படுத்தி, வடக்குக் கிழக்கை தமது செல்வாக்கு மண்டலமாகப் பாவித்து முழு இலங்கையையும் கட்டுப்படுத்த முனையும் உத்தியைக் கையாண்டது. முப்பது ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்த யுத்தத்தில் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக நம்ப வைக்கப்பட்ட, இத்தகைய அதிகாரத் தரப்புக்கள் அனைவரதும் நிகழ்ச்சி நிரல்களும் இனிதே முடிய, முள்ளிவாய்க்காலில் அவர்கள் அனைவரும் கைகோர்த்துக் கொண்டனர். தமிழ் மக்களின் நிலை இன்றைய பலஸ்தீனத்தில் காஸாவில் தொடர்வதைப்போல கண்ணீரும், இரத்தமும், தசைகளும், எலும்புகளும் மரணங்களும் நிறைந்த நெஞ்சை உருக்கும் காட்சிகளாக முடிவுற்றது. இம்மனிதப் பேரழிவின் வரலாற்றுப் பாடங்கள் மேலும் ஆழப்படுத்தப்பட வேண்டும். ஆண்டுதோறும் சம்பிரதாயச் சுடரொளிகளை ஏற்றி, கண்ணீர் உதிர்ப்பதால் மட்டும், வரலாறு தோறும் தொடரும் அதிகாரப் பேரிருட் சிறைகளில் இருந்தும், பல்வேறு நிலைகளில் தொடரும் ஒடுக்குமுறைகளில் இருந்தும் நாம் எமது சந்ததிகளை மீட்க முடியாது. இம்மனிதப் பேரழிவுகளின் வரலாற்றுப் பாடங்களை மக்களிடம் எடுத்துச் சென்று அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனை செயலாக்கும் பணியில் முன்செல்லவேண்டும்.

போரின் பின்னான பதினைந்து வருட இலங்கையின் அரசியலிலும் தேசிய இனங்களின் உரிமைகளை மறுக்கும் போக்கு தொடர்கிறது, அதனால் பிளவுண்ட மக்கள் வாழும் இத்தேசத்து மண்ணில், அதே ஏகாதிபத்திய நவகொலனித்துவ ஆட்சி அதிகாரத்தின் பிடிகள் மேலும் வலுவடைகின்றன. பிராந்திய மேலாதிக்க வல்லரசுகளின் கால்கள் வடக்குத் தெற்கு, கிழக்கு மேற்கு, மத்திய மலைநாடென்ற பேதங்களின்றி தேசமெங்கும் இறுகப் பதிக்கப்படுகின்றன.

இலங்கை மக்கள் அனைவரும் இன, மொழி, மத, சாதி, பால் வேறுபாடுகள் யாவும் அற்று அவர்களின் காலடிகளின் கீழ் நசிவுறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றர். இத்தேசத்தின் வளத்துக்கும், அனைத்து மக்களின் தேவைகள், நலன்களுக்குமாக மண்ணிலும், கடலிலும், மலைகளிலும் நாளாந்தம் அயராது தம் உழைப்பை தரும் தொழிலாளர், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், தனியார் துறைகளிலும், பொதுத் துறைகளிலும். சேவைத் துறைகளிலும், மத்திய கிழக்கிலும் ஏனைய உலக நாடுகளிலும் சென்று ஓய்வின்றி உழைக்கும் மக்களே இந்நாட்டில் நிலவும் எண்ணிக்கை 'ஜனநாயக'த்தில் பெரும்பான்மையினராவர். இவ்வாறு ஒன்றுபட்டு தேசத்தின் வளத்துக்கும், மக்களின் நலத்துக்குமாக உழைக்கும் மக்களிடம் இன, மதம் கடந்த ஒருமைப்பாடு, இயல்பாகவே எழுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதனால் தீர்வின்றித் தொடரும் தேசிய இனபிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான ஒன்றுபட்ட பலமான சக்திகளாக உழைக்கும் மக்களே உள்ளனர்.

இலங்கை மக்கள் இன்று எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் என்றும் இல்லாத வகையில் பேதங்கள் யாவும் கடந்து அனைவரும் பாதிக்கப்படும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளற்று நாளாந்த வாழ்வில் இவர்கள் அனைவரும் அனுபவித்து வரும் பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை, சம்பள உயர்வின்மை, உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவுகள், கல்வி, சுகாதார நெருக்கடிகள், போசாக்கின்மை, பசி பட்டினியுடன் தொடரும் வாழ்வு என்பவற்றுக்கு எதிராக உழைக்கும் மக்கள் வீதிகளில் இறங்கி வெகுஜனப் போராட்டங்களில் ஒன்றிணைந்து வருகின்றனர். மக்களை ஒடுக்க உதவும் தலைவிதி, இறைவிதி, போல ஐ.எம்.எவ். விதிக்கும் உட்பட்டு அனைவரும் வாழும் நவகொலனித்துவ அடிமை வாழ்வில் இருந்து மீள அனைத்து ஒடுக்கு முறைகளையும் இல்லாது ஒழிக்க உழைக்கும் மக்களும், முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளும் இம் மண்ணில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

# நிலம் என்பது நினைவு

சி. கிருஷ்ணபிரியன்

அமைதியின் கழுத்தில் வழிகிறது குருதி
அமைதியின் கழுத்தில் ஆழப் பதிந்தன
போரின் நகங்கள்
அமைதியின் கழுத்தில் புராதனச் சங்கிலி
அடிமைச் சங்கிலி

காஸாவின் தெருக்களில் எதுவுமில்லை
தனியே அச்சம் அங்குமிங்கும்
அலைந்து திரிகிறது

பல்லாயிரம் பிள்ளைகளை அடித்து தின்ற பின்னும்
அடங்காத பசி
போர் எனும் பெரு மிருகத்துக்கு

குருதி வாடையில் கிளர்ச்சியடைந்து உடலை சிலிர்த்தது

பற்களின் இடுக்குகளில் மனித குலம்

மரித்த குழந்தைகள் போரின் சின்னங்கள்
பிழைத்த குழந்தைகள் போரின் சாட்சிகள்
நாளைய தலைமுறை கனவுகளுக்கு போரின் முகம்

கனவுகளில் ஒலிப்பது மன்றாட்டம்
உயிர் பிழைத்தலுக்கான கேவல்

போர் கிளப்பிய புழுதியில் மூச்சுத் திணறும்
பலஸ்தீனம்
ஒலிவ் இலைகள் நடுங்கி உதிர்கின்றன
பருத்தி காட்டில் படர்ந்த காற்றில் ஈரம் இல்லை

துவக்கிலிருந்து அதிகாரம் பிறக்கிறது
அமைதியும் தான்
போர் அமைதிக்கானது

குருதி பிசுபிசுக்கும்
ஆண்டவரின் பீடங்களில்
எந்தச் சலனமுமில்லை
பிரார்த்தனைகளுக்குக் குரல் இல்லை
போரின் ஆர்ப்பரிப்பில் யாவும் பணிந்தன

கைகளில் பற்றியிருந்த நிலம்
கொஞ்சம் கொஞ்சமாகப் பறிபோகிறது
வாழ்வதற்கான அவா விடாது இறுகப் பற்றுகிறது

நிலம் என்பது நினைவு
நிலம் என்பது உணர்வு
எம் மூதாதையரின் பாடல் அது

மனித குலத்துக்கெதிரான போர்
அமைதியின் கழுத்தில் அப்பாவிகளின் குருதி

அப்பாவிகளின் குருதியில் இருந்தும் அதிகாரம் பிறக்கும்



# தேசிய கலை இலக்கியப் பேரவையின் 5வது அனைத்திலங்கை மாநாட்டு அறிக்கை

### 24-02-2024 யாழ்ப்பாணம்

தேசிய கலை இலக்கியப் பேரவை உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவின் பின்னர் இம் மாநாடு இங்கு நடைபெறுகிறது. அந்தவகையிலே இங்கு நடைபெறும் இம் மாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்த மாநாடாக உள்ளது. இன்று நடைபெறுவது தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஐந்தாவது அனைத்திலங்கை மாநாடாகும். 50ஆண்டு காலத்தில் இதன் இயங்கு திசையில் ஏற்பட்ட முன்னடைவுகள், பின்னடைவுகள், சரிகள், பிழைகளில் இருந்து விமர்சன பூர்வமாக பாடங்களைக் கற்று, மேலும் தெளிவுபெற்று மாற்றம் அடைந்து நாம் முன்செல்ல வேண்டும்.

அதற்கு அமைவாக தேசிய கலை இலக்கியப் பேரவையை தோற்றுவிக்க வேண்டி இருந்த அன்றைய தேவை பற்றியும், உருவாகிய சூழல் பற்றியும், அதன் அடிப்படைக் கொள்கை பற்றியும் ஆழமான தெளிவை நாம் ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். அதன் மூலமே இனி வரப்போகும் ஆண்டுகளிலும் எதிர்காலத்திலும் மக்கள் கலை இலக்கியத்தை மக்கள் மத்தியில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லமுடியும்.

முதலில் மக்கள் இலக்கியம் பற்றியும் அது பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் வளர்ந்து வந்த வரலாற்றுப் போக்கினையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம்தான். தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கத்துக்கான காரணத்தையும், அதன் அடிப்படைச் சமூக மாற்றத்துக்கான, மக்கள் விடுதலைக்கான, மக்கள் கலை இலக்கியக் கொள்கையை முன்னெடுக்க வேண்டிய, இன்றைய காலத்தின் இன்றி அமையாத தேவையையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

## தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கம்

தேசிய கலை இலக்கியப் பேரவை 50 ஆண்டுகளுக்கு முன் 1974ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ம் திகதி உருவாக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கே. ஏ. சுப்பிரமணியம், க. தணிகாசலம், சி. கா. செந்திவேல்,











க. குணேந்திரராசா, என். கே. ரகுநாதன், கி. சிவஞனம், இ. செல்வநாயகம், அ. இராஜலிங்கம், வை. வன்னியசிங்கம், இளையபத்மநாதன், க. சிவம், கே. டானியல், நந்தினிசேவியர், சி. நவரத்தினம் த. குணரத்தினம், க. தர்மகுலசிங்கம், கே. இரத்தினம், கு. சிவராசா, முருகுகந்தராசா, குட்டிக்கிளி ஆகியோர் கலந்து கொண்டனர். அதன் இணைச் செயலாளர்களாக க. தணிகாசலம், க. குணேந்திரராசா ஆகியோரும் பொருளாளராக கி. சிவஞானமும் தெரிவாகி இருந்தனர்.

1974ல் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆரம்பித்திருந்தாலும், அதற்கு பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்தே மக்கள் கலை இலக்கியச் செயற்பாட்டுக்கான முன்நகர்வுகள் நடந்தருந்தன. 1964ல் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியில் ஏற்பட்ட கொள்கை வேறுபாடு காரணமாக நிகழ்ந்த பிளவும், தோழர் சண்முகதாசன் தலைமையில் அமைந்த புதிய கட்சியும், அது முன்வைத்த புரட்சிகர மார்க்கமும் இலங்கை அரசியலில் பாராளுமன்ற வழிமுறைக்கு அப்பால் ஒரு வெகுஜனப் போராட்ட வழிமுறைக்கு வித்திட்டிருந்தது. அறுபதுகளின் முற்பகுதியிலிருந்தே இத்தேசத்தில் ஒரு புதிய ஜனநாயக அமைப்பைத் தோற்றுவிக்கும் நோக்குடன் தேசந் தழுவிய ரீதியில் அடிப்படைச் சமூகமாற்றத்தை நோக்கிய மக்கள் போராட்டங்கள் நடைபெற்றன. கொழும்பு, மலையகம், வன்னி, யாழ்ப்பாணம் என பல பிரதேசங்களிலும் தொடர்ந்த தொழிலாளிகள், விவசாயிகளின் போராட்டங்களிலும், 1966 அக்டோபர் 21ன் பின்னர் தொடர்ச்சியாக வடபகுதியில் நடைபெற்ற தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களிலும் எழுந்த மக்கள் கலை இலக்கியச் செயற்பாடுகள் இசைப்பாக்கள், கவிதைகள், நாடகங்கள், ஓவியங்கள், சிறுகதைகள், நாவல்கள் என அவை விரிவடைந்திருந்தன. பெரும் எண்ணிக்கையான கலைஞர்கள் எழுத்தாளர்கள் அறிஞர்கள் புரட்சிகர உணர்வுடன் இவற்றில் பங்களித்திருந்தனர். தேசிய இனப் பிரச்சினை கூர்மை அடைய ஆரம்பித்திருந்த அக்காலச் சூழலில், அவற்றை அமைப்பு வடிவமாக ஆக்கி, தெளிந்த உணர்வுடன் மேலும் சிறப்பாக முன்னெடுக்கும் நோக்குடனேயே தேசிய கலை இலக்கியப் பேரவை அன்று உருவாக்கப்பட்டது. 'தேசிய கலை இலக்கியப் பேரவை', 'தாயகம்' என்ற பெயர்களிலேயே அக்காலட்டத்தில் முனைப்படைந்திருந்த தேசிய இன விடுதலையின் மாற்று வழிக்கான கருத்தியலின் சாரங்களைக் காணமுடியும்.

## தேசிய கலை இலக்கியப் பேரவையின் கோட்பாட்டுத் தளம்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் இலக்கிய இதழாக 1974 சித்திரைத் திங்களில் தாயகம் வெளிவந்தது. அத் 'தாயகம்' சஞ்சிகையின் முதல் இதழில் மறைந்த தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திலேயே 'தாயகத்'தின் கொள்கைப் பிரகடனமாக, தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கியக் கொள்கையும் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. அதன் சுருக்கம் இவ்வாறு அமைகிறது.

"கலை இலக்கியத் துறையில், முற்போக்கு விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன், சரித்திர மாறுதல்களைப் பிரதிபலித்தும், அதற்காக வேண்டியும் நிற்கின்ற தேசிய சக்திகளின் ஆயுதமாக 'தாயகம்' விளங்கும்.

கலை இலக்கியத் துறையில் எந்த ஒரு படைப்பும் சமுதாய நோக்குப் பொதிந்துள்ளது என்ற வாதம் மறுக்க முடியாதது.

ஆனால், இவை இரண்டு மார்க்கங்களாகப் பிரிகின்றன.

ஒன்று, புதிய ஜனநாயகம், மனிதகுலத்தின் நல்வாழ்வு, புதிய நாகரிகத்தை வேண்டி புத்துலகை உருவாக்கும் சக்திகளின் மார்க்கம். இது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஜனநாயக சக்திகளால் முன்னெடுக்கப்படுவது.

இரண்டாவது முன்னைய சரியான மார்க்கத்துக்கு நேரெதிரானதும் அழிந்து கொண்டிருப்பதுமான சுரண்டல் சமுதாய அமைப்பைக் கட்டிக் காக்கும் மார்க்கமாகும். அது ஏகாதிபத்திய சக்திகளாலும், முதலாளி வர்க்கத்தினராலும் தலைமை தாங்கப்படுவது.

முதலாவது மார்க்கமும் புத்துலகமுமே 'தாயக'த்தின் நோக்கமும் அதன் அபிலாசையுமாகும். புதிய ஜனநாயகத்தையும், புதிய வாழ்வையும், புதிய நாகரிகத்தையும் தோற்றுவிக்கும் சக்திகள் தாங்கள் எதிர்பார்த்த – எடுத்த முயற்சி 'தாயகமாக' காலம் அறிந்து தங்களிடம் வந்திருப்பதைக்காண மகிழ்ச்சி அடைவர். 'தாயகம்' உங்களுடையதே." என 50 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

'கலை கலைக்காக', 'அரசியல் நீக்கம் பெற்ற தூய கலை இலக்கியம்' போன்ற அதிகார வர்க்கத்தினருக்கு சார்பான கலை இலக்கியக் கோட்பாடுகள் அதிகம் பேசப்பட்ட காலத்திலேயே தேசிய கலை இலக்கியப் பேரவையின் இத்தகைய மக்கள் கலை இலக்கியக் கோட்பாடு 'தாயகம்' சஞ்சிகையில் முன் வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேலும் சமகால அனுபவங்களையும் உள்வாங்கி விமர்சனம், சுயவிமர்சனம், மாற்றம் என்ற முன்னோக்கிய வரலாற்று இயங்கியல் பொருள்முதல் வழிமுறையை பின்பற்றியே தேசிய கலை இலக்கியப் பேரவை தனது கலை இலக்கியப் பணியை இன்றுவரை முன்னெடுத்து வந்துள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையால் 50 ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு என்பவை இன்று 50 ஆண்டுகள் கடந்த பின்னரும் எம் தேசத்து மக்கள்மேல் தொடரும் பல்வேறு வகையான ஒடுக்குதல்களுக்கான தீர்வுகளை எட்டுவதற்கு அடிப்படையாக அமைகின்றனவா என்பதை இம் மாநாடு மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## மக்கள் விடுதலையும் மக்கள் இலக்கியமும்

புதிய ஜனநாயகம் என்ற மக்களாட்சி முறைமையை தேசியகலை இலக்கியப் பேரவை ஏன் முதன்மைப் படுத்துகிறது என்பதற்கு ஈழத்து மக்கள் கலை இலக்கிய வளர்ச்சிப் போக்கின் சுருக்கமான வரலாற்றை உதாரணமாக இங்கு நினைவு கொள்ள முடியும்.

பிரித்தானிய கொலனித்துவ ஆட்சிக்கு எதிராக எழுந்த இந்திய தேசவிடுதலைப் போராட்ட காலத்தில் இலங்கையும் பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமையால் அங்கு எழுந்த தேச விடுதலை சார்பான அரசியல், அறிவியல் சீர்திருத்தக் கருத்துக்களும், கலை இலக்கியப் படைப்புக்களும், ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளிடம் தாக்கத்தைச் செலுத்தின. அந்தவகையில் பாரதி போன்ற, ருஷ்யப் புரட்சியை வரவேற்ற, தேசவிடுதலையுடன் மட்டுமன்றி, சாதிய விடுதலை, பெண்விடுதலை, மக்கள் விடுதலை, வர்க்க விடுதலை, என ஆன்மிகப் பரப்புக்குள் இருந்து விரிந்த அவரது கருத்துக்களாலும், மகாத்மா காந்தியின் அகிம்சைக் கருத்துக்களாலும் அன்றைய ஈழத்துக் கலை இலக்கியப் படைப்பாளிகளும், அறிஞர்களும் ஈர்க்கப்பட்டனர். அத்தகைய படைப்பாளிகளிடமிருந்து









மறுமலர்ச்சி இலக்கியப் படைப்புக்கள் எழுந்தன. மக்கள் படும் அவலங்களையும், துன்பங்களையும் மனிதாபிமான உணர்வுடன் வெளிப்படுத்தும் அன்றைய ஈழத்து மறுமலர்ச்சி இலக்கியங்களாக அவை அமைந்தன.

ஐம்பதுகளின் நடுப்பகுதியில் எழுந்த முற்போக்கு இலக்கியம் மக்கள் மத்தியில் உள்ள, வர்க்க ரீதியான வேறுபாடுகளை மக்களின் பின்தங்கிய வளர்ச்சி நிலைக்கு காரணமாக வெளிப்படுத்தியது. அத்துடன், தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம் என்பவற்றை சிறப்பாக அவ்வமைப்பு முன்னெடுத்திருந்தது. 'இழிசனர் இலக்கியம்' என்ற பழமைவாத பண்டிதர்களின் தாக்குதல்களுக்கு பதலடிகொடுத்து முற்போக்கு இலக்கியத்தை முனைப்புடன் வளர்த்துச் சென்றது. எனினும், தேசிய முதலாளித்துவ அரசுடன் இணைந்து பராளுமன்றச் சீர்திருத்தங்கள் மூலம், மக்கள் எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளுக்கான தீர்வை, முதலாளித்துவ ஜனநாயக எல்லைகளுக்குள் முழுமையாகப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையை, பெரும்பாலும் அன்றைய இலக்கியங்கள் வெளிப்படுத்தி நின்றன.

இவை இரண்டும் மக்கள் இலக்கியத்தின் ஆரம்பப் படிநிலைக் கூறுகளாக அமைந்து மக்கள் அன்று எதிர்நோக்கிய ஒடுக்குமுறைகளை மட்டும் வெளிப்படுத்தும் இலக்கியங்களாக அமைந்தன. எனவே உழைக்கும் மக்கள் தலைமையிலான மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை அறுபதுகளின் பின்னர் எழுந்திருந்தது. பேராசிரியர் கைலாசபதி முதலாவது தாயகத்தில் "இங்கிருந்து எங்கே?" என்ற தலைப்பில் அமைந்த தனது கட்டுரையில், அன்றுவரை வெளிவந்த கலை இலக்கியங்களை மூன்று வகையாகப் பிரித்து விமர்சித்து, கலை இலக்கியங்கள் மக்கள் படும் துன்பங்களை மட்டும் வெளிப்படுத்துவதுடன் நின்றுவிடாமல், ஒடுக்குமுறைகள், துன்பங்களுக்கான காரணங்களை மக்கள் அறிந்து கொள்ளவும். அதனை ஒழிப்பதற்கான உணர்வுந்தலை அழகியலோடு அளிப்பதாகவும் அமையவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். கவிஞர் சுபத்திரனின் "குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சுகிறேன்" என்ற கவிதை வரிகள் போன்ற பல கவிஞர்களின் கவிதை வரிகளும், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள். புதிய இசைப் பாடல்கள், என பல்வகையாக எழுந்த படைப்புக்களும், மக்கள் கலை இலக்கியத்துக்கான அந்த மாறுதல்களை சுட்டி நிற்பதாக அமைந்தன. அதுபோன்றே பெண்களிடம் கொலுவிருந்த கோபத்தை கவிஞர் சிவசேகரத்தின் 'தேவி எழுந்தாள்' கவிதையில் 'சிறைப்பட்டு அலுத்திட்ட தேவி எழுந்தாள் - இற்றைச் சிறுமைகளை அழிக்கத் தேவி எழுந்தாள்' என மக்கள்



கலை இலக்கியம் எழுச்சி பெறவேண்டிய பரந்த திசைகளை அவை எடுத்துக் காட்டுவதாக அமைந்தன.

மாக்சிய வரலாற்று இயங்கியல் பொருள்முதல்வாத உலக நோக்கும், சமூகவிஞ்ஞானமும் முதலாளித்துவ ஜனநாயக அமைப்புக்குள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகளை அடைய முடியாது என முன்வைத்து வரும் கருத்தை நிதர்சனமாக்கும் காலமாக இது உள்ளது. எமது நாட்டு மக்கள் நாளாந்தம் தீர்வின்றி எதிர்கொள்ளும் பிரச்சினைகளும். உலக நாடுகளிலும் ஓயாது தொடர்ந்து சூல்கொள்ளும் போர் மேகங்களும் மக்களுக்கு வெளிப்படையாக இவற்றைத் தெளிவுபடுத்தி வருகின்றன. இதனைப் புரிந்து கொண்டே இத்தேசத்து மக்களின் நாளாந்த வாழ்வின் உயிர்ப்புக்காக உழைக்கும் 95 வீதமான மக்கள் விழிப்படைந்து ஒன்றுபட்டு அமைக்கும் மக்களாட்சி முறைமையை - புதிய ஜனநாயக அமைப்பை இம்மண்ணில் உருவாக்க முயலும் உழைக்கும் மக்களின் விடுதலை உணர்வுக்கு உரமூட்டும், மக்கள் கலை இலக்கியச் செயற்பாடுகளை தேசிய கலை இலக்கிப் பேரவை முன்னெடுத்து வருகிறது.

இந்தநாடு ஒரு சுதந்திரமான ஜனநாயக நாடல்ல என்பதை இன்றைய பொருளாதார நெருக்கடியால், நாளாந்த உணவுக்கே அல்லற்படும் நாட்டு மக்கள் மட்டுமல்ல, மத்தியதர வர்க்கத்தினர் உட்பட உழைக்கும் மக்கள் அனைவரும் இன்று உணர்ந்து, புதிய மாறுதல்களை நோக்கி ஒன்றுபடக்கூடிய சூழலில் இப்பேரவை மாநாடு நடைபெறுகிறது. நாட்டு மக்கள் அனைவர் மீதான பொருளாதார ஒடுக்குமுறையும், அதனால் பாதிக்கப்படும் மக்கள் தமக்கெதிராக அணிதிரண்டு எழுவதைத் தடுப்பதற்காக கடந்த 76 ஆண்டுகளாக ஜனநாயக ஆட்சி எனும் போர்வையில் தூண்டி வளர்த்த இன, மத, சாதி பால், வர்க்க வேறுபாடுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் தீர்வை ஏற்படுத்தாத அரசினர் இம் மாதம் 4ம் திகதி 77வது சுதந்திர தினத்தை காலிமுகத்திடலிலே கலை நிகழ்வுகளுடன், ஆடல் பாடல்களுடன் கொண்டாடினர்.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும்

ஒடுக்குமுறையற்ற, சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வை கடந்த 76 ஆண்டு ஆண்டுகளாக அளிக்கத் தவறிய இவர்களின் ஜனநாயகம் யாருக்கான ஜனநாயகமாக இருந்து வருகிறது என்பதை மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய நிலை இன்று உருவாகி உள்ளது. ஜனத்தொகையில் 5 வீதமான பெருமுதலாளிகள். நிலவுடமையாளர்கள், உட்பட அந்நிய சக்திகளின் கால்பிடித்து வாழும் தரகு முதலாளிகளுக்கும், பெரும் தனவந்தர்களுக்குமான முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியாகவே இந்த நாட்டின் ஆட்சி அதிகார அமைப்பு இருந்துவருகிறது. பேரினவாத ஒடுக்குமுறையையும் ஏனைய பல்வேறு சமூக ஒடுக்கு முறைகளையும் 21ம் நூற்றாண்டிலும் தொடர்வதற்காக, பழமைவாதச் சமூக அமைப்பையும், அதன் சிந்தனை முறைகளையும், கலை பண்பாடுகளையும், தனது பாதுகாப்புக்காக கட்டி இறுகக் காத்தபடி 76 ஆண்டுகளாக ஜனநாயகம் என்ற போர்வையில் – முதலாளித்துவ ஜனநாயகத்தை – முதலாளித்துவ சர்வாதிகாரத்தை இம்மண்ணில் தொடர்ந்து வருகிறது. எனவே இந்த நாட்டின் அதிகார வர்க்த்தினராகிய 5 வீதத்தினருக்கான முதலாளித்துவ ஜனநாயகமே இங்கு நிலவிவருகிறது. இதன் அர்த்தம் நாட்டின் பொருளாதார வளத்துக்கும், மக்களது வாழ்வின் நலத்துக்குமாக உழைக்கும் 95 வீதமான தொழிலளர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், அரச, தனியார் துறைகளைச் சேர்ந்த உழைக்கும் மக்களுக்கு, இந்த நாட்டில் ஜனநாயகம் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது என்பதுதான். இவ் யதார்த்தத்தை உண்மையை புரிந்துகொண்டு மக்களுக்கான புதிய ஜனநாயக அமைப்பை மக்களே உருவாக்கிக் கொள்ளும் வகையில், அவர்கள் விழிப்புற்று அணிதிரளும் விடுதலைப் பணிக்கு வளமும், பலமும் சேர்ப்பதே தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கியப் பணியாகும்.

## ‘பண்பாட்டு மேலாண்மையும்’ மக்கள் இலக்கியமும்

எமது நாட்டில் மட்டுமல்ல பெரும்பாலான உலக நாடுகளிலும் 5 வீதமான அதிகார வர்க்கத்தினரால் எவ்வாறு 95 வீதமான உழைக்கும் மக்களை ஆண்டாண்டு காலமாக அடக்கி ஒடுக்கி தமது ஆட்சிகளை பாதுகாத்து, பலமாகத் தொடரமுடிகிறது என்ற கேள்வியை முன்வைப்பதும், அதற்கான விடைகளை மக்களிடம் கொண்டு செல்வதும், மக்கள் கலை இலக்கியத்தின் இன்றைய பணியாக உள்ளது. இது மிகவும் பொறுப்புணர்வுடன் முன்னெடுக்க வேண்டிய பணியாகும். அதற்கான தெளிவைப் பெறுவதற்காகவே இம்மாநாட்டின் தொனிப்பொருளாக ‘புதிய பண்பாடும், மக்கள் இலக்கியமும்’ என்பதை இங்கு மகுட வாசகமாகப் பொறித்துள்ளதுடன், இம்மாநாட்டு அறிக்கையையும் அதன் அடிப்படையிலேயே அமைத்துள்ளோம். இங்கு புதிய பண்பாடு எனும் போது புதிய ஜனநாயக அமைப்பை தோற்றுவிக்கும் மக்கள் எழுச்சிகளின் தொடர்ச்சியில் அனைத்து மக்களுக்கான புதியவாழ்வையும், அதன் நீடசியில்த்தான் புதிய பண்பாட்டையும் தோற்றுவிக்க முடியும்.

எனவே இன்று மக்களிடையே நிலவும் பண்பாடு என்பது முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி அமைப்பு தான் ஒடுக்குகின்ற 95 வீதமான மக்களை தனது ஆட்சிக்கு எதிராக எழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காக, அரசு தன் மேலமைப்பாக வடிவமைத்து அரசின் பலத்துடன் பாதுகாத்து வரும் பண்பாடாகும். அது சட்டம், நீதி, கல்வி, கலை, மதம், பண்பாடு என்ற தொடரில் வரும் சக்தி வாய்ந்த பண்பாட்டு மேலாண்மை பெற்ற அமைப்பாகும். அரசை பாது காக்கும் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட இம்மேலாண்மை, அரசின் பல்வேறு ஒடுக்குதல்களையும் மக்கள் பொன்விலங்குகளாக கருதி, தாமாகவே விருப்புடன் ஏற்று வாழும் அடிமை மனேநிலைக்குள் அவர்களை ஆழ்த்தும் தன்மை கொண்டதாகும். இதற்கு ஆண்டாண்டு காலமாக மக்களிடையே நிலவி வரும், அவர்களது வாழ்வோடு இறுகிப் பிணைந்துவிட்ட பழமைவாத மத, கலை பண்பாட்டுச் சிந்தனைகளும், சடங்குகளும், ஆசாரங்களும் வலுச்சேர்க்கின்றன. கருத்து முதல்வாத அடிப்படையில் இவைகள் அமைவதால் ஏகாதிபத்திய அதிகார சக்திகள் இவற்றை தமக்குச் சாதகமாகப் பாதுகாத்து ‘சீனி பூசிய ரவைக’ளாகப் பயன்படுத்தி வருகின்றன. இதையே அந்தோனியோ கிராம்சி ‘பண்பாட்டு மேலாண்மை’ எனக் குறித்ததுடன் இம் மேலாண்மைக் கருத்து நிலைகளின் வலிமை பற்றியும், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்து இலக்கியத்தில் மக்கள் கலை இலக்கியத்துக்கு வலிமை சேர்த்தவர்கள் பண்பாட்டு மேலாதிக்கத்தை எதிர்ப்பதற்கு, வரலாறு தோறும் அவ்வக் காலகட்டத்தில் மக்களிடம் எழுந்த எதிர்ப்பிலக்கியங்களையும்,





எதிர்ப் பண்பாடுகளையும் துணையாக்கிக் கொள்ள முடியும் என்ற கருத்தை முன்வைத்து வந்துள்ளனர், அவற்றை ஆய்வுக் கட்டுரைகளாகவும், கவிதை களாகவும் வெளியிட்டுள்ளனர். அவர்களில் பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் சிவசேகரம், கவிஞர் முருகையன் போன்றோரின் ஆக்கங்களும், குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடகங்களும் முதன்மையானவையாக உள்ளன. புதிய பண்பாட்டுக்கு பலம்சேர்க்க, பழமைவாதப் பண்பாட்டின் எதிர்க் கூறுகளை அடையாளம் கண்டு, கால இட வேறுபாட்டைக் கருத்திற் கொண்டு ஏற்பது பயனுடையதாகும். மேற் கூறப்பட்டவர்களின் கருத்துக்களை மக்கள்முன் கொண்டு செல்வதும், கவிஞர் முருகையனின் "இரண்டாயிரம் ஆண்டுப் பழையசுமை எங்களுக்கு" எனும் கவிதையில் வரும் 'குப்பை விலக்கி மணிபொறுக்கி அப்பால் செல்லும்" அறிவு விழிப்புக்கான படிமத்தை மக்களின் மனதில் இருத்தி, புதிய பண்பாட்டின் உயிர்ப்புக்கு அவற்றை பலமாக்கிக் கொள்ளவும் வேண்டும்.

இங்கு 95 வீத மக்களை ஒடுக்கும் அடிபடைக் காரணி பொருளாதாரச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட வர்க்கக் காரணியாகவும், அவ்வொடுக்குதலின் கொடூரத்தை மக்களிடம் மறைப்பதற்கு, ஒடுக்குபவர் களுக்கு உதவும் பலமான காரணிகளில் ஒன்றாக, பண்பாட்டுக் காரணியும் உள்ளது என்பதில் கலை இலக்கியப் படைப்பாளிகள் தெளிவாக இருத்தல் வேண்டும். இல்லையேல் 'வரலாறு என்பது அடிப் படையில் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு' என்ற வரலாற்று இயங்கியல் பொருள் முதல்வாத உண்மையைப் புறந்தள்ளி, ஏகாதிபத்திய ஆதிக்க வர்க்க ஒடுக்குதலாளர்கள் தமக்கு வாய்ப்பாக, மக்களைப் பிளவுபடுத்த முன்வைக்கும் பண்பாட்டு அரசியலில் நாமும் சிக்கிக் கொள்ள நேரிடும்.

## பண்பாட்டு அரசியலும், மக்கள் கலை இலக்கியமும்

உலக வர்க்கப் போராட்ட வரலாற்றில் 95 வீத உழைக்கும் மக்கள் வரலாறுதோறும் அடிமைகளாக ஒடுக்கப்பட்டுவந்த நிலையை மாற்றி, முதன் முதலாக ருஷ்யாவில் நடந்த 1917 அக்டோபர் புரட்சியில் உழைக்கும் மக்கள் தமது ஆட்சியை அமைத்தனர். அவற்றில் மக்கள் கலை இலக்கியத்தின் பங்கும் மகத்தானதாகும். அப்புரட்சியின் பேரலைகள் உலகின் பல நாடுகளெங்கும் தமது அதிகாரங்களுக்கு ஏற்படுத்திய பெரும் சரிவுகளால் அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த ஏகாதிபத்திய நாடுகள், தமக்குள் ஒன்றுபட்டு பல்வேறு முனைகளிலும் போராடி, சோவியத் அரசை பண்பாட்டரசியலையும் பக்கத்துணையாகக் கொண்டே வீழ்த்தினர். அதன் பின் மீண்டும் வர்க்கப் போராட்டம் உலகில் எழாமல் தடுத்துவிடலாம் என்ற உணர்வுடன் முன்வைத்து ஊக்குவிக்கப்பட்டு வருவதே 'வரலாறு என்பது நாகரிகங்களுக்கு (பண்பாடுகளுக்கு) இடையோன மோதல்' என்பதாகும்.

21ம் நூற்றாண்டிலும் உலகெங்கும் தொடரும் அதிகார வர்க்கங்களின் முதலளித்துவ போலி ஜனநாயக ஆட்சிகளை, ஏகாதிபத்தியவாதிகள் தமக்குச் சார்பான புத்திஜீவிகளின் ஆசீர்வாதத்துடன், புனிதப் படுத்தி, இலத்திரனியல் ஊடக பலத்துடன் பாதுகாத்து வருகின்றனர். அவர்களது உலக மூலதனச் சுரண்டல் வடிவத்தை மக்களுக்கு மறைக்கும் போர்வையாக பண்பாட்டு மோதலை உலகெங்கும் ஊக்குவித்து வருகின்றனர். எமது நாட்டில் பௌத்த பேரினவாதமாகவும், இந்தியாவில் இராமராட்சியமாகவும் அது விரிவடைந்து வருகிறது. அத்துடன் மக்களின் விடுதலை வாழ்வுக்குப் பயன்பட வேண்டிய, நவீன இலத்திரனியல் தொழில் நுட்பத்தைத் தமதாக்கி மேம்படுத்தி, அணு ஆயதங்களை மட்டுமல்ல, செயற்கை நுண்ணறிவு ஆயுத பலங்களையும் ஊக்கி வளர்த்து உலகின் பலபாகங்களிலும் மக்களைக் கொன்று குவித்து வருகிறது. பண்பாட்டு அரசியலை முன்வைத்து இன்று 'காசா'வரை தொடர்ச்சியான ஒய்வற்ற யுத்தங்களை மத்திய கிழக்கிலும், உலகெங்கும் திணித்து வருகிறது. எத்தகைய மனிதாபிமானமும், ஈவிரக்கமும் இன்றி குழந்தைகள், பெண்கள் உட்பட சாதாரண மக்களைக் கொன்று குவித்து வருவதை நாளாந்தம் கண்டு உலகமக்கள் அதிர்ச்சி அடைகின்றனர். உலகின் மூன்று பெரும் மதப் பண்பாடுகளின் 'இரட்சகர்கள்' உருவாகி வளர்ந்து ஆன்மீகக் கருத்துக்களைப் பரப்பி மறைந்த மத்திய கிழக்கு மண்ணிலே, அதே மதபண்பாட்டு ஆடைகளின் மறைவில், உலக மூலதன அதிகாரப் போட்டியின் ஆக்கிரமிப்பு யுத்தங்களின் தொடர்ச்சிகளால் மக்கள் நரபலிகளுக்கு உள்ளாக்கப் பட்டு அழிக்கப்பட்டு வருகின்றனர்.

## நவகொலனித்துவமும் நுகர்வுப் பண்பாடும்

இலங்கையிலும் பௌத்த பேரினவாத மத, பண்பாட்டு அரசியலின் மறைவில் தான் மூலதனத்தின் அதிகாரம் அதே முதலாளித்துவ ஜனநாயகத்தின் பெயரால் பேரினவாத அரசியலை முன்னெடுத்து இனங்களை தொடர்ச்சியாக பிரித்து மோதவிட்டு முள்ளிவாய்க்கால்வரை கொண்டு சென்று அழித்தது. இவற்றில் இருந்து பாடங் கற்று இனங்களின் விடுதலையை முன்னெடுக்க முனைவோர் இந்த



வரலாற்று உண்மையின் சாரங்களைக் கணக்கில் எடுக்காமல் முன்செல்ல முடியாது. இன்றும் அதே ஏகாதிபத்திய நாடுகளின் ஐ.எம்.எஃவ். ஆசியுடன்தான் இந்தநாட்டின் அதிகார வர்க்கத்தினரின் ஆட்சி, அனைத்தின மக்களையும் பட்டினிக்கும், வறுமை நிலைக்கும் தள்ளியுள்ளது. எனவே 76 ஆண்டுகால முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு, இன்று நவகொலனித்துவத்துடன் கைகோர்த்துக் கொண்டு மக்களின் மேல் பல்வேறு ஒடுக்குமுறைகளை தொடர்ந்து திணிப்பதுடன். அந்நிய மூலதனங்களுக்கு நாட்டை அடகு வைத்ததுடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவற்றையும் சுயாதீனமாக தீர்ப்பதற்கு திராணியற்ற அமைப்பாக மக்கள் முன் அம்பலப்பட்டு நிற்கிறது.

இம் மண்ணை முன்னர் அடிமை கொண்டிருந்த பிரித்தானிய கொலனித்துவ வாதிகள் ஜனநாயகம் எனும் பெயரில் மக்களுக்கான ஆட்சி முறையை இங்கு விட்டுச் செல்லவில்லை. அவர்கள் விதைத்துச் சென்ற நச்சு விதைகளின் பலன்களையே பல்வேறு ஒடுக்கு முறைகளின் உருவில் இன்றும் நாம் அறுவடை செய்கிறோம். அவர்கள் விதைத்த இனவாத அரசியலையே ஜனநாயகத்தின் பெயரால் 76 ஆண்டுகாலமாக முன்னெடுத்து இனங்களைப் பிளவடைய வைத்து நவகொலனித்துவப் பொருளாதர அமைப்பு இம்மண்ணில் உறுதியாக வேரூன்ற இந்த நாட்டின் அதிகார வர்க்கங்கள் வழிசெய்துள்ளன. கெலனித்துவம் விதைத்த நச்சு விதைகள்தான் இன்று நவகொலனித்துவத்தை இம்மண்ணில் பாது காத்து நிற்கும் பெருமரங்களாக இன்று வளர்ந்துள்ளன. இம் மரங்களில் வந்து அமர்ந்துதான் ஏகாதிபத்தியக் கழுகுகளும், அயல்தேச வெளவால்களும் இத் தேசத்தின் நிலங்களையும், வளங்களையும் சூறையாட போட்டியிடுகின்றன. இவைகளின் இருப்பே இன மத ஒடுக்குதல்களுக்கும், தேசத்தின் அனைத்தின மக்களையும் வாட்டி வதைக்கும் இன்றைய பொருளாதார ஒடுக்குமுறைகளுக்கும் காரணமாக அமைகின்றன.

ஆனால், இந்த யதார்த்த நிலைமைகளை மக்கள் அறிந்து இவைகளுக்கு எதிராக ஒன்றுபட முடியாத வகையில் நவகொலனித்துவ பொருளாதார அமைப்பு முன்வைக்கும் நுகர்வுப் பண்பாடும், கட்டற்ற நுகர்வுக்கான பேட்டி உளப்பாங்கும் மக்கள் தமது வாழ்நிலை அவலங்களை அறியத் தடைசெய்கின்றன. 'வல்லது வாழும்' என்ற டார்வினின் விலங்கினக் கூர்ப்புக் கோட்பாட்டை, முதலாளித்துவ பொருள் உற்பத்தி முறைக்கு மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வுக்கும் உரியதாக நவகாலனித்துவ அமைப்பு முன்வைத்துள்ளது. இதனால் மக்கள் மத்தியில் சுயநலம். போட்டி மனப்பான்மை, அதீத தனிமனிதவாதம், தன்னகங்காரம், ஆதிக்க மனோ நிலை என்பவற்றை அது தோற்றுவிக்கின்றது. உழைக்கும் மக்களின் இயல்பான கூட்டு வாழ்வையும், சமத்துவ விருப்பையும், சமூக ஒருமைப்பாட்டு உணர்வையும் சிதைத்து, தனித்தனித் தீவுகளாக மனிதர்களை உருவாக்கி வருகிறது.

## மக்கள் இலக்கியமும் பின்நவீனத்துவமும்

நவகொலனித்துவத்துக்கு வேறு வகையில் உதவுவது போலவே பின்நவீனத்துவக் கருத்துக்கள் கல்வியாளர்களிடமும், கவிஞர்கள், எழுத்தாளர்களிடமும் பரப்பப்பட்டு வருகின்றன. ஆண்டாண்டுகாலமாக அறியாமை இருளில் அமிழ்த்தி வைத்துச் சுரண்டப்பட்ட மக்களுக்கு விடுதலை பெற்று புதிய ஜனநாயகத்தை – மக்களாட்சியை அமைப்பதற்கு அறிவியல் பண்பாட்டு விழிப்புணர்வு மிக மிக அவசியமாகிறது.

அந்த மக்களுக்கான அறிவியலை 'அறிவியலே அதிகாரம்', 'பகுத்தறிவே பயங்கரம்', 'தருக்கமே வன்முறை' என்று பின்நவீனத்துவ வாதிகள் கருத்துரைத்து மீண்டும் மக்களை அறியாமையில் அமிழ்த்த முயல்கின்றனர். மக்களை சாதாரண மக்களாகவும் அல்ல. சந்தையில் சாக்கடையில் இரைந்து பறக்கும் ஈக்களாக, சாமானியர்களாக கருதி, மாமனிதனைத் தேடிய பின்நவீனத்துவ தலைமகன் நீட்சே போல. மானுட சமத்துவத்தை, மேன்மையை வெறுக்கும் கருத்துக்களை இவர்கள் உதிர்க்கின்றனர்,

இதனால் இவர்கள் ஒடுக்கும் ஏகாதிபத்திய வாதிகள் பக்கம் நிற்கிறார்கள் என்பது வெளிப்படையாகிறது. இதனால்த்தான் என். ஜீ. ஒக்களின் பணத்தில் இவை பிரசாரப்படுத்தப் படுகின்றன. பல்வேறு வகைகளிலும் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்காக மக்கள் கலை



இலக்கியக் கோட்பாட்டை முன்கொண்டு செல்வது கலை இலக்கிப் பேரவையின் கொள்கையாக உள்ளது. இலக்கியத்தில் கோட்பாடென்றால் அதை தவறு என்கிறார்கள். கோட்பாட்டை முன்னெடுக்க அமைப்பை உருவாக்கினால் அது அதிகாரத்தின் மையம் என்கிறார்கள். உலக ஏகாதிபத்தியம் தமது கொள்கைகளை, கோட்பாடுகளை சினிமா முதல், சின்னத் திரைவரை, இலத்திரனியல் ஊடகங்கள் முதல் காகித இலக்கிய ஏடுகள் வரை பெரும் கோப்ரேற் கம்பெனிகளின் மூலதன பலத்துடன் மக்களிடம் நாளும் பொழுதும் திணித்துக் கொண்டிருக்கின்றன.

நுண் அதிகாரத்துக்கான அச்சமே இவர்கள் மக்களை அச்சுறுத்தும் அனைத்துக் கருத்தியல் களுக்கும் அடிப்படையாகிறது.

உழைக்கும் மக்களின் மேல் வரலாறு தோறும் செலுத்தப்பட்டு வந்த அதிகாரததின் கொடூரத்தை உணர்ந்தே, மக்கள் அதிகாரம் உறுதிப்படுத்தப்படும் வரை பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் (5 வீதத்தினரின் அதிகாரம் மீண்டும் மேலெழாமல் காப்பதற்கு) அவசியம் என ஒழிவு மறைவின்றி பகிரங்கமாக கார்ல்மாக்ஸ் குறிப்பிட்டார். அத்துடன் நின்றுவிடாமல் அந்த அரசும் (அதிகாரமும்) அவசியமற்று தானாக உதிர்ந்து விடும் என்பதையும் 'பூக்கோ'வுக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே குறிப்பிட்டதுடன், சமூகவிஞ்ஞான அடிப்படையில் அதிகாரத்தை முற்றாக ஒழிக்கும் மார்க்கமாக வெற்று வெளியை அல்ல, உழைக்கும் மக்களின் இயல்பான விடுதலை எழுச்சியையும், அதற்கான சுரண்டலற்ற பொருளாதார அமைப்பையும் மார்க்ஸ் முன்வைத்திருந்தார். இவைபற்றிய கட்டுரைகளை தேசிய கலை இலக்கியப் பேரவை நூல் வடிவிலும் தொகுத்து வெளியிட்டுள்ளது.

## நிறைவாக

தேசிய கலை இலக்கியப் பேரவை, கலை இலக்கியத்தில் 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற கொள்கையை கொண்டுள்ளது. எனவே இதுபோன்ற மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட கலை இலக்கியப் படைப்புக்களை படைக்கும் உரிமை அவர்களுக்கானது.

ஆனால், அடிப்படைச் சமூக மாற்றத்துக்கான, மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை உறுதியுடன் முன்னெடுக்க முனையும் எழுத்தாளர்கள், கலைஞர் கள் இவைபோன்ற கருத்துக்களையும், அதன் பாதிப்புக்களையும் தெளிவாக உணர்ந்து கொண்டு தமது படைப்பாக்கப் பணிகளை உறுதியாக முன் கொண்டு செல்லவேண்டும்.

இன்று நிலவுகின்ற ஆதிக்க சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு அமைப்பால் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்படும் மக்களின் பக்கம் கோட்பாட்டுத் தெளிவுடன் உறுதியாக நிற்பதுடன், ஏனைய கலைஞர்கள் எழுத்தாளர்கள், இலக்கிய அமைப்புக்களுடனும் ஐக்கியமுற்று, மக்கள் கலை இலக்கியத்தை மக்கள்முன் கொண்டு செல்லவேண்டும்.

அவற்றை மக்கள் படிப்பதற்கும், மக்களே படைப்பதற்கும் துணைசெய்ய வேண்டும். அதற்கேற்ற உள்ளடக்கப் பெறுமானத்தையும், அழகியல் பெறுமானத்தையும் வளர்த்துச் செல்வதாக அவை அமையவேண்டும்.

அதற்கு ஏற்றவகையில் எழுத்தாளர்கள், கலைஞர்கள் எமது சமூகத்தில் இன்றும் நிலவும் சாதி, இன, மத, பால், வர்க்க ஒடுக்குதல்கள் அனைத்துக்கும் எதிரானவர்களாக தம்மை நிலை நிறுத்திக் கொள்வதுடன் அவற்றை எதிர்த்து நிற்பதிலும் உறுதியாக முன்னிற்க வேண்டும்.

அடிப்படைச் சமூக மாற்றத்துக்கான மக்கள் கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நாம் கூட்டு வாழ்வுக்கும், கூட்டுச் செயற்பாடுகளுக்கும் முதலிடம் கொடுப்பதுடன், அடுத்தவர்களை நேசிப்பதுடன் நின்றுவிடாமல், அவர்களது உரிமைகளை மதித்துக் காப்பதில், அவர்களுடன் கைகோர்த்து நிற்க வேண்டும்,

'ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும்' என்ற உயர்ந்த பண்பாட்டை எமது மண்ணில் உருவாக்க, புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாட்டை மக்கள் கலை இலக்கியப் படைப்புக்கள் மூலம் 5வது அனைத்திலங்கை மாநாட்டின் பின் மேலும் சிறப்பாக முன்னெடுக்க இம் மாநாட்டில் நாம் அனைவரும் உறுதி கொள்வோம்.

# சாதியத்துக்கு எதிரான போராட்டத்தின் வர்க்கப் பரிமாணங்கள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1966 ஒக்டோபர் 21 எழுச்சியின் 57வது ஆண்டு நினைவாக 22.10.2023 அன்று யாழ்ப்பாணத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் நிகழ்த்திய நினைவுரையின் சுருக்கிய எழுத்துவடிவம்.

## தொடக்கக் குறிப்புகள்

தென்னாசியச் சமூகங்களின் சமூக அசைவியக்கத்தில் சாதி தவிர்க்கவியலாத பங்கை வகிக்கிறது. இது வெறுமனே ஒரு சமூகக் கட்டமைக்காக மட்டுமன்றி நிறுவனமயமாக்கப்பட்ட அரசியற் பொருளாதார அடக்குமுறையைத் தக்கவைப்பதற்கான நவீன வடிவமாக உருமாற்றம் கண்டுள்ளது. சாதியை முழுமையாகத் தென்னாசியச் சமூகங்களில் இருந்து ஏன் அகற்ற முடியாமல் உள்ளது என்பது இன்றுவரை முழுமையாக விளங்கிக் கொள்ளப்படாத ஒரு புதிர். சாதியின் வர்க்கப் பரிமாணங்களை சரிவரப் புரிந்து கொள்வதே சாதியத்தை சமூகங்களில் இருந்து வேரறுப்பதற்கான வழி என்பதை ஆய்வுகளும் நடைமுறை வரலாறும் தெளிவாகக் காட்டியுள்ளன. இந்தப் பின்புலத்தில் சாதியத்துக்கும் வர்க்கத்துக்குமிடையிலான உறவையும் முரணையும் இலங்கைத் தமிழ்ச் சூழலினை மையமாகக் கொண்டு ஆராய இந்தக் கட்டுரை முனைகிறது.

உலகளாவிய ரீதியில் அதிகரிக்கின்ற சமத்துவமின்மை இன்றைய மிகப்பாரிய அரசியல் சவாலாகும். கடந்த முப்பது ஆண்டுகளில் உள்ளோரும் இல்லாதோருக்கும் இடையிலான இடைவெளி தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. இந்த இடைவெளி அபிவிருத்தி அடைந்துவரும் வரும் நாடுகளில் இன்னும் மோசமானது. இது எவ்வாறு சாத்தியமானது? இந்த இடைவெளி ஏன் தொடந்தும் அதிகரிக்கிறது?

சமூகப் பாகுபாடு தென்னாசியச் சமூகங்களில் வறுமையின் வரையறைகளைக் குறிக்கிறது என்பது அதிகம் அறியப்படாத ஒன்று. கடந்த அரைநூற்றாண்டுகால வரலாறு என்பது கொண்டாடப்பட்ட பொருளாதார வளர்ச்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த வளர்ச்சியையும் மீறி சாதியரீதியாக மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள். வளர்ச்சி அனைவருக்கானதன்றி உயர்குடிகளுக்கானதாகவே இருந்தது. காலப்போக்கில் அது இடைநிலைச் சாதியினரை எட்டினாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இதை விளங்க இச்சமூகங்களில் நிலவும் வர்க்க உறவுகள் பற்றிய தெளிவானதும் ஆழமானதுமான பார்வை அவசியமாகிறது.

1980களில் இருந்து நவதாராளவாதத்தின் சக்திகள், தாராளவாத அரசியல் அர்ப்பணிப்புடன் கூடிய அதிகபட்ச தனிமனித நலன்களுக்கு அடித்தளமிட்டு, உலகம் முழுவதும் பரவி வருகின்றன. தடையற்ற சந்தை மற்றும் அரசு வழங்கும் தனியார்மயமாக்கலுக்கான இந்த முழுமையான அர்ப்பணிப்பு அதே காலகட்டத்தில் இலங்கையில் வேரூன்றத் தொடங்கியது. சர்வதேச வர்த்தகம் பெருகியது, பன்னாட்டு நிறுவனங்கள் இலங்கையின் வளங்களுக்குள் நுழைய வரிசையாக நின்றன. உலக சந்தையில் இலங்கையின் மலிவான தொழிலாளர்களைப் பயன்படுத்துவதற்கான சட்டரீதியான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. அதே நேரத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொழில்கள் மற்றும் துறைகள் தனியார்மயமாக்கப்பட்டன.



பொருளாதார தாராளமயமாக்கல் ஏழைகளுக்கும் நல்லது என்றும் நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பொசிவது போல இறுதியில் அதன் பலன்கள் பொருளாதாரக் குவியலின் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும் சென்று சேரும் என்பதும் தாராளவாதப் பொருளாதாரவாதிகளின் வாதமாகும். இதன் நவீன வடிவமே உலக வங்கியாலும் ஏனையவற்றாலும் ஊக்குவிக்கப்படும் 'உள்ளடக்கிய வளர்ச்சி' (Inclusive Growth). இது ஒடுக்குமுறையின் வடிவங்களை ஏற்று, அதனடிப்படையில் வளர்ச்சியை முன்மொழிகிறது.

இது உண்மையில் அனைவருக்கும் சந்தைகளில் பங்கு கொள்ள உதவும் மிகக் குறுகிய அர்த்தத்தில் கருதப்படுகிறது. இந்த வளர்ச்சியானது ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறதா என்பது பற்றிய மதிப்பீடற்ற ஒரு மாதிரியாகும். ஆனால் துரதிஸ்டவசமான இந்த மாதிரியையே இன்று சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை முன்மொழிகின்றன. தங்கள் "வறுமை ஒழிப்பு", "அசமத்துவத்தைக் களைதல்" ஆகியவற்றின் அடித்தளமாக இந்த மாதிரியைக் கொண்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள முதலாளித்துவ நவீனமாக்கல் அடையாள அடிப்படையிலான உறவுகளின் பழைய வடிவங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சாதி அடிப்படையிலான வேறுபாடுகள் மறையும் என்று எதிர்வு கூறப்பட்டது. ஆனால், பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும், தாழ்த்தப்பட்டோரின் நிலைமைகள் இந்தக் கவர்ச்சிகரமான எதிர்பார்ப்புகளைத் தவிடு பொடியாக்கியுள்ளன.

நவதாராளவாத முதலாளித்துவம், அதன் வளர்ச்சி விகிதங்களின் பலன்கள் அனைத்து குழுக்களுக்கும் துளிர்விடாமல், ஏற்கனவே இருக்கும் சமத்துவமற்ற சமூகப் பிளவுகளின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை மேலும் வேரூன்றியுள்ளது. சாதிய சமத்துவமின்மைகள் நாடு முழுவதும் உள்ள வர்க்க உறவுகள் மூலம் வடிவம் பெறும் வழிகளை இது காட்டுகிறது, அடையாள அடிப்படையிலான பாகுபாடு மற்றும் ஓரங்கட்டலின் பழைய வடிவங்களை சுரண்டல், ஒடுக்குதல் மற்றும் அடிபணியச் செய்வதற்கான புதிய வழிமுறைகளாக மாற்றுகிறது.

"வர்க்க உறவுகள்" என்பது, உற்பத்திச் சாதனங் களுடனான உறவுகளாலும், உழைப்பிலிருந்து உபரியைப் பெறுவதாலும், சமூகப் பெருக்கத்தாலும், மக்கள் ஒருவருக்கொருவர் உறவாடுவதைக் குறிக்கிறது. வர்க்க உறவுகள் இனம் அல்லது சாதி போன்ற சமூக ஒடுக்குமுறையின் மற்ற அச்சுகளிலிருந்து பிரிக்க முடியாதவை. இது சமகால விவசாய மாற்றம் மற்றும் முதலாளித்துவத்தின் பரவல் பற்றிய புரிதலுக்கு மையமானது. அதேபோல அரசியல் போராட்டங்களைப் பற்றி நாம் எப்படி சிந்திக்கிறோம் என்பதில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

## தத்துவார்த்தத் தளத்தில் சாதியும் வர்க்கமும்

சமூகத்தின் இருப்பு அதன் உற்பத்தியைச் சார்ந்தே இருக்கிறது. உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளுமே ஒரு சமூகத்தின் தன்மையைத் தீர்மானிக்கும் அடிப்படைகள். அதற்கும் மேலாக, உற்பத்தி முறைகளதும் உறவுகளதும் வரலாற்று விருத்தியின் போக்கிற் சமூக அமைப்பில் அவை ஏற்படுத்திய மாற்றங்களின் பாதிப்பு, உற்பத்தி முறைகளும் உறவுகளும் மாறியதன் பின்பும், நெடுங்காலத்திற்குத் தொடருகின்றது. இவை யாவும் மனித இனத்தின் அடையாளங்களைப் பல பரிமாணங் கொண்டனவாகவும் அவற்றின் சிக்கலான கூட்டுத் தொகுதிகளாகவும் மாற்றுகின்றன.

மிகவும் எளிதாகவே நாம் அடையாளங் காணக் கூடிய இனம், மொழி, பிரதேசம், மதம், பண்பாடு என்பனவற்றுடன் சாதியையும் சேர்த்துக் கொண்டால், இவற்றில் எதுவுமே நிலையானதோ நிரந்தரமானதோ அல்ல. சில அடையாளங்கள் இணைந்து ஒரு பொது அடையாளமாகின்றன. சில பிரிந்து தனித்தனி அடையாளங்களாகின்றன. சிலவற்றைப், பிற அடையாளங்களோ புதிய அடையாளங்களோ மேவி விடுகின்றன. எனினும், தொடர்ச்சியாக மாறி வருகிற மொழி, மதம், பண்பாடு போன்ற அடையாளங்களினூடு ஒரு வரலாற்று இழையையோ ஒரு பொதுச் சிந்தனை அடிப்படையையோ அல்லது கற்பனையான ஒரு பண்பையோ வைத்து அவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒரு நீண்ட வரலாற்றையும் மாறா இயல்பையும் நிரந்தரத் தன்மையும் வழங்குகிற போக்கையும் நாம் காண்கிறோம்.

ஒரு சமூகத்தில் ஆதிக்கத்திலிருக்கிற ஒரு சமூகப் பிரிவு, தனது நலன்களை முழுச் சமுதாயத்தினது அல்லது அதன் ஒரு பகுதிக்குரிய நலன்களாகக் காட்டி, அந்த நலன்களை முன்னெடுப்பதன் பேரிற், பிற சமூகங்கள் மீதான ஒடுக்கு முறையையும் ஆக்கிரமிப்பையும் நியாயப்படுத்துகிறது. இத்தகைய போக்கு வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு வடிவங்களில் இருந்தாலும் பொதுவான ஒரு பண்பை நாம் அடையாளங் காணலாம். ஒரு சமூகத்தின் உற்பத்தி முறையையும் உற்பத்தி உறவுகளையும் (அதாவது அதனுடைய இருப்பை முடிவு செய்கிற விடயங்களைச்) சார்ந்த முரண்பாடுகளின் முக்கியத்துவம்

இரண்டாம் பட்சமானதாகவும் சில சமயங்களிற் பேசக் கூடாததாகவும் மாற்றப்படுகிறது. குறிப்பாக தேசியவாதச் சூழல்கள் இவ்வாறான தன்மையை உருவாக்குகின்றன. இந்நிலைமைகளில் வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் பின்தள்ளப்படுவது தற்செயலானதல்ல.

தமிழ்த்தேசியவாதம் இனவிடுதலையை முன்தள்ளி சாதியம் என்ற அகமுரண்பாடுகளைப் பேசுவதைத் தவிர்த்தது. அதேபோல இன அடையாளம் முன்தள்ளப்பட்ட நிலையில் வர்க்கம் பற்றிய பார்வைகள் பின்தள்ளப்பட்டன. தமிழ் இன அடையாளம் அதன் தலைமையில் இருந்த ஆதிக்கச் சக்திகளான யாழ்ப்பாணச் சைவ வேளாளச் சாதியைச் சார்ந்த ஒரு மேட்டுக் குடிச் சிறுபான்மையின் நலன்களையொட்டி உருவானது. அந்த நலனை வலியுறுத்துவதற்குத் தமிழ்ச் சமூகத்திலிருந்து சவால் எழாத நிலையில், அச் சிறுபான்மை, தமிழ் அடையாளம் ஒன்றை வலியுறுத்துவதையும் வளர்த்தெடுப்பதையும் விடுத்து, யாழ்ப்பாணச் சைவ வேளாள ஆதிக்கத்தையே முன்னிறுத்தி வந்தது. 1948ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தோன்றிய போது தான் தமிழ்ப் பேசும் இனம் என்ற அடையாளம் முன்வைக்கப்பட்டது. ஆனால் அதற்குரிய சமூகச் சிந்தனையோ அரசியல்–சமூக அடிப்படையிலான வரலாற்று வழிப்பட்ட விருத்தியோ இல்லாததால், அது தமிழ்ப் பேசும் மக்களை ஒற்றுமைப் படுத்தத் தவறியதுடன் வீண் பகைமைகட்கும் வழி வகுத்தது. ஒரு அதிகார வர்க்கத்தின் குறுகியகால நலன்களே சமூக அடையாளப் படுத்தலை வழிநடத்தின.

இதேபோல சிங்களப் பேரினவாதம் தொடக் கத்திலிருந்தே சிங்கள பௌத்தத்தைத் தனது அடிப்படையாக்கிக் கொண்டது. தமது சுய முன் னேற்றத்திற்காகப் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ அடையாளத்தை ஏற்ற மேட்டுக்குடிகள், அரசியல் லாபத்திற்காகப் புத்த மதத்திற்கு மீளத் தயங்கவில்லை. சிங்கள பௌத்த அடையாளத்தை விடச் சாதி அடையாளம் முக்கியமாயிருந்த ஒரு காலமும் இருந்தது. மேட்டுக்குடி அரசியலில், சர்வசன வாக்குரிமை இல்லாத சூழலில், ஆதிக்க வர்க்கங்களிடையே சாதி வேறுபாடு முக்கியமானதாக இருந்தது. ஆனால் நிலவுடைமை சார்ந்த கொவிகம சாதியின் சமூக ஆதிக்கம் குறையத் தொடங்கிய சூழலில், நிலவுடைமை-முதலாளிய வர்க்கப் பிரிவினரிடையே சமரசம் ஏற்படுகிறது. மத அடையாளம் குறுகிய காலத்திற்கு அடக்கி வாசிக்கப்பட்டு மொழி அடையாளம் முதன்மைப் படுத்தப்பட்டாலும், இப்போது சிங்கள பௌத்த ஆதிக்கப் போக்கு வலுவாக உள்ளது. எனினும் தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவப் பெருமுதலாளிகட்கும் சிங்கள பௌத்தப் பெருமுதலாளிகட்கும் உள்ள உறவு சுமுகமாகவே உள்ளது. பௌத்த அடையாளத்தை வற்புறுத்துவதில் கருத்து வேறுபாடுகளுடன், சிங்களத் தேசிய இன அடையாளம் வலுப்பட்டு அது சிங்கள பௌத்த பேரினவாதமாக உருவெடுத்துள்ளது.

இதை விளங்கிக் கொள்ள இலங்கையின் நிலவுடைமை உற்பத்தி உறவுகளை விளங்கிக் கொள்வது முக்கியமானது. கொலனியத்தின் வருகை இலங்கையில் நிலப்பிரபு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கு நெருக்கடியைக் கொடுத்தபோதும் அடுத்தடுத்து வந்த ஒவ்வொரு கொலனி ஆட்சியும் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசங்களில் ஈடுபட்டது. இலங்கையில் நிலவுடைமை முறை இந்தியாவிற் பரவலாக அறியப்பட்ட முறையினின்றும் ஐரோப்பிய நிலவுடைமை முறையினின்றும் பலவகைகளிலும் வேறுபட்டது. தென்னிலங்கையில் நிலப்பிரபு–பண்ணையடிமை என்ற அடிப்படையிலான உற்பத்தி உறவும் பெரும் நிலவுடைமையாளர்கள், குத்தகைக்காரர்கள், கூலி விவசாயிகள் என்ற அடிப்படைகளிலான உற்பத்தி உறவுகளும் இலங்கையில் இருந்து வந்தன. வணிக முதலாளியத்தின் வளர்ச்சியை ஒட்டி விவசாய நிலங்களைத் தமதாக்கிக் கொண்ட நிலவுடைமைக்காரர்களும் உருவாகினர். தென்னிலங்கையிற் போலப் பெரும் விவசாய நிலங்களைக் கொண்ட நிலவுடைமையாளர்கள் யாழ் குடாநாட்டில் இல்லாவிடினும், அங்கு சாதி அடிப்படையிலான உற்பத்தி உறவுகள் விவசாயத்தில் ஆதிக்கஞ் செலுத்தின. இலங்கையெங்கும் விவசாய உற்பத்தி உறவுகளில் சாதிய அடிப்படையிலான உழைப்புச் சுரண்டல் அடிப்படையானதாக இருந்தது. நிலமின்மை என்பது அங்கு வறுமைக்குக் காரணமான ஒரு பிரச்சினையாயும் பெரும் நிலவுடைமையாளர்களுக்கு மிரட்டலாயும் அமையக்கூடிய ஒரு சூழலில், அப் பிரச்சினைக்கான தீர்வாக குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இம் முயற்சிகள், சமகாலத்தில், வர்க்க நலன்களையும் பேரினவாத நோக்கங்களையும் கொண்டிருந்தமையை மறுக்க இயலாது. எவ்வாறாயினும், பெரும் நிலவுடமையாளர்கள், குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், சிறு காணிச் சொந்தக்காரர்கள் எனும் வர்க்கங்களே தென்னிலங்கையிற் பொதுவாகக் காணப்பட்ட விவசாய வர்க்கங்களாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதி அடிப்படையிலான பிரபுத்துவ உற்பத்தி உறவுகளும் உழைப்பின் பங்கீடும் இருந்து வந்தன. அதுவும் நவீனமயமாதலுடன் தேய்வடைந்தது. 1966இல் தொடங்கிய சாதியத்திற்கு எதிரான போராட்டங்கள் அதை கிட்டத்தட்ட முடிவுக்குக் கொண்டு வந்தன. ஆனால் சாதியம் வேறு வடிவங்களில் தொடர்கிறது. இன்று கொலனியம் நவகொலனியமாகத்

தன்னை முற்றாக மீள வடிவமைத்துள்ளது. பழைய சமுதாய அமைப்பின் பொருளாதாரக் கட்டுமானம் முற்றாகத் தகர்ந்த பின்பும் அந்த அமைப்பின் அரச அதிகார முறைமை மாற்றியமைக்கப்பட்ட பின்பும் பழைய சமுதாயத்தின் கருத்தியலும் சிந்தனை முறையும் மரபுகள், சடங்குகள், மதம், மொழி என்பவற்றினூடு பண்பாட்டுத் தளத்தில், சமூக உறவுகளிற் தொடர்கின்றன.

இது உணர்த்துகின்ற அடிப்படையான செய்தி யாதெனில், பிரபுத்துவச் சிந்தனை எளிதில் உதறி எறியக் கூடியதல்ல. அதை இல்லாமலாக்க முதலாளிய மாற்றத்தை விட வலுவான அடிப்படை மாற்றம் தேவைப்படுகிறது. அந்த அடிப்படை மாற்றத்தை சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் செய்யத் தவறின. வர்க்கம் பற்றிய விழிப்பின்மையும் அரசியல் நீக்கம்பெற்ற சாதிய அரசியலும் இந்த அடிப்படை மாற்றத்திற்கு தடையாயின. 1970களில் வீறுகொண்ட இனவிடுதலைப் போராட்டம் இந்த அடிப்படை மாற்றத்தை சாத்தியமற்றதாக்கியது. மூன்று தசாப்தங்கள் நீடித்த விடுதலைப் போராட்டமும் கொடிய போரும் சாதியை மறைப்புச் செய்தன, அடிப்படை மாற்றங்கள் நோக்கிய மாற்றங்களைத் தடுத்தன.

கொடிய போரின் முடிவில் இன்று வட புலத்தில் மீள்எழுச்சி பெற்றுள்ள சாதியத் தின் தூண்களாகப் புலம்பெயர் சமூகங்களும், மதவாதச் சக்திகளும், குறுந்தேசியவாதமும் திகழ்கின்றன. புலம்பெயர்ந்த ஆசிய சமூகங்கள், பல தேசிய இனத்தவர்கள், தலைமுறை கடந்தும் தமது நிலவுடைமைச் சிந்தனைகளில் இருந்து விடுபடவில்லை. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ்ச் சமூகத்தோரிடையே சாதியம், பழமைவாதம், சடங்கு சம்பிரதாயம் பேணல் என்பன இலங்கையில் தமிழரிட் உள்ளதை விட வலுவாக உள்ளது. அவர்களது சமுதாய இருப்பானது நிலவுடைமைச் சமுதாய இருப்பல்ல ஆனாலும், பழமைசார்ந்த நிலவுடைமைக் கருத்தியல் நீடிக்கின்றன.

போருக்குப் பின்னான ஈழத்தமிழர் வாழ்வியலில் மதத்தின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக போரின் வடுக்கள் ஒருபுறம் சைவப் பராம்பரியம் என்ற தொன்மையில் தொக்கி நிற்கும் வெற்றுப் பெருமைகள் மறுபுறம் என மதம் வாழ்வியலின் முக்கிய பகுதியானது. இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியும், அதன் அகண்ட பாரதத் கனவும் இந்து இராஜ்ஜியத்தினை உருவாக்குவதற்கான முனைப்பும் தவிர்க்கவியலாமல் வடபுலத்தே தனது கொடுங்கரங்களை விரித்தன. இது மதத்தின் பேரால் சாதிய வேறுபாடுகள் மேலும் கூர்மையடைதலுக்கு வழிசெய்துள்ளது.

குறுகிய தமிழ்த் தேசியவாதம் தன்னை நிலை நிறுத்துவதற்காகப் பல்வேறு தந்திரோபாங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது. இன, மொழி உணர்வுகளை வெறித்தனமான உணர்ச்சிகளாக விருத்தி செய்வது அவற்றுள் அடிப்படையான ஒரு உபாயமாக அமைந்தது எனலாம். இன்னொன்று தனக்கும் தன்னால் எதிரியாகக் கொள்ளப்படும் சமூகத் திற்குமிடையிலான வேறுபாடுகளை மிகைப்படுத்துவதுடன் பொதுவான பண்புகளைக் குறைத்துக் கூறுவது அல்லது மறுப்பதாகும். இது நம் தமிழ்த் தேசியவாதத்தின் நடத்தைக் கோளாறு மட்டுமல்ல. ஒவ்வொரு குறுகிய தேசியவாதத்தின் உள்ளும் இவ்வாறான போக்குக்களை நாம் காணலாம். இப் போக்குக்கள் மக்களைத் தனித் தனிச் சமூகங்களாகப் பிரிப்பதுடன் பகைமையை மூட்டிவிடுகிற காரியங்களாகவும் விருத்தி பெறுகின்றன. சமூகங்களிடையே நட்புணர்வு போன்றதே பகையுணர்வும். ஒன்றின் நட்புணர்வு மற்றதன் நட்புணர்வால் ஊட்டம் பெறுவது போல, ஒன்றின் பகையுணர்வு மற்றதன் பகையுணர்வுக்கு ஊட்டமளிக்கிறது. அதன் விளைவாக ஒன்றுபடக் கூடிய வாய்ப்பை அதிகளவிற் கொண்ட சமூ கங்கள் பிரிந்தும் பிளவுபட்டும் நிற்கின்றன. ஈற்றில் நன்மையடைவோர் எச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் அல்லர். குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் தவறான அணுகுமுறை தமிழரைப் பிற சமூகத்தினரிடமிருந்து தனிமைப் படுத்த உதவியுள்ளது. அதேவேளை அக முரண்பாடுகளைக் கையாளமல் அகமுரண்பாடுகள் கூர்மையடைவதற்கு வழிசெய்துள்ளது. இது குறுந்தேசியவாத்தின் வர்க்கப் பார்வையைத் தெளிவுறக் காட்டுகிறது.

வடபுலத்தில் சாதியம் குறித்து உரையாடு கின்ற போது, தலித்தியம் பற்றிப் பேசாமல் நகர்ந்து விட முடியதாபடி தென்னிந்தியாவின் தலித்திய அரசியலின் தாக்கம் குறிப்பிடத்தக்களவு இலங்கையின் சாதியத்துக்கெதிரான போராட்டங்களில் செல்வாக்குச் செலுத்துகிறது. தமிழகத்தில் தலித்தியம் என்ற பேரில் முன்னெடுக்கப்பட்ட அரசியல், சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டத் தவறிவிட்டது. அது மட்டுமல்லாது, தலித்தியம், ஒடுக்கப்பட்ட மக்களின் நடுவே சாதி அடிப்படையிலான தனித்தனிக் கட்சி களை உருவாக்க உதவியதேயொழியச் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான பொதுவான போராட்ட அணியை உருவாக்கத் தவறிவிட்டது. அத்துடன், இன்றைய தலித்திய அரசியல், தலித்துக்களினிடையிலிருந்து உருவான புதிய மேட்டுக்குடிகளின் வர்க்க நலன்களைப் பேணத், தலித்துக்களை வாக்கு வங்கிகளாகப் பயன்படுத்துகிற ஒரு போக்கையும் கொண்டுள்ளது. பாராளுமன்றத்

தேர்தல் அரசியல், இந்துத்துவ மேட்டுக்குடிகளுடான வர்க்க சமரசத்திற்கும் வழி செய்துள்ளதைக் கடந்த இருபதாண்டுகளிற் காண முடிந்தது. தொடரான பல போராட்டங்களின் மூலம் தலித்துக்களின் சமூக உணர்வு நிலை வளர்ந்திருந்தாலும் சாதிய வர்க்கச் சுரண்டற் சமூக அமைப்பைத் தகர்க்கிற நோக்கில் அதை நெறிப்படுத்த இயலாத விதமாகவே தலித்தியச் சிந்தனை பயன்பட்டுள்ளது.

தலித்தியம் பற்றிய உரையாடல்கள் மூன்று முக்கியமான விடயங்களைக் கவனமாகத் தவிர்த்தன. முதலாவது, வர்க்கமும் வர்க்கப் போராட்டம் பற்றிக் கவனம் கொள்ளவில்லை. இரண்டாவது, தேசிய இனப்பிரச்சினை குறித்த அக்கறை மிகக் குறைவானதாக, பல தளங்களில் இது புறக்கணிக்கத்தக்கதாக இருந்தது. மூன்றாவது ஏகாதிபத்தியம் பற்றிய விமர்சனபூர்வமான அணுகுமுறை இருக்கவில்லை. மாறாக தாராளவாதிகளினதும் தலித்தியவாதிகளின் நிலைப்பாடு பெருமளவு ஒத்ததாக இருந்தது. தமிழ்த் தேசிய அரசியலாயினும் தலித்திய அரசியலாயினும் தனது அடையாளப்படுத்தலுக்குப் புறம்பான அடையாளங்களையும் பொதுமைப்பட்ட அடையாளப்படுத்தல்களையும் மறுத்ததன் மூலம், தன்னைப் பலவீனப்படுத்தியதே ஒழியப் பலப்படுத்தவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம் இவை இரண்டும் வர்க்கப் பார்வையை மறுத்ததே என்பதை நினைவிலிருத்திக் கொள்வது முக்கியமானது.

## வடபுலத்தில் சாதியத்துக்கெதிரான குரல்கள்

சாதியத்திற்கு எதிரான குரல்கள் வடபுலத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே வெளிப்படத் தொடங்கின. தனிமனிதர்களாகவும் சிறுசிறு குழுக்களாகவும் சாதியத்துக்கெதிரான செயற்பாடுகள் நடைபெற்றுள்ள. அவை விரிவாக ஆவணப்படுத்தப்படவில்லை என்பது துயரமே. சாதியம் மிகவும் இறுக்கமாகவும் செல்வாக்குடனும் இருந்த காலப்பகுதியில் அதற்கெதிரான குரல்கள் மெச்சத்தக்கவை.

1920களில் தொடங்கி 1930களில் முனைப்புடன் செயற்பட்ட இலங்கை வாலிபர் காங்கிரஸ் சாதியத்திற்கெதிரான முக்கியமான பங்களிப்பை வழங்கியது. சமூக நீதிக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்த வாலிபர் காங்கிரஸ் இலங்கையின் வடபுலத்தில் முற்போக்கான ஒரு பாத்திரத்தை வகித்தது. அனைவருக்கும் கல்வியிலும் சமூகத்திலும் சமவுரிமை என்பது அதன் முக்கிய போராட்டங்களில் ஒன்றாக இருந்தது. இதனால் விரக்தியடைந்த உயர்சாதியினர் இது கிறீஸ்தவ சதி எனக் குற்றஞ் சாட்டினர். வாலிபர் காங்கிரஸின் தலைமைப் பதவியில் இருந்தோர் கிறீஸ்தவர்களாக இருந்தமை இதற்கொரு நல்ல சாட்டாகியது. 1930இல் இதன் தலைவராக வைச அறிஞராக அறியப்பட்ட விக்டோறியா கல்லூரி அதிபர் எஸ். சிவபாதசுந்தரம் தலைமையேற்றார். அவர் மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் பாடசாலைகளில் சரியாசனத்தை நிறுவுவதற்கு போராடி அதில் வெற்றியும் பெற்றார். சரியாசன முறையை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்த பின்னரும் யாழ்ச்சமூகத்தில் அதை நடைமுறைப்படுத்துவதில் தடைகள் இருந்தன. இதில் ஆதிக்க சாதியினரின் பக்கம் பொன்னம்பலம் இராமநாதன் இருந்தார். 1930களின் இறுதியில் வாலிபர் காங்கிரஸ் தனது முடிவை எட்டியது. அதற்கான காரணங்கள் ஆராயத் தகுந்தன. சாதீரீதியாக இறுக்கமடைந்த உயர் சைவ வேளாளரின் ஆதிக்கத்தை தெளிவான வர்க்கப் பார்வையின்றி ஒழித்திட முடியாது என்பதை இது உணர்த்தியது.

> போருக்குப் பின்னான ஈழத்தமிழர் வாழ்வியலில் மதத்தின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக போரின் வடுக்கள் ஒருபுறம் சைவப் பராம்பரியம் என்ற தொன்மையில் தொக்கி நிற்கும் வெற்றுப் பெருமைகள் மறுபுறம் என மதம் வாழ்வியலின் முக்கிய பகுதியானது. இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியும், அதன் அகண்ட பாரதத் கனவும் இந்து இராஜ்ஜியத்தினை உருவாக்குவதற்கான முனைப்பும் தவிர்க்கவியலாமல் வடபுலத்தே தனது கொடுங்கரங்களை விரித்தன. இது மதத்தின் பேரால் சாதிய வேறுபாடுகள் மேலும் கூர்மையடைதலுக்கு வழிசெய்துள்ளது.

1940களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக சிறுபான்மைத் தமிழர் மகாசபை கடும் முயற்சிகளையும் இயக்கங்களையும் முன்னெடுத்து வந்தது. யாழ்நகரத் தேனீர்க் கடைகளிலும் நல்லூர்க் கந்தசாமி கோவில், வண்ணை சிவன் கோவில் போன்றவற்றில் சமத்துவம் பெறப்பட்டமையில் மகாசபையின் பங்களிப்பு முக்கியமானது. இக்காலப்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு மகாசபையின் செயற்பாடுகளுக்கு பலமாக இருந்தது.

இந்த வரலாற்று பின்புலத்திலேயே 1966 ஒக்டோபர் எழுச்சியை நோக்க வேண்டும். அரைநூற்றாண்டு காலமாக சாதியத்திற்கு எதிரான போக்குகளும் போராட்டங்களும் வளர்ச்சியடைந்து வந்த சூழலில் அதை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது ஒக்டோபர் எழுச்சியும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமுமே.

ஒக்டோபர் 21 எழுச்சியானது தமிழ் மக்களிடையே எப்போதும் மூன்றில் ஒரு பங்கினராக வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த சாதியத் தீண்டாமை கொடுமைகளுக்கு எதிரான புரட்சிகர எழுச்சியாக அமைந்தது. அவ் வெழுச்சியைத் தொடர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் கூட்டங்கள் இடம்பெற்றன. சாதியத்திற்கெதிரான மிகப்பெரிய போராட்டத்தை, சமூக மாற்றத்தை நோக்கித் தள்ளிய புதிய உத்வேகத்தை இந்த எழுச்சி வழங்கியது. இந்த நெடும் பயணத்தில் முன்னணியில் இருந்த தோழர்களும் கம்யூனிஸ்ட் கட்சியும் சாதியத் தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தையும் போராட்டத்தையும் வர்க்கப் போராட்ட கண்ணோட்டத்தில் அணுகியதே ஒழியக், குறுகிய சாதியவாதக் கண்ணோட்டத்தில் நோக்கவில்லை. அதன் வெற்றியையும் நிலைப்பையும் உறுதிப்படுத்தியது இந்த வர்க்கக் கண்ணோட்டமே.

## கடந்த அரைநூற்றாண்டு: ஒரு மீள்பார்வை

ஒக்டோபர் எழுச்சி நிகழ்ந்து அரைநூற்றாண்டுக்கு மேலாகிறது. இந்தக் காலப்பகுதியில் இலங்கையின் வடபுலத்தில் சாதியத்தின் நிலை எவ்வாறாக இருக்கிறது என்ற வினாவைப் பரிசீலிப்பது பயனுள்ளது. அறுபதுகளின் வீரம்மிக்க போராட்டங்கள்

1979ம் ஆண்டு நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மூன்றாவது மாநாட்டு அறிக்கை இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டியது:

“தமிழர்களிடயே தமிழர்களாக ஒடுக்கப்பட்ட மக்களை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக “பஞ்சமர்” என்று அடைமொழியிட்டு இழிவுபடுத்திச் சொல்லொணாக் கொடுமைகள் செய்தபோதும் எம்மை நாமே பிரித்துக்கொண்டு எமக்கான தனித்த போராட்டங்களைச் செய்ய இன்றும் நாம் விரும்பவில்லை. பல்லாயிரக் கணக்கான அனுபவங்களுக்குப் பின்னால் நாம் எடுத்துக்கொண்ட கொள்கையை ஏற்று யார் ஒத்தாசை தரினும் அவற்றை ஏற்றுக்கொள்ள என்றும் தயாராக இருக்கின்றோம். மன உறுதிப்பாட்டுடனும் நல்லெண்ணத்துடனும் ஒத்தாசை தருவதற்குப் பதிலாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாலும் சாதி வெறியர்களுக்குத் தலையும் காட்டும் விலாங்கு மீன் செயல்கொண்ட எந்த அரசியல் இயக்கக்காரர்களையோ தனி மனிதர்களையோ நாம் அங்கீகரிக்கமாட்டோம்; இனங்கண்டு எதிர்த்தே தீருவோம்.

சாதி அமைப்பின் அடிப்படையே நிலம்தான்! இந்த நிலங்களின் சொந்தக் காரர்கள் அதை வைத்தே தங்களின் சாதி அடக்குமுறைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். அது மட்டும் போதாதென்று சகல பகுதிகளிலும் பரந்து கிடக்கும் தரிசு நிலங்களையும் முடிக்குரிய காணிகளையும் நிலமில்லாத மக்கள் பெற முடியாத அளவுக்குத் தங்கள் அதிகார உரிமைகளை உபயோகித்தும், சாணக்கியங்களைக் கையாண்டும் தடுத்து வருகின்றனர். இந்த மக்களுக்கு ஒத்தாசை புரிய எவர் வரினும் எந்த இயக்கங்கள் வரினும், அவரோ அன்றி அந்த இயக்கமோ நிலவுடமைக்கு எதிராகச் செயற்பட வேண்டும். இதை மறுக்கும் எவரையும் எமது மக்கள் நம்பப்போவதில்லை. எங்கிருந்து ஒரு கெடுதி தோற்றுவிக்கப்படுகிறதோ அங்கிருந்துதான் அதன் அழிவு தொடங்கவேண்டும்.”

இவ்வாறு கடந்த 13 ஆண்டுகால அனுபங்களை சுருக்கமாக விபரித்த அவ்வறிக்கை எதிர்காலத்திற்கான சவால்களாக 5 விடயங்களைத் தீர்க்கமாக எதிர்வு கூறியது.

சாதி முறை புதிய உருவில் நவீனப்படுத்தப் படுகின்றது.

வென்றெடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பதற் கான முயற்சிகள் எடுக்கப் வடுகின்றன,

பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம் வரை பாமர மக்களின் புலன் களுக்கு எட்டாத விதத்தில் மிகவும் நுணுக்கமான முறையில் சாதிமுறை அமுல் நடத்தப்படுகின்றது.

விளை நிலங்கள் பறிக்கப்படுகின்றன, குடியிருப்பு நிலங்கள் எடுக்கப்படுகின்றன. தவறினால் வீடுகள் எரிக்கப்படுகின்றன.

நாட்டுப் பிரிவினையை நோக்கி ஒடுக்கப் பட்ட மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக, “தனிராச்சியம் வந்தால் சாதிநோய் வேரோடு சாய்ந்து விடும்” என்ற போதனை மேற் கொள்ளப்படுகின்றது,

இந்தக் கணிப்பு இன்றுவரை பொருந்தி வருகின்ற ஒன்றாக இருக்கின்றது. சாதி ஒடுக்குமுறையின் தன்மைகள் வெகுவாக மாறிவிட்டன. இதில் பெருவாரியான மாற்றங்கள் போராடிப் பெறப்பட்டவை. பொருளாதார மாற்றங்களும் இதற்குப் பங்களித்துள்ளன. உடல் உழைப்பின் தேவை உணரப்பட்ட நிலையில் கிராமங்களில் இருந்து நகர்களுக்கு இடம்பெயரல் நிகழ்ந்தது. இது சமூக ஒடுக்குமுறையின் தன்மையை மாற்றுவதில் பங்களித்தது.

தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் இருந்து நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்த தாழ்த்தப்பட்ட சாதியினர், சமூக மேல்நிலையாக்கம் அடைந்த நிலையில் அவர்கள் தங்களை இடைநிலைச் சாதிகளாக அடையாளப்படுத்திக் கொண்டனர். இதற்கு நல்ல உதாரணம், தமிழ்நாட்டில் மேநிலையாக்கம் அடைந்த நாடார் சமூகத்தினர் தங்களைத் தலித்துகளாக அடையாளங்காண விரும்புவதில்லை. அவர்கள் வணிகத்துக்குள் நுழைந்ததால் பொருளாதார ரீதியாக மேல்நிலையாக்கம் அடைய முடிந்தது.

இங்கு ஒடுக்கப்பட்ட மக்களின் தொழில்கள் அவர்கள் விரும்பித் தெரிந்த தொழில்களல்ல. இது அவர்கள் மீது திணிக்கப்பட்ட தொழில்களாகவே இருக்கின்றது. பெரும்பான்மையோருக்கு இத்தொழில்களில் இருந்து வெளியேறுவதே நோக்காக இருக்கின்றதே தவிர போராடி தனது அடையாளங் குறித்துப் பெருமை கொள்ளத் தயாராக இல்லை. அதற்கான சமூகக் காரணிகள் வெளிப்படையானவை.

இப்போது சாதிக்குள்ளேயே வர்க்க வேறுபாடு மிகவும் முக்கியமான பிரிவினையாகத் தோற்றம் பெற்றுள்ளது. மேலோங்கிக் கரையார் தாங்கள் ஏனைய மீன்பிடி சமூகத்தினரை விட மேலானவர்களாகக் கருதிக் கொள்வது நல்லதொரு உதாரணம். இவர்களும் ஒருகாலத்தில் மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் தான். ஆனால் காலப்போக்கில் அவர்களது பொருளாதார வலிமையால் அவர்களால் படகுகளை வாங்கியும் உழைப்பைச் சுரண்டியும் முதலாளியாக மாற முடிந்தது. எனவே ஒரே சாதிக்குள்ளேயே வர்க்க வேறுபாடுகள் முளைவிட்டன.

பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சாதியினர் தங்கள் சாதிய அடையாளத்திலிருந்து தங்களை விடுவிப்பதை நோக்காகக் கொண்டுள்ளார்களே தவிர தங்கள் முழுமையான சமூகத்தையும் ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பது பெரும்பாலும் நோக்காக இருப்பதில்லை. மேநிலையாக்கம் அடைந்தவர்கள் தங்கள் சாதிய அடையாளத்தை மறைப்பதும் புதிய சாதிய அடையாளத்தை ஏற்பதும் நடைபெறுகிறது. உதாரணமாக மலையகச் சூழலில் கல்வி கற்று பல்கலைக்கழகங்களிலும் உயர் பதவிகளிலும் இருப்போர் தங்கள் தந்தை கவ்வாத்து வெட்டினார் என்றோ தாய் கொழுந்து பறித்தார் என்றோ சொல்வதில்லை. இது இரண்டு விடயங்களை தெளிவாகக் காட்டுகிறது. முதலாவது, ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வெளியேறுவோர் தனிமனித முன்னேற்றங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை தங்களது சமூக முன்னேற்றத்திற்குக் கொடுப்பது குறைவு. இரண்டாவது ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து பொருளாதார ரீதியாக

> "...சகல பகுதிகளிலும் பரந்து கிடக்கும் தரிசு நிலங்களையும் முடிக்குரிய காணிகளையும் நிலமில்லாத மக்கள் பெற முடியாத அளவுக்குத் தங்கள் அதிகார உரிமைகளை உபயோகித்தும், சாணக்கியங்களைக் கையாண்டும் தடுத்து வருகின்றனர். இந்த மக்களுக்கு ஒத்தாசை புரிய எவர் வரினும் எந்த இயக்கங்கள் வரினும், அவரோ அன்றி அந்த இயக்கமோ நிலவுடமைக்கு எதிராகச் செயற்பட வேண்டும். இதை மறுக்கும் எவரையும் எமது மக்கள் நம்பப்போவதில்லை. எங்கிருந்து ஒரு கெடுதி தோற்றுவிக்கப்படுகிறதோ அங்கிருந்துதான் அதன் அழிவு தொடங்கவேண்டும்."

முன்னிலையடைந்தோரின் வர்க்கப் பார்வை சமூக விடுதலைக்கு மிகப்பெரிய தடையாகவுள்ளது.

இன்று கவனிக்க வேண்டிய விடயம், சாதிய ஒடுக்குமுறைக்கெதிராகக் குரல் கொடுப்போர் சாதி முறைக்கெதிராகப் பேசுகிறார்களா அல்லது தங்களுடைய தனிப்பட்ட மேம்பாடு பற்றிப் பேசுகிறார்களா என்ற வினா தவிர்க்கவியலாதது. சில விதிவிலக்குகள் உண்டு. 1968ல் தோற்றம் பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திற்கு தலைமையேற்ற எஸ்.ரி.என். நாகரத்தினம் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் முழுமையான விடுதலைக்கு ஆதரவு தந்தவராவார்.

அதேவேளை சாதிகளுக்கு இடையிலான போட்டி சாதியத்திற்கெதிரான போராட்டத்திற்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. இதனால் அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளும் ஒன்றிணைந்து போராடி உரிமைகளை வெல்வதும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதன் மூலம் பொருளாதார மேம்பாட்டைச் சாத்தியமாக்குவதும் இயலாமல் உள்ளது. இதை சாத்தியமாக்கி முன்னேறிய ஒரு சமூகமாக தமிழ்நாட்டின் நாடார் சமூகம் திகழ்கிறது.

நிரந்தரமான தலித் அடையாளம் என்பது யாரும் விரும்பும் ஒரு அடையாளமல்ல. அது ஒரு போராட்டத்துக்கான அடையாளமேயொழிய நிரந்த அடையாளமல்ல. அதேவேளை சாதிய அடையாளத்தைத் சுட்டி மனிதரைக் கீழ்நிலைப் படுத்துவது இன்றும் இருக்கிறது. இதற்கெதிரான நீண்ட நெடிய போராட்டமே அவசரத் தேவையாகிறது. 1960களில் இருந்த வகையான வெளிப்படையான தீண்டாமை இன்று இல்லை. அதைச் சாத்தியமாக்கியது

1960களில் நடைபெற்ற சாதியத்திற்கெதிரான போராட்டங்களே.

தனிமனித முனைப்பு இன்று வெகுதிரள் போராட்டங்களுக்கு மிகப்பெரிய சிக்கலை உருவாக்கியுள்ளது. உலகமயமாக்கலும் நவ தாராளவாத சிந்தனைகளின் செல்வாக்கும் தனிமனித வாதத்தையும் தனிமனித நலன்சார் தேவைகளையுமே முன்னிறுத்தியுள்ளது. இதனால் சமூகமாகப் போராடுவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன. போராட்டத்துக்கான வெகுஜனத் தளங்கள் இல்லாத நிலையில் தொழிலாளர்கள் தனிமனித மேம்பாடு பற்றியே சிந்திப்பார்கள். அது இயல்பானது. இது இன்றைய இலங்கைச் சூழலில் பொதுவான ஒரு இயல்பாகும். ஒரு காலத்தில் செல்வாக்குடனும் பலத்துடனும் இருந்த தொழிற்சங்கங்கள் சீரழிந்ததில் இந்த இயல்பின் பங்கு பெரிது. தனிப்பட்ட நலன்களுக்கு முக்கியத்துவம் தருவதாக தொழிற்சங்கங்கள் மாறிய நிலையில் பொது நலன்சார்ந்த விடயங்களை விடத் தனிநபர் சார் தேவைகளுக்கே தொழிற்சங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர் எதிர்பார்க்கின்றனர். ஒரு முழுப்போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் போது தொழிற்சங்கம் மீது கொள்கிற கோபத்தை விட தனது தனிப்பட்ட தேவையை நிறைவேற்றாத போதே தொழிற்சங்கம் மீது தொழிலாளி அதிகளவில் கோபம் கொள்கிறார்.

தொழிலாளி வர்க்கமாகச் சிந்திக்கத் தவறுவதும் வர்க்கவிடுதலை தனது தனிப்பட்ட விடுதலையையும் சாத்தியமாக்கும் என்ற உண்மையை விளங்கத் தவறுவது போல் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தத்தம் சமூகங்களின் விடுதலையே தமது விடுதலை என்பதை விளங்கத் தவறுகின்றன.

சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் வழி ஒடுக்குமுறையில் இருந்து தங்களை விடுவிடுத்துக் கொண்டோருக்கு ஒரு சமூகப் பொறுப்புண்டு. எல்லோரும் சேர்ந்து போராடியே இந்த விடுதலை சாத்தியமானது என்ற உண்மையை அவர்கள் விளங்க வேண்டும். இது சாதியப் பிரச்சினைக்கு மட்டுமானதல்ல, மலையக மக்களுக்கும் பொருந்தும். தமிழர்களுக்கும் பொருந்தும்.

இன்று புலம்பெயர் தேசங்களில் இருந்து கற்பனை அரசியல் பேசுபவர்களும் இந்த வகையறாக்கள் தான். ஜனநாயகம் பற்றி வகுப்பெடுப்பதும் தமது எட்டவியலாத இலக்குகளுக்கு ஊரில் உள்ளோரைப் பலியாக்குவதும் இதனாலேயே. அவர்களைப் பொறுத்தவரை அவர்களது பிரச்சினைகள் ஓரளவு தீர்ந்துவிட்டன. பொருளாதாரப் பலமுண்டு. ஒடுக்குமுறைகள் குறைவு. இதனால் அவர்கள் தங்களது விடுதலையை உறுதிப்படுத்திவிட்டு சமூக விடுதலை குறித்து அக்கறையின்றி தனது கற்பனை இலட்சியங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்த விளைகின்றனர்.

எமது சூழலில் இல்லாத தலித் என்ற அடையாளம் குறித்தும் தலித் தேசியம் குறித்தும் நடைபெறும் உரையாடல்கள் அபத்தமானவை. ஒடுக்கப்பட்ட சமூகங்களின் ஒருங்கிணைந்த போராட்டங்களுக்கு குழி பறிப்பவை. இந்தியாவில் இருந்து வருவதை கண்ணை மூடிக்கொண்டு ஏற்று வழிப்படும் மோசமான போக்கின் தொடர்ச்சியே இது. தலித் என்ற அடையாளம் இலங்கைக்கு உரியதல்ல. அந்த அடையாளம் தமிழ்நாட்டிலேயே நெருக்கடிக்கு உள்ளானதாக இருக்கிறது. இன்று தலித் என்ற அடையாளம் தனித்தனிச் சாதிகளின் அடையாளமாக இருக்கின்றதேயொழியே தலித் என்ற பொது அடையாளமாக இல்லை. அதேபோல ஒடுக்கப்பட்ட சாதியினர் அனைவரும் தலித் என்ற பொது அடையாளத்துள் வர மாட்டார்கள். இதை ஒரு உதாரணம் மூலம் நோக்கலாம்.

அமெரிக்காவில் Black Nation பேசுபவர்கள் கறுப்பு இன இருப்பைப் பற்றிக் கதைக்கிறார்கள். ஆனால் மேலோங்கிய கறுப்பினத்தவர்கள் இந்த Black Nation என்ற அடையாளத்துக்குள் வருவதில்லை. ஒபாமாவோ, கொலின் பவலோ இதன் பகுதியல்ல. இன்னும் ஒருபடி சென்று அதிதீவிர வலதுசாரியான கொண்டலீசா ரைஸ் நிச்சயமாக இதன் பகுதியல்ல. இவர்கள் "கௌரவ வெள்ளையர்கள்".

இந்தியாவின் தலித் அரசியல், தனது பகைவராகக் கருதிய இடதுசாரிகளிடமிருந்து எட்டநின்றதன் மூலம், தன்னைப் பலவீனப்படுத்தியதுடன், ஒடுக்கப்பட்ட சாதியினரின் ஒற்றுமை என்ற நியாயமான இலக்கிற்கும் கேடு செய்தது. ஒட்டுமொத்தமான சாதி ஒடுக்கல் அமைப்பைச் சுட்டி உருவானதாயினும் ஒடுக்கப்பட்ட சாதியொன்றின் குறிப்பான பிரச்சினைகளைச் சார்ந்து உருவானதாயினும், இந்தியாவில் விருத்தியான சாதி அரசியல், ஈற்றில், ஆளும் மேட்டுக்குடிகளின் நலன்களையே பேணும் என்பதை அதன் செயற்பாடு உறுதிப்படுத்திற்று. அதற்கு முரணாக, இலங்கையின் வடக்கில் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம், மாக்சியத் தலைமையின் கீழ் விருத்தி பெற்றதுடன் சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக 1960களில் முன்னெடுக்கப்பட்ட ஒரு நீடித்த வெகுசனப் போராட்டமாகவும் அமைந்தது.

## நிறைவுக் குறிப்புகள்

இன்றைய சமகாலச் சூழலில் சாதியத்துக்கு

எதிரான போராட்டங்களின் வர்க்கப் பரிமாணங்களை நோக்கும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:

தமிழ்த்தேசியம் சாதியத்தைக் கடந்து வராது விட்டால் தமிழ் மக்களின் விடுதலை சாத்தியமல்ல. தமிழ்த்தேசியத்தின் சாதிய மனநிலையை எவ்வாறு திருத்துவது என்ற வினா சிக்கலானது ஆனால் அவசியமானது. இன்று வேறுபட்ட சாதிகளை உடைய மக்களைக் கொண்ட ஒரு வெகுஜன அமைப்பைக் கட்டுவதே மிகவும் சவாலானது. சாதி வேறுபாடு பாராமல் எல்லோரும் இணைந்து வேலை செய்வதற்கான சூழல் இருந்தாலொழிய இது சாத்தியமல்ல.

அன்றைய ஒக்டோபர் 21 எழுச்சியானது வெறுமனே வாக்குச் சேகரிக்கும் பாராளுமன்ற நோக்குடையதாக அமைந்திருப்பின் அது வெற்றியடைந்திருக்காது. ஆனால் இதன் வெகுஜனத் தன்மையே பரந்துபட்ட முன்னணிக்கு உதவியது. அது வெகுஜனப் போராட்டமாக அமைந்தமையால் ஜனநாயக நல்லெண்ணம் கொண்ட உயர்சாதியினர் எனப்பட்டவர்களும் முஸ்லிம் மக்களும் இளைஞர்களும் சிங்கள மக்களும் அவர்களுக்கிடையிலான புத்தி ஜீவிகளும் ஆதரவளித்துப் பங்கெடுத்தனர்.

அரசியல் எப்போதும் அடையாளஞ் சார்ந்தது தான். அரசியற் களத்தில் உள்ள அடையாளம் ஒவ்வொன்றும், நேரடியாகவோ மறைமுகமாகவோ வேறுபடும் அளவுகளில் அரசியலிற் பங்காற்றுகிறது. சமூக ஏற்றத் தாழ்வுகளும் சுரண்டலும் ஒடுக்கு முறையும் எந்தெந்த அடையாளங்களின் பேரில் நிகழுகின்றனவோ அந்தந்த அடையாளங்களின் பேரில் மோதலும் பகைமையான அரசியலும் இருப்பது இயல்பானது. எனினும் சில அடையாளங்களும் அவை சார்ந்த முரண்பாடுகளும் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்துகின்றன. எல்லா வகையான அடையாளங்களும் அடையாளப்படுத்தல்களும் குறிப்பிட்ட கால, இடச் சூழல்களிலேயே முக்கியம் பெறுகின்றன. அதை விட, அடையாளப்படுத்தல்களின் தோற்றமும் விருத்தியும், அடையாளங்களைச் சார்ந்த சமூக நலன்களாலேயே முடிவாகின்றன.

சாதியம் எளிமையில் அகற்றக் கூடியதல்ல. வட அமெரிக்காவில் அடிமை வியாபாரத்தில் தனது வேர்களைக் கொண்டிருந்த நிறவாதம், ஒரு கறுப்புச் சனாதிபதி ஆட்சிக்கு வந்த பின்பும் குறிப்பிடத்தக்க வலிமையுடன் உள்ளது. தென்னாபிரிக்காவில், நிறவாத அடிப்படையில் அப்பட்டமான கொடுமையை நியாயப்படுத்திய ஒரு ஆட்சிமுறை, ஒரு விடுதலைப் போராட்டத்தின் விளைவாக முடிவுக்கு வந்தாலும் நிறவாதம் தொடர்கிறது.

> தொழிலாளி வர்க்கமாகச் சிந்திக்கத் தவறுவதும் வர்க்கவிடுதலை தனது தனிப்பட்ட விடுதலையையும் சாத்தியமாக்கும் என்ற உண்மையை விளங்கத் தவறுவது போல் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தத்தம் சமூகங்களின் விடுதலையே தமது விடுதலை என்பதை விளங்கத் தவறுகின்றன. சாதியத்திற்கெதிரான போராட்டங்களின் வழி ஒடுக்குமுறையில் இருந்து தங்களை விடுவிடுத்துக் கொண்டோருக்கு ஒரு சமூகப் பொறுப்புண்டு. எல்லோரும் சேர்ந்து போராடியே இந்த விடுதலை சாத்தியமானது என்ற உண்மையை அவர்கள் விளங்க வேண்டும்

எந்தெந்த அடிப்படைகளிற் சுரண்டலும் ஒடுக்குமுறையும் நடக்கின்றனவோ அவை சார்ந்து சுரண்டி ஒடுக்கப்படுவோரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த இயலும். ஆனால் அது எப்போதும் இயலுவ தில்லை. எளிதாக நிகழுவதுமில்லை. ஒடுக்குமுறையாளர்கள் ஒடுக்கப் பட்ட மக்களிடையே உள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் விதமாக அடையாள வேறுபாடுகளை வலியுறுத்தவும் புதிய வேறுபாடுகளைப் புகுத்தவும் அவர்கட்கு இயலுகிறது. எனவே, ஒடுக்கப்பட்ட சமூகங்கள் ஒடுக்கிற சமூகம் பயன் படுத்தும் அடையாள அரசியலை எதிர்கொள்ளக்கூடிய அடையாள அரசியல் தந்திரோபாயமொன்றைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

வர்க்க சமுதாயத்தில் வர்க்க அடையாளம் அடிப் படையானது. சமுதாய விருத்திப் போக்கில் வர்க்கங் களின் தன்மையும் அமைப்பும் மாறி வந்தாலும், உழைப்போருக்கும் உழைப்பை உறுஞ்சுவோருக்கும் இடையிலான பிளவு மேலும் ஆழப்பட்டுள்ளதே ஒழிய இல்லாமற் போகவில்லை. எனவே அந்த முரண்பாட்டைப் புறக்கணித்து எவ்விதமான சமூக அநீதியையும் போரிட்டு வெல்ல இயலாது.

நிறைவாக, சாதியம் பற்றி வர்க்கக் கண்ணோட்டத் தைத் தெளிவாக விளங்க 1966 ஒக்ற்ரோபரில் மாக்சிய லெனினியர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் படிப்பினைகள் முக்கியமானவை:

சாதியத்திற்கெதிரான போராட்டங்கள், தனிப்பட்ட

எவருடைய சிந்தனையிலும் பிறந்ததல்ல. ஒரு குறிப்பிட்ட நெருக்கடிச் சூழலில் உருவானதுமல்ல. அது ஒரு நீண்ட போராட்ட வரலாற்றின் முதிர்விற் தோன்றியது. அதன் வலிமை மாச்சிய லெனினியம் வற்புறுத்தும் வர்க்கக் கண்ணோட்டமும் நிலைப்பாடும், பரந்துபட்ட ஐக்கிய முன்னணி, வெகுசன மார்க்கம் ஆகிய மூன்றிலும் தங்கியிருந்தது

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் அதற்கு முன்பிருந்தே சாதியத்துக்கெதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுத்துவந்த கம்யூனிஸ்ட் கட்சியின் — குறிப்பாக அதன் மாச்சிய லெனினிய மரபின் — வழிகாட்டலில் நடந்த சாதிய எதிர்ப்பு இயக்கங்களின் ஒரு உச்ச கட்டம் என்பதால் அப் போராட்டத்தை நெறிப்படுத்தவும் மாக்சிய லெனினியர்கட்கு முடிந்தது.

அதன் விளைவாகச் சாதிய எதிர்ப்பை வெறுமே சாதிகளிடையான மோதலாக நோக்காமல் ஒரு சமூக ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பாக நோக்க இயன்றது. அதைவிடச் சாதியத்துக்கு நெருக்கமான வர்க்கப் பரிமாணத்தை முன்னணிக்குக் கொண்டுவந்து ஒடுக்குமுறையாளர் களது பிரபுத்துவ முதலாளிய அடையாளத்தையும் ஒடுக்கப்பட்டோரின் உழைக்கும் வர்க்க அடையாளத்தையும் வற்புறுத்த இயன்றது. போராட்ட அணுகுமுறையில், மாக்சிய லெனினிய ஐக்கிய முன்னணிக் கோட்பாட்டின் மூலம் போராட்டத்துக்கு ஆதரவாக இணையக்கூடிய அனைத்துச் சக்திகளும் ஒன்றுபட முடிந்தது. அத்துடன் சாதியத்திற்கு எதிரான போராட்டம், ஒரு வெகுசனப் போராட்டமாகத் தேவைக்கமைய ஆயுதந் தாங்கிய போராட்டமாகத் தன்னைத் தகவமைத்தது.

1966 ஒக்ற்றோபர் எழுச்சி சாதியத்தை அழிக்க வில்லை. அவ்வாறு எவரும் உரிமை கோரவில்லை. ஆனால் சாதியத்தின் சமூக-பொருளாதார அடித்தளத்தை மீளமைக்க இயலாதளவிற்கு அது நொறுக்கியுள்ளது. சாதிப் பாகுபாட்டைத் துணிந்து வெளிப்படையாகக் கடைப்பிடிப்பதை இயலாமலாக்கி மறைமுகமாக நிகழும் பாகுபாட்டைப் பொதுப் பார்வைக்குக் கொண்டுவரவும் போராடி முறியடிக்கவுமான தைரியத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அது அளித்துள்ளது.

சாதியத்திற்கு எதிரான போராட்டம் எஞ்சி யுள்ளது. அது சமூகச் சிந்தனைத் தளத்திலானது. மரபு என்ற பெயரில் ஊன்றியுள்ள தீய வழமைகளை எதிர்கொள்ள இடையறாத போராட்டம் ஒன்றைத் தொடரவேண்டியுள்ளது. அதிலிருந்து தொடங்குவதே சாதியத்தை சமூகவிடுதலையாக முன்னெடுப்பதற்கான நீண்ட பயணத்தின் முதற்படி.

***திருநெல்வேலியில் 07.01.2024இல் தேசிய கலை இலக்கியப் பேரவையின்***

***121வது வெளியீடான பி.முத்துலிங்கம் அவர்களின்***

***'அரசியல் பொருளாதாரம், தத்துவம் – ஒரு பார்வை' நூலின் வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்***



# குடியானவனின் பாட்டு

**க. சிவகரன்**

"ஐம்பத்தேழாம் கட்டை கடந்தா ஐம்புட்டு யாரை எழுப்பமுடியும்" குருவாயிக் கிழவன் அடிக்கடி கூறும் வார்த்தை இது. இதில் ஏதோ உள் அர்த்தம் இருக்க வேண்டும். அல்லது ஏதோ எதுகை மோனையுடன் ஏதோ சொல் அடுக்கு மட்டும் தானா? வாயில் வந்ததை வழவழவென்று பாடுவது அல்லது கூறுவது கிழவர் வழக்கம். அதை வேடிக்கையாகப் பார்த்தால் வேடிக்கைதான். உள்ளே அலசி ஆராய்ந்து பார்த்தால் பல அர்த்தங்கள் மறைந்திருக்கும். கிழவரிடம் ஏதோ ஒரு திறமையிருக்கத்தான் செய்கின்றது. எவ்வளவு நேரம் பேசினாலும் பேசிக் கொண்டேயிருக்க முடியும். அவருக்கு அலுக்காது. கேட்பவருக்கும் அலுக்காது. சிலவேளைகளில் அல்ல அநேக வேளைகளில் அவரின் உள் இருக்கும் பனம்பாணம் தென்னம்பாணம் தான் காரணமோ என எண்ணத்தோன்றும். அவரின் உணர்ச்சிகளை தட்டிவிட்டால் கதை ஆறாக ஓடி வரும். மகாவலி கங்கைதான். இடை யிடையே தலையிட்டு திசை திருப்ப முற்பட்டாலும் அது ஏறி இறங்கி மீண்டும் பிரதான ஓட்டத்தில் இறங்கி ஓடத் தொடங்கிவிடும். நாங்கள் என்னதான் நரிச்சுப் புரிச்சு திசை திருப்பினாலும் கிழவர் அரிச்சுப் புரிச்சு தன்பாட்டில் எடுத்துக் கொண்டு போயே விடுவார். அப்படி ஒரு திறமை.

"மலையளந்த ராசாவே கால் பிடிக்க
நான் வரட்டோ, நான் வரட்டோ
காடளந்த ராசாவே கால் பிடிக்க
நான் வரட்டோ, நான் வரட்டோ
கண்ணளந்த ராசாவே கஞ்சியாத்த
நான் வரட்டோ, நான் வரட்டோ"



இப்படிப் பாடும் பொழுது இதுவென்ன பாட்டு என எண்ணத் தோன்றும். இது நாட்டுப் பாடலா? சினிமாப் பாடலா? அல்லது கானாப் பாடலா! ஏதோ ஒரு பாட்டுத்தான் புதிதாக இருக்கும். மொத்தத்தில் இது ஒரு கவலைப்பாட்டு. அங்கொன்று இங்கொன்றாய் தட்டித்தாவி, எட்டிப்பிடித்து ஏதோ அவர் இயற்றியதாய் தான் அமையும். அதில் வரும் சொற்களின் பெருக்கிற்கு பஞ்சம் இருக்காது. மலையகம், யாழ்ப்பாணம், கொழும்பு என பிரித்துப்பார்க்க முடியாத எல்லாப் பிரதேச வழக்கும் கலந்தி ருக்கும். இவையெல்லாம் ஒன்றோடு, ஒன்று ஒட்டி உறவாடி வரும். இந்தக் குருவாயிக் கிழவரின் வாழ்க்கை போல...

"அதுசரி. உங்க மனையாளை, திருவாட்டியை திருவாட்டி திருமதி குருவாயியை எப்படி 'லவ்' பண்ணினீங்க"

"நாம கொழும்பிலை வேலை செய்யும் பொழுதுதான் அவவும் அங்கை வந்தா. அந்தக் கொம்பனியில் ஐம்பதுபேர் வரை வேலை செய்தோம். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கண்டி, காலியென எல்லா இடத்துப் பசங்களும் வேலை செஞ்சாங்க. அவவு சமையல் பகுதியிலை வேலை செய்தா. யாழ்ப்பாணப் பொம்பிளைப்பிள்ளை. ஏதோ கஸ்ரமெண்டு வேலைக்கு வந்தவா. என்னைப் போலத்தான் 'ஸ்கூல்' பக்கம் போனதே கிடையாது. இதுதான் நமக்குள்ள பெரிய ஒற்றுமை. அப்படியே பேசிப் பழகி, அப்புறம் இஸ்ரப்பட்டோம். வாழ்வாப் போச்சு."

தன்னுடைய காதலைக் கூறும் பொழுது கிழவரிடம் இளமை திரும்பி வந்துவிட்டதோ என எண்ணும்படியான ஒரு தோற்றம் தோன்றி மறையும். கிழவரின் வரட்டுக் கண்கள் பழபழக்கும் கறுப்பு நிற மேனி அழகாய் தெரியும். இன்றும் எழுபதைக் கடந்தும் கட்டுமஸ்தான தேகத்தின் சொந்தக்காரன் என்ற சாயல் அவரிடம் காணப்படுகின்றது. இன்றும் முழுமையாக உடைந்து போகாத உடற்கட்டு அவரிடம் இருக்கின்றது. கன்னங்கள் குழிவிழுந்து ஓரிரண்டு பற்கள் காணாமற் போயிருந்தாலும் வலிமையான சுருக்கு விழும் நெற்றியும், சற்று உயரமான கழுத்தும் தொந்தியற்ற ஒநாய் வயிறும் கிழவரை நிமிர்த்தி வைத்திருக்கின்றன.

அந்தக் காவற்கட்டிலில் நிமிர்ந்து இருக்கும் பொழுது மாலை வேளையின் மையிருட்டில் பார்க்கும் பொழுதும் அதிகாலைவேளைப் பனி மூட்டத்திற் பார்க்கும் பொழுதும் அந்தத் தோற்றப் பொலிவு ஒரு காவற்காரன் என்பதை பறைசாற்றிக் கொண்டேயிருக்கும். எப்பவும் கைமடிக்காத நிலையில் அவர் 'சேட்' இருக்கும். அதுவொரு பழைய 'சேட்'டாகத் தன் இருக்கும். பலவிதமான பளுப்புகளும் அதில் குடிகொண்டிருக்கும் சுத்தமான காவல்காரனுடைய இலச்சணங்கள் எல்லாவற்றையும் அவரிடம் காணமுடியும். கட்டிலில் அந்த மடிக்கின்ற தூக்கி இலகுவாகச் செல்லக்கூடிய இடத்திற்கிடம் இடம்மாறி வைக்கக் கூடிய சாக்குக் கட்டிலில் கிழவர் சும்மா குந்தியிருந்தாலே போதும். காவல் குடிகொண்டுவிடும்.

மாலை மயங்கி இரவானதும் சாக்குக் கட்டிலில் இருந்தபடி தான் சொந்தமாக வைத்திருக்கும் 'அஞ்சுபற்றி ரோச்சை' எடுத்து ஒருமுறை அடிச்சு ஒளியை மூலை முடுக்கெல்லாம் விசிறி தன் காவலுக்கு அச்சாரம் போட்டு வைப்பார். நான் அநேகமாக அந்த இரண்டும் கெட்ட பொழுதிற்தான் அவரைத் தேடி நடந்து போவேன். எனது குட்டி 'ரோச்சை' காலடிக்குப் பிடித்தபடி நீர்பாய்ச்சும் வாய்க்காலில் அறுகம்புல் அணைகளுக்கு இடையே கவனமாக நடந்து போவேன். என் சிறு வெளிச்சத்தைக் கண்டதும் தனது வரவேற்பை உறுதிப்படுத்த தன் கையில் 'ரோச்சை' எடுத்து தனது பெருவெளிச்சத்தை விசிறிக் காட்டுவார். அருகே போனதும் "ஐயா வாங்கோ" என்பார். நடுத்தர வயதுக்காரனாக நான் இருந்த பொழுதும் "ஐயா" என அழைத்துக் கௌரவப் படுத்துவார். தோட்ட வெளியில் அந்த தற்காலிக தங்கு கொட்டகையில் ஏதோ கிடைத்த பொருளை ஆசனமாக்கி நான் அமருவேன். ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை உரையாடுவோம். பலதும் பத்துமாய் வரும். அவரின் வாழ்க்கையில் இருந்து

உலகைப் படிப்பதுதான் எனது நோக்கம் என்பதை காட்டிக் கொள்ளாமற் கதை புடுங்குவதில் நான் கெட்டிக்காரன். சரளமாகப் பேசிப் பேசி அவர் அனுபவங்களில் இருந்து பசியாறிக் கொள்வேன். அவர் சிலகாலம்தான் வருவார். இந்த வெங்காய அறுவடையின் குவியங்களை காத்து சந்தைக்கு அனுப்பும்வரைதான். ஆகக் கூடியது ஒரு ஐந்து நாட்கள் வரை தொடரலாம். பின் அடுத்த வருடம் வருவார். இவ்வாறு ஐந்தாறு வருடங்கள் வரை இருக்கும். அவரோடு பேசிப்பழகிய நாட்களில் எனக்குச் சிலவேளை நேரம் இல்லாது போனால் மறுநாட் கேட்பார். அவர் என்னைத் தேடுவது அவர் என்னுடன் பேசுவதற்கு எப்பொழுதும் பிரியமுடன் இருக்கின்றார் என்பது மட்டுமல்ல. எங்களிற்கிடையே அன்பும் நட்பும் உயிர்வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது என்பதையும் காட்டுகின்றது.

"அதுசரி உங்களிடம் எப்படி இந்தக் கலை நயம் வந்தது" நான் கேட்டதுண்டு. "சின்ன வயதில் எங்கடையூரில் மலைநாட்டில் கூத்துக்கள் பார்ப்பேன். அப்பவே அந்தப் பாட்டுக்களைப் பாடிக் காட்டுவேன். பின்னர் கொழும்பு வந்த பிறகு சமயம் கிடைத்தால் சினிமாப் படம் பார்ப்போம். இரவில் ‘ரேடியோ’ கேட்பேன். பாட்டுக் கேட்பதில் எனக்கு ‘இன்ரஸ்ற்’ நிறையவுண்டு. அப்ப கொழும்பிலை வேலை செய்யும் பொழுது சிலவேளைகளில் நாங்கள் பெடிமார் கூடி முசுப்பாத்தி பண்ணுவோம். கொஞ்சம் சாராயம் குடித்துவிட்டால் விடமாட்டார்கள். என்னைப் பாடும்படி கேட்பார்கள். நாட்டுக்கூத்து, சினிமாப்பாட்டு எல்லாத்தையும் கலந்து பாடுவேன். பாட்டுக்கள் மறந்து போனால் ஏதோ வைச்சுக்கட்டிப் பாடுவேன். இடையிடையே என் சொந்தப் பாட்டும் வரும். அப்படி வரும்போது அவர்கள் கூடுதலாக இரசிப்பதை பார்த்து மேலும் பாடுவேன்"

அதிகம் படிக்காத இல்லை, எதுவும் முறையாகப் படிக்காத இந்த மனிதரிடம் அசாத்தியமான பாட்டுத்திறமை இருப்பதை எண்ணி நான் வியந்து போவேன். கேள்வி ஞானம்தான் அவரின் தாய். அவரிடம் ஒரு கலை குடிகொண்டிருந்தது. அதில் முழுமை கிடையாது. அவரின் வாழ்வு போல அதுவும் அவரிடம் கூடிவந்து கொண்டிருப்பதாக எனக்குப் பட்டது. மற்றவர்களுக்காகப் பாடும் பாட்டில் அவர் வாழ்வின் கதைகள் ஒட்டி உறவாடி வந்தன. அப்போதெல்லாம் அவர் தனக்காகப் பாடுவது போலத்தான் எனக்குத் தெரிகின்றது.

ஓரளவிற்கு நகரத்தின் பண்பைப் பெற்றுவிட்ட இந்த யாழ்ப்பாணக் கிராமத்தில் இப்போது ஒரு சில தோட்ட வெளிகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. சுற்றிவரவும் கிராம நகரம் மின்விளக்குகளால் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது. பிரதான வீதியில் வாகனங்கள் போகும் இரைச்சல் கேட்டுக் கொண்டேயிருக்கும். மெல்ல மெல்ல உள்ளே வரும் கட்டடங்கள் தோட்ட வெளியை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இன்றும் இவற்றிடையே ஒரு வாழ்வும் உழைப்பும் தொடரத்தான் செய்கின்றது. நகரக் கிராமத்தின் கழிவுகளை யாரும் முறையாக அகற்றுவது கிடையாது. தோட்ட வெளியின் கரையோரங்கள் கழிவு கொட்டும் இடமாக பழக்கப்பட்டு விட்டன. இந்த முதியவரின் வாழ்வு முடிந்து போனபின்பு காவலிற்கு வேறு ஆட்களைத் தேட வேண்டியிருக்காது. ஏனென்றால் இந்த தோட்ட வெளியும் வயதாகி முதிர்ந்து போய்க் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

மலையகத்தில் பிறந்து கொழும்பில் வேலைசெய்து யாழ்ப்பாணம் வந்து வாழ்ந்து தன் வாழ்வை நிறைவு செய்யும் காலங்களைக் கடக்கும் இந்த மனிதரிடம் வரலாறு மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. சாதாரண தொழிலாளியாக தன் வாழ்வைத் தொடங்கி சாதாரண தொழிலாளியாகவே தன் வாழ்வை நிறைவு செய்யவுள்ள மனிதரிடம் பல சராசரி மனிதர்களைக் காணமுடியும். இந்த மனிதரிடம் வாழ்வின் துன்பங்கள் பல ஒட்டியிருந்தாலும் சிரிப்பதற்கும் கலகலப்பாக பேசுவதற்கும் அவர் பழக்கப்பட்டிருந்தார். எல்லாவற்றையும் மூடிக் கவிழ்ந்து இருக்கும் இருளிடையே தன் வாழ்வின்

எஞ்சியிருக்கும் காலங்களையும் சேர்த்து காவல் செய்யும் இவர் ஒரு நல்ல காவற்காரன்தான்.

இன்றும் வழமைபோல் குருவாயிக் கிழவரிடம் வந்தேன். வெங்காயம் சிறிய மலைக் குன்றுபோல் குவிந்து கிடந்தது. வழமைபோல தோட்டக்காரர் இரவுச் சாப்பாட்டுப் பொட்டலத்தை கொடுத்துவிட்டுப் போய்விட்டார். அவரை முதலாளி என்றுதான் கிழவர் அழைப்பார். எனது நண்பரான அவர் சிலவேளைகளில் கொஞ்சம் நின்று பேசிவிட்டுப் போவார். இன்று ஏதோ போய்விட்டார். நான் கதைத்து வெளியேறிய பின்பே கிழவர் சாப்பாட்டுப் பொட்டலத்தை அவிழ்ப்பார்.

"ஐயா நீங்கள் வழமையாகப் பாடும் பாடலைப் போல ஒருபாட்டைப்பாட வேண்டும். பாடலை நான் கூறுகின்றேன். நீங்கள் பாடினால் போதும். நீங்கள் அடிக்கடி முணுமுணுக்கும் வரிதான் படலின் ஆரம்பம். அந்த வரிகள்தான் எனக்குள் பொறிதட்டியது. அந்த வரியில், 'யாரையும் எழுப்ப முடியாது' என்று வரும்வரிதான். இந்த இதிகாசப் பாட்டு பிறக்க அடிப்படையாயிற்று.

முதலில் பாடலின் கருத்தைக் கூறுகின்றேன். அதன்பின் பாடுவோம். இராமாயணக் கதையிலே கும்பகர்ணன் என்றொரு பாத்திரம் வருகின்றான். அவன் இராவணனின் தம்பி. அண்ணன் மேல் பாசங் கொண்டவன். அண்ணன் தவறு செய்தபோதும் அண்ணனிற்காகவே உயிரை விட்டவன். இந்தக் கும்பகர்ணன் போதையிலே தூங்குவதாயும் அவனை எழுப்ப முடியாது எனவும் கொள்வோம். அண்ணன் ஆட்சியாளன் அல்லவா. இந்த அண்ணன் ஆட்சியில் தம்பி தூங்குவது போலத்தான் மக்களும் தூங்குகின்றனர். ஐயா, இதிகாசங்களின் இருண்ட பக்கங்களில் மட்டுமே தம் வாழ்வைத் தேடும் மக்களிடம் இயல்பாகவே இந்தப் போதை தலைக்கேறிவிடும். அண்ணன் போன்ற ஆட்சியாளர்கள் கொஞ்சம் ஊத்திவிட்டாற் போதும் இந்தப் போதை தெளியவே தெளியாது. தெளியவும் விடமாட்டார்கள். கும்பகர்ணத் தூக்கத்தில் மக்கள் கிடக்கவேண்டும் என்பதில் அண்ணன்மார் எப்பொழுதும் குறியாக இருப்பார்கள். பலியாகிப் போனாலும் தெளியாத போதையிது. இந்தப் போதை மயக்கம் தெளியத்தான் பாடவேண்டும் ஐயா..."

ஐம்பத் தோராம் கட்டை கடந்தா
ஐம்புட்டு யாரை எழுப்ப முடியும்– இது
இதிகாச மயக்க மல்லவோ– இந்த
மயக்கம் தீர மருந்து இல்லையோ.

கிழவர் பாடினார். நான் கொஞ்சம் தாளம் போட்டேன். பக்கத்திலே கிடந்த தண்ணீர் 'கானை' தாளமாகத் தட்டினேன். கிழவர் சுருதியை ஏற்றிப் பாடினார்.

பாசத்தாலே மோசம் போனான்
இராவணன் தம்பி– அண்ணன்
ஆசைக்காக உயிரை விட்டான்
ஆருயிர்த் தம்பி இந்த மக்கள் எல்லாம்
கும்பகர்ணரோ... இந்த
இனவாதம் போதையல்லவோ.

"ஐயா நல்லா வருகுது பாடுங்கோ. இதோ அடுத்த வரிகள்.."

சீதை விட்ட கண்ணீர் தானே
மாவலி கங்கா– நம்ம
லங்காதேவி தானே– இப்ப
சீதையின் தங்கா– அண்ணன்
ஆசையாலே சீதை வாடுறா
அவன் போதையாலே நீயும்
தூங்கிறாய் – அந்த
இராமன் வரமாட்டான்
கேளடா இது இதிகாச
காலமல்லடா– உந்தன்
கும்பகர்ணத் தூக்கம் ஏனடா
ஐம்பத்தோராம்....

ஐயா பாடினார். நான் தாளம் போட்டுக் கொண்டிருந்தேன். தூரத்தே கேட்கும் பாட் டோசை யாரோ குடிகாரர் காவற் கொட்டிலில் இருந்து பாடுவதாய் கேட்கும். ஐயா! ஆம் இது குடியானவரின் பாட்டுத்தான். வெறும் குடிகாரப் பாட்டுத்தான். போதை தெளியும் வரை பாடிக்கொண்டேயிருக்க வேண்டிய இதிகாசப் பாடல் இது. ஐயா, ஆம் என்று தலையசைத்தார். பாடல் தொடர்கின்றது.

# சினிமாக்களை முன்னிருத்திய பார்வையில் நேரு கருணாகரனின் களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை

சந்திரலேகா கிங்ஸ்லி

மிக நீண்ட நாட்களுக்குப் பின் ஒரே மூச்சில் என்னால் ரசித்து வாசிக்க கூடிய நூலாக வெளிவந்திருக்கிறது. நேருகருணாகரனின் களவாடப்பட்ட தலைமுறைகளின் கதை. கிட்டத்தட்ட 166 பக்கங்களை உள்ளடக்கிய இந்நூல் நல்ல சினிமாக்களை ரசிப்பதை பற்றியதான மிகப்பெரிய ரகசிய கதையை மிக மெலிதான ஓட்டத்தில் எனக்கு கூறிச்சென்றதை ஓர் ஆய்வாக எனக்கு எழுதாமலிருக்க முடியவில்லை. அதுவும் ரசனைக்குள்ளான சினிமாக்களை ரசித்து நுணுகி ஆராய்ந்து எழுத்துக்களில் கொணர்ந்து ஒரு தொகுப்பாக்கி அதனை சமுகத்துக்கு பிரயோசனப்படக் கூடிய நூலாக கொண்ட முயற்சியாக வந்திருப்பது மலையக இலக்கிய பரப்பில் முதல் தடவையாகக் காண்கின்றேன்.

தொடர்ச்சியாக வாசிப்பு தளத்தில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், விமர்சனங்கள், நாடகங்கள், திரைப்படங்கள், விவாத மேடைகள் என பல இலக்கிய தளங்களில் நம் ரசனை ஊன்றிப் போயிருக்கின்ற இக்கால கட்டத்தில் இந்நூல் பேசும் படைப்பிலக்கியம் வித்தியாசமாகி சினிமாக்களை பற்றிய மிக ரசனையான பக்கங்களை நூலாசிரியர் தான் பார்த்து ரசித்த ஆழமான அழகியலுடனான பல உலக சினிமாக்களை முன்னிருத்திய விதம் புதிய உத்தியாக காணப்படுகின்றது. இந்த சினிமாக்களை பற்றிய நூலாசிரியரின் ரசனை உள்ளார்ந்த அழகியல் சினிமாக்களில் தோற்றுவிக்கப்பட்ட சமூக பிரக்ஞைகளை நுணுகி நோக்குதலும், வாழ்வியலுடன் சினிமாக்களை இணைத்து கொள்வதனையும் தன் பாணி எழுத்துக்களால் புரிய வைத்திருக்கிறார் இந்நூலாசிரியர். எனக்கு தாய்மொழி சினிமாக்களே அதிகமாக அறிமுகமாகியிருந்தன. அதிகமாக தமிழ் மொழி சினிமாக்களை பார்த்து பழகிய நமக்கு இன்னோர் மொழிக்குரிய திரைப்படத்தை ரசிக்கத்தூண்டிய எழுத்துக்களாக இந்நூல் அறிமுகமானது.

முள்வேலிக்குள் மூன்று அற்புதமான பெண்குழந்தைகளின் படத்துடன் முன் அட்டை இயல்பான மெலிதான வர்ணத்தில் காணப்பட்டது . மனிததோலின் இயல்பான நிறத்தில் மண்ணின் நிறத்தில் உணர்வு தீண்டிய ஏதோ ஒன்று முன் அட்டையில் எமக்கு ஆர்த்திமூட்டியது. பலவித வர்ண அட்டைகளை தவிர்த்து களவாடப்பட்ட தலைமுறைகள் கறுப்பு நிறத்திலும் வெளுப்பு நிறத்தில் கதைகள் குறிப்பிடிருப்பது. இன்னோர் அர்த்தம் இதில் உள்ளார்ந்திருப்பதை உணரமுடிகின்றது. “கதை” மிக வெளிச்சமாய் தெளிவாய் பகிரங்கமாய் காணப்படுகின்றவைகள். களவாடப்பட்ட அத்தனை தலைமுறைகளிலும் இருட்டுக்குள் அடைப்பட்டிருக்கும் எதையோ ஒன்றை தேடி அலையும் நேரு கருணாகரனின் உணர்வுகள் சினிமாவை நேசித்த அன்பு அதற்குள் மூழ்கிப் போகும் அற்புத உணர்வு எம்மையும் சினிமாத்தளத்துக்குள்



மூழ்க வைக்கின்றது. இன்னும் சினிமாக்களில் தேட வேண்டியவைகள் மிக ஆழமாய் புதைந்திருப்பதை அத்தனை எழுத்துக்களிலும் நாம் தரிசிக்க முடிகின்றது.

முன்னுரை எழுதியிருக்கும் கலைஞர் மாரி மகேந்திரன் ஒரு அற்புதமான சினிமா கலைஞன் தொடர்ச்சியாக நம் நாட்டிலும் தமிழ் நாட்டிலும் சினிமாக்குள் தன்னை இருத்திக் கொண்டவர். சினிமாவை மிக ஆத்மார்த்தமாய் நேசிப்பவர் பல்வேறுபட்ட சினிமாக்களுடன் வாழ்ந்தவர். சினிமா நுணுக்கங்களை கண்டறிந்தவர். அவரின் முன்னுரை இந்நூலை பெருமைப்படுத்துகின்றது. இதுவரைக்கும் மலையக எழுத்துச் சூழலில் சினிமா திரைப்படங்கள் பற்றிய இத்தனை காத்திரமான எழுத்துக்களை காண முடியவில்லை. இது புது உணர்வாய் இரு தள ரசிப்பை நமக்கு உணர்த்துகின்றது. சினிமா என்கின்ற காட்சிமொழியையும் ரசனையையும் அதனை எழுத்தில் இன்னோர் வாசகனுக்கு உணர்த்தும் அழகியல் கருத்தியல் உணர்வுள்ள எழுத்துக்கள் என இரு தள ரசிப்பை எடுத்து கூறுகின்றது. திரைப்படத்துக்குள் செல்வதுடன் இன்னோர் திரைப்படத்தை ரசிக்கும் திறனையும் நுண் அரசியலையும் அதன் ஆழத்தையும் உள்வாங்கும் நுண்ணிய பார்வையை எமக்கு கற்றுத் தருகிறது.

கிட்டதட்ட 32 சினிமாக்களின் ஆழத்தை பேசி உலக சினிமாத் தளத்துக்குள் நம்மை தக்க வைத்து செல்கின்ற கற்சிதமான எழுத்துக்கள் இவை. தனி தமிழ் சினிமாக்குள் சுற்றி சுற்றி நுணுக்கங்களையும் ஆழமான சமூக பிரக்ஞைகளையும் தேடி தேடி அதற்குள் தொலைந்துபோயிருக்கும் காத்திரமான ரசிகனுக்கு இந்த சினிமாக்களின் அறிமுக ஒரு நுழைவாயிலாக எனக்குத் தென்படுகின்றது. 32 திரைப்படங்களையும் தொடர்ச்சியாக ஒரு கலைஞனாக இதன் பள்ளி நாட்களிலும் பல்கலைகழக நாட்களிலும் ஓய்வாக இருந்தப் பொழுதுபோக்குகளிலும் இப்பொழுதும் தனக்கும சினிமாவுக்குமான ஆத்மார்த்த தொடர்பை மிக நெருக்கமாக நமக்குள் திணித்து நம்மை உலக சினிமா தரங்களை எடுத்துக்காட்ட கருத்தாழமிக்க ஆழமுள்ளதான எழுத்துக்களை இங்கு பார்க்க முடிகின்றது.

சினிமாக்களை பார்த்து விட்டு விமரிசனம் எழுதுவது என்பது வேறு அதற்குள் துளாவி ரசித்து தொலைந்து போவதுமான அழகியல் வேறு. அவ்வகையில் நேரு கருணாகனின் எழுத்துக்கள். மலையக சூழலில் குறிப்பிடப்பட்ட கெண்டாடபட வேண்டிய ஒரு நூலாக காணப்படுகின்றது. ஆங்கிலம், ஈரான், வங்காளம், சீனம், உருது, ஜப்பானிஸ், தமிழ், சிங்களம், மராத்தி, செனகையில் இஸ்பானிஸ், போத்துகீஸ் போன்ற மொழிகளில் பல்வேறுப்பட்ட நாடுகளின் சினிமாக்களை, IN THE MOOD FOR LOVE என்ற சினிமாவை தொடங்கி the moter cycle dairies வரை 32 சினிமாக்களை பல்வேறு கோணங்களில் முன்னிருத்தி கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. 32 சினிமாக்களை மிக அழகான எழுத்து காவிய மாக்கியிருக்கின்றார். உலக சினிமாக்களின் உயர் தரங்களையும் பெறுமானங்களையும் எளிய தமிழில் எழுதியுமிருக்கின்றார். ஒவ்வோர் மொழிக்குரிய சினிமாக்களையும் அவர் ரசித்து பார்க்கத்தக்கதும். மொழிக்கு மொழி வேறுபட்டு காணப்படுவதும் இதன் சிறப்பம்சமாகும். மேலும் ஒவ்வோர் சினிமாவிலும் உள்ள நுண்ணிய உணர்வலைகளை தன் மொழியில் மிகத் தெளிவாக வாசகர் விளங்கிக்கொள்ள கூடிய மொழியாட்சியுடன் புரிய வைத்துள்ளார்.

தொடர்ச்சியாக தனக்கு விபரம் தெரிந்த வயதில் ரசித்த சினிமாக்களையும் இன்றைய நிலையில் தான் ரசித்த சினிமாக்களையும் தர வரிசைப்படுத்தி நமக்கும் சினிமா பற்றிய பெறுமானத்தை பார்க்கும் கோணத்தை ரசிக்கும் உயர் ரசிப்பையும் அதற்குள் இழையோடிப் போயிருக்கும் வாழ்வியல் அம்சங்களையும் ஒரு காட்சி மொழியின் கருவியோடு மீண்டும் மீண்டும் நமக்குள் புகுத்தியுள்ளார். சமூகத்திலிருந்து ஒதுங்கிப்போயிருக்கும் சினிமாவை தன் எழுத்துக்களால் புதுப்பித்திருக்கின்றார். எழுதும் பாணி நம்மை சினிமாக்குள்ளும் கட்டுரைக்குள்ளும் அசரவைத்து விடுகின்றது. ஒவ்வோர் சினிமாவிலும் தான் சந்திக்கும் காட்சியமைப்புக்கள், இயக்கம், கெமரா கோணம், நடிகர்களின் நடிப்புத் திறன், அழகியல் உணர்வுகள், கருத்தியல் அம்சங்கள், உயிர்ப்பு என்பவற்றை நுணுகிப் பார்க்கும் பார்வை மிக ஆழமானதாக பேசப்படவேண்டிய விடயமாக காணப்படுகின்றது.

மேலும் அந்த விமரிசனங்கள் ஒவ்வொன்றிலும் தொடக்க வசனங்கள் மிக ஆழமான கருத்தியல் சார்ந்த வார்த்தைகளுடன் ஆரம்பமாவது சிறப்பம்சமாகும். சினிமாவாக இருந்தாலும் எடுத்தாளப்பட்ட கருத்துக்கள் மிக நுண்ணிய அரசியலை நமக்கு தெளிவுபடுத்துகின்றது. விமுத்தி ஜயசுந்தர (இயக்குனர்), பாரதியார், மண்டேலா, யமுனா, ராஜேந்திரன், பிரசன்ன விதானக்கே (இயக்குனர்), ஜோன் ஆபிரகாம் அம்போ, டோபிபார்ப்பரா இஹெய்லெ கெரீமா, சார்ளிசப்ளின், சி.சிவசேகரம், மகாத்மா காந்தி, மணிரத்தினம், மேதை செர்காய், ஜன்ஸ்டீன் டெரி ஜோர்ஜ், புத்தர் இவ்வாறாக சினிமா பற்றியதான மேதைகளின் கருத்துக்களுடன் இலக்கியம் அரசியல் தத்துவம் வாழ்வியல் பேசியிருப்பது கட்டுரையை கனப்படுத்துகின்றது. இத்தொடர்பு சினிமாவுக்கும்

யதார்த்தமான வாழ்வியலையும் அரசியலையும் பேசுகின்றது. கட்டுரையின் இடையிடையே தனக்கு பரிச்சயமான தன் மொழிரசனையும் சேர்ந்திருக்கும் முறைமை வாசகர்களை தன் எழுத்துக்களுடன் ஒன்றிணைக்க செய்துவிடுகின்ற உத்திமுறையாக அவதானிக்க முடிகின்றது.

இந்நூலின் சமர்ப்பணம் "உலகின் ஒடுக்கப்படும் வஞ்சிக்கப்படும் இனங்களுக்கிடையிலான சினிமா" என்கின்ற உயிர்ப்பான கலையை கையிலெடுத்து அவர் "மக்களின் விடுதலைக்காக உழைத்துக் கொண்டிருக்கும் அத்தனை கலைஞர்களுக்கும்" என கூறுவதில் மிக பரந்த தோற்றப்பாட்டை அவதானிக்க முடிகின்றது. கட்டுரைகளில் ஆங்காங்கே மலையக மக்களின் ஒடுக்கப்பட்ட வஞ்சிக்கப்பட்ட வரலாறுகளையும் உள்வாங்கியிருப்பது கட்டுரைகளின் பெறுமானத்தை கூட்டுகின்றது. என்னதான் சினிமா மொழி பற்றியதான கட்டுரைகளாக இருந்தாலும் மலையக மக்களின் விடுதலையை பேசும் உலக மக்களின் விடுதலையை பேசும் சினிமா குரலாக இது எழுதப்பட்டிருக்கிறது..

களவாடப்பட்ட தலைமுறைகளில் தன்னையும் ஒருவராகவே நேரு கருணாகரன் விளித்திருப்பது தான் பார்த்து ரசித்த சினிமாவுக்குள் உலகின் ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு இனத்துக்குமான விடுதலையை பேசப்படும் நூலாக இதனை பார்க்க முடிகின்றது. பல்வேறு ரசனை கொண்ட காட்சி மொழிக்கும் தன் சார்ந்த நாட்டு இன பிரதேச மக்களையும் இணைத்து நோக்கியுள்ளமை அதனோடு அந்த சமூகம் சார்ந்த பொருளாதாரம் சமூக அரசியலையும் சினிமாக்கள் பேசியிருப்பதை வரிக்கு வரி எடுத்துகாட்டியிருக்கின்றார்.

இறுதியாக தன்னுரையில் நல்ல சினிமாக்கள் பேசும், மக்களின் போராட்ட வாழ்வியல் கூறுகளை கையிலெடுக்கும் அத்தனை இலக்கிய படைப்புக்களையும் ஒன்று கூட்டி விடுதலையை பேசும் துணிவை இந்த சினிமாக்கள் நமக்கு கற்று தருகின்றது. பொதுவாக சினிமாக்களை பொழுதுபோக்கு அம்சங்களாக மட்டும் பார்க்கும் நோக்கை நேரு கருணாகரன் உடைத்திருக்கின்றார். சினிமாக்களின் பெறுமானங்களையும் அவை பேசும் அரசியலையும் எந்த இசங்களையும் தொட்டுப்பேசாமல் விளித்திருப்பது அவருக்கே உரித்தான மொழியாக காணப்படுகின்றது. மொத்தமாக காட்சி மொழிகளை கையாளும் திறனை அதிகரிக்கவும் அதன் நுண்ணிய அழகியலை வாழ்வியலை ரசிப்பதும் அத்தனை சினிமாக்களைப் பார்த்து விட வேண்டுமென்ற ஆவலை தூண்டியது இந்நூலின் வெற்றியாக காணமுடிகின்றது. அத்துடன் 'அடுத்த மனிதனின் கண்ணீரில் எமது விடுதலையும் பேசப்படுகின்றது' என்ற பதிவை நூலாசிரியர் விட்டுச் செல்கிறார்.

மக்களைப் பற்றி பேசப்படும் அத்தனை எழுத்துக்களும் மக்களுக்கான அரசியலை மகத்தாக பேசப்படும் துணிச்சல் மிகுந்த ஆற்றல்களை விதைக்கும் ஆயுதங்களாக கருதப்படுகின்றது. அதனை மிக நேர்மையான அழகியலோடும் ரசனையோடும் பேசும் நேரு கருணாகரனின் களவாடப்பட்ட தலைமுறைகளின் கதையும் எமக்கான விடுதலையையும் பேசும் இலக்கியமாக காணப்படும் என்பதற்கு எவ்வித ஐயப்பாடுமில்லை.

***06.04.2024 அல்வாய், மெதடிஸ்த தேவாலயத்தின் ஆழ்வாப்பிள்ளை மண்டபத்தில்***
***மு. அநாதரட்சகன் எழுதிய "பின் தொடரும் வலி" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா பதிவுகள்***





# எந்திரக் குழந்தைகள்

VK றொபின்

நாள் பார்த்து
நேரம் பார்த்து
வயிற்றைக் கிழித்து
வெளியே எடுத்தார்கள்
பிஞ்சு விரலைப் படம் பிடித்து
ஆண் என்றும்
பெண் என்றும்
முதல் பதிவை
முகநூலில் பகிர்ந்தார்கள்

பம்பஸ் மூட்டைகளும்
பால்மா பெட்டிகளும்
வீட்டை நிரப்ப
தாய்ப்பால் கொடுப்பதை
சில நாளில் மறந்தார்கள்
அகர வரிசையில் முதலெழுத்து
முன்னுக்கு வருமெண்டு
பெயரிலே போட்டியை
ஆரம்பித்து வைத்தார்கள்

மூன்றே வயதில்
மும்மொழியில் கல்வி பயில
முண்டியடித்து
அனுமதி எடுத்து வைத்தார்கள்
கூடி விளையாடல்
கூடாத பழக்கமென்று
தனியே விளையாட
தொலைபேசித் திரையொன்றை
கையுக்குள் திணித்தார்கள்

கூடி வாழ்தல்
பகிர்ந்துண்டு பசியாறல்
பண்பற்ற குணமென்றோ?
தனியன்களாய் பிரிந்து போனார்கள்
மண்மீது கால் வைத்தால்
நோய் நொடிகள் வருமென்று
பக்குவமாய்
பொத்திப் பொத்தி
வளர்த்தார்கள்
பெறுபேற்றுப் போட்டிக்காய்
பெற்றோரியத்தை மறந்தார்கள்
கல்வியைச் சுமையாக்கி
கடுகதியில் பறக்கிறார்கள்

கம்பியில்லாச் சிறைக்குள்
ஆயுள் கைதிகளாய்
எந்திரக் குழந்தைகளைப்
பெற்றெடுத்த பெருமைக்குரியோர்
நான் என்பதா?
நாம் என்பதா?
உங்கள் மனச்சாட்சியிடம்
விடை கேளுங்கள்
எந்திரக் குழந்தைகளுக்கும்
இதயமுண்டு என்பதை
ஒருபோதும் மறவாதீர்.

**வவுனியா தேசிய கலை இலக்கியப் பேரவை பணி மனையில் மாதந்தோறும் நடைபெறும் சமூகவிஞ்ஞான படிப்பு வட்ட காட்சிகள்**




# ஆலமரத்து சாமிகளும் அடுத்து வந்த மோசங்களும்

சிவ.இராஜேந்திரன்

தங்கமலைத் தோட்டமுனு சொன்னா நுவரெலியா பகுதியில வாழுற எல்லாருக்குமே நல்லா தெரியும். தொப்பித் தோட்டத்த தாண்டி 'சிங்கமல சொரங்கத்துக்கு' உள்ள பூந்து ரயில் பாதையிலேயே நடந்து வெளிய வந்தா முன்னுக்கு வார தோட்டம் தான் தங்கமலை.

அந்த தோட்டத்துல இருக்கிற பெரிய ஆலமரம் பேரு போனதுங்க. கிட்டத்தட்ட நூத்தி அறுவத்தஞ்சி வருசம் வயசான மரமுனா பார்த்துக்கங்களே. அடே எங்கப்பா அந்த மரத்துக்கு கீழ தங்கமல தோட்டத்து ஆளுக எல்லாருமே ஒக்காரலாம்... அவளவு பெருசு. அந்த மரத்துக்குனு ஒரு பெரிய வரலாறே இருக்கு. கொட்டகலயில இருக்கிற அறுவதடி பாலத்த கட்டுற காலத்துலயே நம்ம ஆளுக அந்த மரத்த அடையாளங்கண்டு இருக்குறாங்கன்னா பார்த்துக்கங்க.

மனுச அண்டாத காட்ட வெட்டி துப்பறவு பண்ணி தங்கமல தோட்டத்துல மொத தேயில கன்ன நடுறதுக்கு பூச வச்சது தொவங்கி. வெள்ளக்காரன் காலத்துல தொழிற்சங்கம் அமைக்க ஆளுக ரகசியமா சேர்ந்து கதச்சது,





செங்கொடி சங்கக் கொடிய ஒசரமா கட்டுனது, பஞ்சப்படி பதனேழு அம்பத காட்டிக் குடுத்ததுக்கு எதிர்ப்பு கூட்டம் நடத்துனது, டெவன் தோட்டத்துல சுட்டுக் கொல்லப்பட்ட லெச்சுமணனுக்கு அஞ்சலி கூட்டம் வச்சது, இனக்கலவர காலத்துல தோட்டத்து ஆளுகள காப்பாத்துறதுக்கு என்னா செய்யலாமுனு ஆலோசன பண்ணுனது, சேகுவேரா கொலப்ப காலத்துல ஐடின்டிகாடுகள எப்புடி பாதுகாப்பது, ஸ்டோர எரிக்கவுடாம காப்பாத்துறது எப்புடின்னு, தோட்டத்து ஆளுகளே ஒன்னா கூடி கதைச்சது, இப்புடி நெறைய கதைக இருக்கு. தோட்டத்துல நடக்குற நல்லது கெட்டது எல்லாத்தையும் இந்த மரத்துக்கு கீழ இருந்து தான் பேசுவாங்க. இன்னக்கி பாத்தீங்கனா பயலுக அந்தி ஆகுனவுன ரகசியமா கஞ்சா அடிக்கிறது, போயில தூள நாக்குக்கு கீழ கொட்டிக்கிறது, இதெல்லாம் கூட இந்த மரத்தடிக்கி கீழ தானே. திருட்டுப்பயலுக கூடிக்கதைக்கிறது கூட இங்கினதான்... இந்த மாதிரி கூத்துகளையும் ஆலமரம் பார்த்துக்கிட்டு தான் இருக்கு.

மரத்தடியில மூனு சாமி செல இருக்குங்க. செல எல்லாமே ரயில் ரோட்டு போடயில கெடைச்சதா சொல்லுவாங்க. மூனுமே கருங்கல்லுக தானுங்க ஆனால் ரொம்ப வித்தியாசமா இரும்பு மாதிரி இருக்கும். கரக்கோப்புக்கு கீழ இருக்கிற பாடமாத்தி சந்தியில இருந்து பார்த்தீங்கனா. குளிக்கிற பீலி பக்கமா முதலாவதா இருக்கிறது கெங்கமாரி செல தானுங்க. கண்ணடக்கத்த நல்லா பாத்தீங்கனா தெரியும். கெங்கையம்மா மகா சக்தி படைச்சதுனு சொல்லுவாங்க.

"அம்மா மனசு வச்சா தான் கொழந்தயே கெடைக்கும் இல்லாட்டி இல்ல...மத்த தோட்டத்து ஆளுக கூட வருவாங்க... பெத்த புள்ளய அம்மா காலடியில போட்டு அழுதுகிட்டு கும்புடுவாங்க... மத்தவுங்க கொழந்த கேட்டு... கொடம் கொடமா தண்ணிய அள்ளி அம்மாவுட்டு பாதத்தில் ஊத்துவாங்க"

அடுத்து ஒசரமா இருக்கிறது முனியாண்டி. எப்பவும் செவப்பு துணி கட்டி இருக்கும், பெரிய குங்கும பொட்டு வச்சி இருப்பாங்க.

"நம்ம முனியாண்டிக்கு மேல சக்தி படைச்ச ஒரு சாமி இருக்குங்களா? சொல்லுங்க பார்ப்போம் .. கடைசியா வேல பார்த்த வெள்ளக்கார தொர தோட்டத்தவிட்டு போறப்பகூட குடும்பத்தோட வந்து முனியாண்டிய கும்பிட்டுட்டு தான் காருல ஏறி போனங்கனா பார்த்துக்கங்க..." காளக்கார முனுசாமியின் சாட்சியம் பொய்யாகாது தானுங்களே.

அந்த காலத்துல ஆளுகளுக்கு ரொம்ப அநியாயம் பண்ணுன பெரியங் கங்காணிமாரு எல்லாம் கண்டபடி வருத்தம், நோயினு வந்து செத்ததுக்கு காரணமே நம்ம ஆளுக முனியாண்டிக்குப் போட்ட 'கெடு' தான் அப்புடிங்கிறத நல்லா விசாரிச்சி பார்த்தா தெரியும். நெறைய கத இருக்கு.

"இந்த மூனு பேருல முனியாண்டி தாங்க ரொம்ப சக்தி படைச்சவரு... அவரு தாங்க எல்லாத்தையும் ஆளுறவரு...கெங்கயில குளிச்சி வந்து... ஈரத்துணியோட கண் கலங்கி கேட்டிங்கனா... அவரு செஞ்சி முடிப்பாரு..." நாப்பதுல பொறந்த பாட்டி தாத்தாமாருகிட்ட கேட்டீங்கனா முனியாண்டி செஞ்சி முடிச்ச பல கதைகள உணர்ச்சியோட கண்ணுகலங்கி சொல்லுவாங்க.

மூனாவதா இருக்கிறது புள்ளயாரு. அப்புடி தான் அந்த காலத்துல இருந்து சொல்லி வாராங்க. முக்கோண கல்லுதான் முன்னுக்கு கொஞ்சம் நீட்டமா மேல இருந்து கீழ கொஞ்சம் முட்டுன மாதிரி இருக்கும். சந்தனம் பூசி தும்பிக்கை மாதிரி செஞ்சிவச்சிருக்காங்க.

"படிப்பு விசயத்துல புள்ளயாரு தானுங்க... படிக்கிறவுக செலய தொட்டுக் கும்பிட்டிட்டு கீழ இருக்கிற மண்ண தொட்டு பூசிக்கிட்டு போவாக... விபுதி எல்லாம் இப்ப வந்தது தானுங்களே... அதையும் சல்லிக்கி தானே விக்கிறானுங்க.

அந்த காலத்துல அப்புடி இருந்திச்சி... இப்ப எங்கங்க... புள்ளயாரு உருவத்தையே மாத்திப்புட்டானுங்க... டவுனுல போயி பாருங்க அவனுங்க பண்ணுற கூத்த பார்க்க சகிக்கல

போங்க... நம்ம தோட்டத்துல படிச்சவுகளும் அங்க தான் போறாக... புள்ளயாரு பேரையே மாத்திப்புட்டாங்க... இந்தியாவுல பார்த்தீங்கனா புள்ளயார உருவமா செஞ்சி அப்பறம் ஆத்துல கரைச்சிப்புடுறானுங்க... அது என்னா எழவோ தெரியலங்க... நல்ல வேள அந்த கூத்தெல்லாம் இங்க வந்து சேரலிங்க..." அந்த விசயத்துல நம்ம ஆளுக தெளிவா தான் இருக்கிறாங்க.

"நம்ப பசங்களும் டெஸ்ட்டுல பாஸ் பண்ணறுதுக்கு இப்ப என்னவோ கையில நாலைஞ்சி கலரு நூல கட்டிக்கிறானுங்க... அப்பறம் கேட்டா பெயிலுங்கிறானுங்க... எத கட்டுனாலும் இந்த புள்ளயாரு கண்ண வைக்கணுங்களே... யோசிச்சி பாருங்க... தேயில தோட்டத்துல இருக்கிறாப்புல இத பார்த்துப்புட்டு கல்லு செலன்னு சும்மா சொல்ல முடியுங்களா"

"இந்தியாவுல இருந்து காலத்துக்குக் காலம் 'புதுசா புதுசா கடவுள்கள' கொண்டு வாரானுங்க. அதுக வந்து சேர்ந்த பொறகு நம்ம சாமிகளுக்கு மவுசு கொறைஞ்சி போச்சி தாங்க. ஒரு நாளைக்கு பாருங்க அந்த எறக்குமதி கடவுளுகளுக்கும் மவுசு கொறையிறப்ப உண்ம நெலவரம் என்னான்னு தெரிய வரும்..." அப்புடின்னு தோட்டத்து ஆளுக சொல்லுறதுலயும் ஒரு ஞாயம் இருக்குது தானுங்களே.

முந்தியெல்லாம் மாசத்துக்கு கொறைஞ்சது ஒரு பூச சரி நடக்கும் 'இருக்கிறத படைச்சி' சாமி கும்பிடு நடக்கும். நம்ம தோட்டத்து பண்டாரம் வையாபுரி தான் எல்லாத்தையும் செஞ்சி முடிப்பாக... பூச முடிஞ்சிட்டா அவரும் வேலக்கி வந்திருவாரு... கவ்வாத்து சாமி, ஏழு கன்னிமாரு, கொழுந்து சாமி... மாடன் பூச கெங்க முனி... வல்லடியான்... பூச எல்லாமே இங்கின தானுங்களே..'"

"இப்ப பார்தீங்கனா அட்டன் டவுனுக்கு போயிட்டு ஐயர்மாருகிட்ட நல்ல நேரம் அது இதுன்னு பார்த்துக்கிட்டு வாராங்க... அதுக்கும் பெரிய செலவு... அவுங்க சொல்லுற நாளுல தான் பெரிய பூச வப்பாங்க... ஐயர்மாருக்கான செலவு... அப்பறம் போக்குவரத்து... பால்குட பவனி...ஊர்வலம்... தேரு செலவு ஸ்பீக்கரு... மேளக்காரங்க... டான்ஸ்காரங்க... அது இதுன்னு கொறைஞ்சது பத்து லச்சம் ருவா சரி போகுங்க... இப்ப தொட்டதுக்கெல்லாம் பணம் தானுங்களே... வாழப்பழம்... தேங்கா... சூடம் சாம்புராணி, பத்தி... சந்தனம்... வெலய பாருங்களே விசயம் வெளங்கும் "

"போன வருசம் யான ரெண்டு கொண்டு வரனுமுனு பெரிய கரச்ச பண்ணிபுட்டானுங்க... கொஞ்ச பேரு இந்தியாவுல இருந்து ஐயர்மார கூப்பிடனுமுனு... கரச்சங்க... இந்த வருசம் என்னா நடக்குமோ தெரியல போங்க... பணத்துல தானே பக்திய காட்டுறானுங்க... முந்தி மாதிரிங்களா... இப்ப எல்லாமே மாறி போச்சி... பணம் தான் சாமி... சாமின்னா பணம்..." நல்லா யோசிச்சி பாருங்க.

அடிக்கடி சாமிகள மாத்துனதுனால நடந்த சம்பவங்க நெறைய இருக்குங்க ... போன வருசம் நடந்த ஒரு சம்பவத்த சொல்லுறேன் காத குடுத்து கேளுங்க...

ஐப்பசி மாசம் பத்தாந் தேதி இந்த ஆலமரத்துக்கு அடியில அஞ்சி பேரு ஒன்னாகூடி பேசிக்கிட்டு இருந்தாங்க. யதார்த்தமா நானும் வந்து ஒக்காந்துக்கிட்டேன். செல்லையா தான் மொதல்ல கதய தொவங்குனாரு.

"பெரிய கணக்கபுள்ள வீட்டுல இப்ப அம்மா சாமின்னு ஒன்ன கொண்டு வந்து கும்புடுறாங்களே... அது என்னாங்க புதுசா இருக்கு... எட்டி பார்த்தா ரெண்டு தடிச்ச ஆளுகவுட்டு படம் தான் இருந்திச்சி... இத்தன வருசமா நாங்களும் இந்த தோட்டத்துல தான் இருக்குறோம் நமக்கு இந்தா இருக்கிற சாமிக தான் என்னைக்கும் தொனையா இருக்கு.."

"அட்டன் பகுதியில இருந்து தான் அந்த சாமி வந்திச்சி... அவுக இந்தியாவுல இருக்குறாகலாம்... புருசன் பொண்டாட்டி ரெண்டு பேராம் ரொம்ப சக்தியாம்..." சின்னையா கங்காணி வெளக்கினாரு.

"ஓ... அப்ப அவங்க உசிரா இருக்கு றாங்களோ... அப்புடியா நமக்கு அதெல்லாம்

ஒன்னும் தெரியாதுப்பா... செத்த பொறகு தானே சாமியா போவாங்கனு சொல்லுவாங்க..."

"ஏன் சாயி பாபான்னு ஒரு ஆளு இருக்கலியோ... நம்ம வீட்டுலயும் சம்சாரம் அந்த முடி வளர்த்த ஆள பத்தி சொன்னாக... கொட்டகலயில படிச்சி குடுக்கிற டீச்சர் ஒன்னு சொன்னிச்சீனு... என்னென்மோ வெளக்கம் சொல்லிக்கிட்டு இருந்தாங்க... பெரிய மகன் 'குடு குடுன்னு' நல்லா குடுத்துப்புட்டான்... அப்புடியே அடங்கி போயிட்டாங்க... இல்லாட்டி அந்த எழவும் வீட்டுக்குள்ள வந்திருக்கும் நான் வீட்ட விட்டுப்புட்டு ஓட வேண்டி வந்திருக்கும்..." அந்த காலத்து செங்கொடி சங்க தலவரு சீரங்கன் வெளக்கம் சொன்னாலே வித்தியாசமா தான் இருக்குங்க.

"மேட்டு லயத்துல மூனு குடும்பம் கிறிஸ்டியனுக்கு மாறீட்டாங்க...பேரு கூட மாறி போச்சாமே... அப்பன் பேரு சிவலிங்கம் மகேன் பேரு டேவிட்டு... எப்புடி எல்லாம் கேவலம் பண்ணுரானுங்க பாருங்க... காலி மாத்தற பக்கம் பாத்தா நம்ம ஆளுகளுல அம்பதாயிரம் பேரு... ஒங்க சமயம் என்னான்னு கேட்டப்ப சமயம் புத்த மதமுனு கணக்கெடுக்குற ஆளுககிட்ட சொல்லி பதிஞ்சிட்டானுங்களாம். போற போக்க பாத்தா எந்த சமயம் பெரிய சமயமுனு பெரிய கொழப்பமே வந்திரும் போல..." சொல்லி முடிச்ச செல்லையா அண்ணே வெத்தல எச்சத்தூன்னு துப்பினதுலயும் ஒரு ஞாயம் இருக்குபோல தான் இருந்துச்சி.

இவுங்க பேசிக்கிட்டு இருக்குறப்ப தான் செல்வராசு அண்ணே வந்து சேர்ந்தாரு. அவருவுட்டு சம்சாரம் துணிமணிகள தொவைக்க ஆத்துப்பக்கம் கீழ எறங்கி போவதும் இங்க இருந்து பார்க்கிறப்ப நல்லா தெரிஞ்சிச்சி. இவுங்கவுட்டு மகன் சேகர் ட்ரெயினிங் கொலஜில படிக்கிறப்ப மாத்தள பகுதியிள வாழுற ஒரு புள்ளய விரும்புனது, அந்த புள்ள சேகருக்கு லயத்தில வீடுன்னா அங்க வர மாட்டேன்... கலியாணமே வேணாமுனு பெரிய சண்ட புடிச்சது. நல்ல வேளையா செல்வராசு அண்ணேவுட்டு வீடு ஆத்து லயத்துல ஒரு தொங்கல்ல அமைஞ்சதுனால அப்புடியே கொஞ்சம் தள்ளி கட்டி பெரிய வீடா மாத்துன பெறகு ஒரு மாதிரி கலியாணம் முடிஞ்சிச்சி போங்க. வீட்டுக்கு முன்னுக்குள்ள மரக்கறி தோட்டத்துல ஒரு சின்ன குடுச ஒன்ன கட்டி அம்மாவையும் அப்பாவையும் அங்கேயே இருக்க சொல்லிட்டாங்க. இது எல்லாமே எனக்குத் தெரியுங்க. எங்கவுட்டு குடும்ப கதைகளும் அவுங்களுக்கு நல்லா தெரியும். அந்த காலத்துல இருந்து ரெண்டு குடும்பமும் நல்ல பழக்கம் தானுங்களே.

"என்னான்ணே ஒரே யோசனையா இருக்கிறீக போல..." நான் தான் கதய ஆரம்பிச்சேன்.

"என்னமோ விநாயகரு சதுர்த்தின்னு சொல்லிப்புட்டு சேகரும் மருமகளும் அட்டனுக்கு போயிட்டாங்க... அவுங்க ரெண்டு பேரும் விரதம்... காலையில இருந்து ஒன்னும் கெடையாது... சம்சாரமும் பாவம்... அவுங்களுக்கு சொகமில்ல.. குடுசையில என்னா இருக்கு.. வெறும் காட்டத்த குடிச்சி...குடிச்சி... வயித்ததான் பெரட்டுது... அந்தா பாருங்க அவுங்களும் சொல்லுறத கேட்காம புள்ளகவுட்டு உடுப்புகள கழுவனுமுனு ஆத்துக்கு போறாங்க..." செல்வராசு அண்ணனின் குரல்ல ஒரு நடுக்கம் தெரிஞ்சிச்சி. அவரு நல்ல பசியில் இருக்காருன்னு எல்லாருக்குமே வெளங்கிச்சி.

"விநாயகரு... அது யாரு இங்க இருக்கிற நம்ம புள்ளயாரு தானே.. வேணுமுனா விரதம் இருந்து இங்கின வந்து... பொங்க வச்சி... கும்பிட வேண்டியது தானே... இதுக்காக அட்டனுக்கு போகனுமாக்கும்... இனி எத்தன மணிக்கி வந்து... சேரப் போறாங்க... படிச்சவுகளே இப்புடின்னா..." செல்லையாவுக்கு நல்லா கோவம் வந்திருச்சி.

"ஸ்கூலு உட்டு வந்தவுடனே... குளிச்சிட்டு பொறப்பட்டுட்டாங்க... உள்ளுக்கு இருக்கிற சாமி காம்புறாவுல புள்ளயாரு படத்துக்கு வெளக்கு பத்த வச்சவுடனே... அட்டனுக்கு போவனுமினு தடபுடன்னு மருமக பொறப்பட்டுட்டாங்க... வழம மாதிரியே வெளிக்கதவ பூட்டிப்புட்டு போயிட்டாங்க... சேகரு என்னா செய்வாரு அவரும் பின்னுக்கே ஓட்டம் தான்... வேற என்னா

செய்யிறது... அப்புடி ஒரு பொண்ண எடுத்ததுக்கு.. நல்லா படத் தானே வேணும்..."

"என்ன செய்யிறது... படிச்சவுக புது புது சாமிகள தேடிக்கிட்டு போறாக... நம்ம வீட்டுலயும் பெரிய மகன பார்த்தா கறுப்பு உடுப்பு போட்டுக்கிட்டு... என்ன அப்பான்னு சொல்லாம சாமி சாமிங்கிறான்... என்னா செய்யிறது... நம்ம சாமி ஆலமரத்துக்கு கீழ இருக்குது தம்பின்னு சொன்னா... மொறைச்சி பார்க்கறான்... அவுங்கவுட்டு போக்கு அப்புடி இருக்கு..." சீரங்கன் தலவரு சொன்ன மாதிரி இன்னக்கி நாங்க இருக்கிற தோட்ட பகுதியிலயும் இந்த நோயி வேகமா பரவிக்கிட்டு தானுங்க இருக்கு.

"நம்ம தோட்டத்துல முஸ்லிம் சமயத்துக்கு ஒருத்தனும் மாறல... காலப்போக்கில... அதுவும் நடந்திரும் பாருங்களே... கொஞ்சம் பணத்த குடுத்தா... அம்மாவ கூட அத்த... னு சொல்லிருவானுங்க..." சின்னையா சொல்லிட்டு சிரிக்க, எல்லோருமே சத்தமா சிரிச்சாங்க.

"சரி...சரி... ரொம்ப சிரிக்காதிங்க அது கூட கொஞ்ச பேருக்கு புடிக்காது... புது சாமிகள கிண்டல் பண்ணுறாங்க அப்புடின்னு சண்டைக்கு வந்துருவானுங்க... செல்லவராசுவும் பசியா இருக்குறாரு... வீட்டு பக்கம் போயி தண்ணிய வெண்ணிய குடிச்சிட்டு அப்பறம் பேசுவோம்... நம்ம பேசி என்னா நடக்க போவுது... பணமும் பகட்டும்... யாவாரமும் கொடி கட்டி பறக்குற காலமப்பா..." இது செல்லையா.

எல்லாரும் எழும்பிட்டாங்க... மூனு செலயையும் தொட்டு கும்புட்டிட்டு மெதுவாக நடக்க தொடங்கும் போது... ஆத்து லயத்து பொடியனுங்க பெருசா சத்தம் போட்டு கத்தினாங்க.

"தொங்க வீட்டுல நெருப்பு புடிச்சிருச்சி... ஓடியாங்க... சுருக்கா வாங்க "

ஆத்துல குளிச்சிக்கிட்டு இருந்தவுங்க எல்லாம் விழுந்தடிச்சி ஓடுனாங்க...

நாங்க போறதுக்குள்ள நாலு காம்பிராவுக்கு நெருப்பு தாவிருச்சி. ஒரே சத்தம். ரெண்டு மூனு பேரு லயத்துக்கு மேல ஏறிட்டாங்க.

"தண்ணிய கொண்டாங்க வாளிய நெரப்புங்க.... அடுத்தடுத்து கொண்டு வாங்க... தடவிக்கிட்டு இருக்காம சுருக்கா வாங்க..."

"நெருப்புக்குள்ள போவாதீங்க... சொன்னா கேளுங்க... உசிரு முக்கியமா... சாமானுங்க முக்கியமா... கொஞ்சம் இருங்க... கொஞ்சம் ஒதுங்குங்கப்பா..."

"சின்ன பொடியனுங்க தூரமா போங்க... சொன்னா கேளுங்கடா... இப்ப நாலு... வைக்கப்போறேன் பாரு ..."

பொடியனுங்கனா சும்மாவா எதுக்கும் துணிஞ்சவுங்க தானுங்களே வீடுகளுக்குள்ள பூந்து ... கெடைக்கிற சாமான்கள அள்ளி இழுத்து வெளியே கொண்டு வந்துட்டாங்க...

கொஞ்ச நேரத்துல காத்து ஒன்னு அடிச்சிச்சி பாருங்க... பெற்றோல ஊத்துன மாதிரி 'ஓ' ன்னு நெருப்பு பாய தொவங்கிருச்சி ... பத்து பதனைஞ்சி நிமிசம் கூட போயிருக்காது. ஆத்து லயம் முடிஞ்சி போச்சி... நெருப்பும் பொகையும்.. சாம்பலும் தானுங்க மிச்சம்.

கச்சமுச்சான்னு ஒரே சத்தமுங்க. நெருப்பு எப்புடி புடிச்சிச்சி? யாரு செஞ்ச வேல... இது தாங்க பிரச்சின...

"சேகரு வீட்டுல தான்... நெருப்பு புடிச்சி ருக்கு..." முடிவுக்கு வந்துட்டாங்க.

ஆறு மணி இருக்குங்க... அப்ப தான் சேகரும் அவருவுட்டு சம்சாரம் வேணியும் வேகுவேகுன்னு ஓடி வந்தாங்க. யாராவது போன் பண்ணி சொல்லி இருக்கணும்.

"ஒங்க வீட்டுல இருந்து தான நெருப்பு புடிச்சி வந்திருக்கு... படிச்சவுங்கனு சொல்லுறீங்க... ஒரு மசிரும் தெரியாது..." காம்புறாவே சாம்பலா போன... ஆளுகளுக்கு கோவம் வரும் தானுங்களே... கண்டவாக்குல ராங்கியில ஏசத் தொவங்கிட்டாங்க... "சத்தம் போடாதிங்க ஆளுகளா... இனி நடக்க வேண்டியத

பார்ப்போம்..." சீரங்கன் தலவரு பெரிய சத்தமா சொன்ன பிற்பாடு தானுங்க கொஞ்சம் அடங்கினுச்சி.

நெருப்பு எப்புடி புடிச்சிருக்கும்... இது தானுங்க கேள்வியா இருந்திச்சி.

"ஒன்னு வெளக்குத் திரியா இருக்கும் இல்லாட்டி கரண்டு பிரச்சினயா இருக்கும்..."

இவரு சாமி படத்தக்துக்கெல்லாம் கலர் லைட்டு போட்டு வச்சி இருக்குறாரு... கண்ட வாக்குல கலர் லைட்டு போட்டதுனால தானே லயங்க நெருப்பு புடிச்சிச்சி... மத்த தோட்டங்கள்ல நெருப்பு புடிச்சத வந்து பாத்திருந்தா தானே தெரியும்... ஒன்னுக்கும் வாரதில்ல... கேட்டா மட்டும் பெரிய கத கதப்பிங்க..."

"இப்ப பாருங்க எல்லாம் சாம்பலா போச்சி... நீங்க ரெண்டு பேரும் தான் ஆளுகளுக்கு நஸ்டஈடு கட்டணும்..."

பொடியனுங்களும் அது இதுன்னு பேச தொவங்கிட்டாங்க.

சேகரும் வாணியும் என்னென்னமோ வெளக்கம் சொன்னாங்க... ஆனா அது ஒன்னும் எடுபடலிங்க.

அவேன் ஒன்னு சொல்ல இவேன் ஒன்னு சொல்ல... கொஞ்ச நேரத்துல பெரிய சண்டையா போச்சி போங்க... அத நிப்பாட்ட பெரும்பாடா போச்சி... ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு தான் கொஞ்சம் அடங்கிச்சி... எல்லாம் எரிஞ்சி முடிஞ்சவுன்ன தான் பொலிஸ்காரனுங்க வந்தானுங்க... அவுங்கவுட்டு விசாரணைய பார்க்கணுமே அடே எங்கப்பா...

"தீயணைப்பு படயின்னு சொல்லுறானுங்க அது ஏன் தோட்டப்பகுதிக்கு வரவே மாட்டேங்கிது..." அப்புடின்னு பொலிஸ்காரன்கிட்ட கேட்டாங்க. எனக்குனா ஒரே சிரிப்பு தானுங்க வந்திச்சி.

நெருப்ப அணைக்கிறதுக்கு அவனுங்க வருவானுங்களா? சரி அப்புடி வர்ரதுக்கு ரோட்டு வசதி தான் இருக்குதுங்களா...?

நேரம் போகப் போக எல்லாம் கொஞ்சம் அமைதி ஆகிடுச்சிங்க... ஆளுக இருக்குறத எடுத்துக்கிட்டு கண் கலங்குன படி மாரியம்மா கோயில் பக்கம் போனாங்க...

"விநாயகர் படத்தக்கு முன்னுக்கு வச்ச வெளக்குள இருந்த திரிய சரியா அமைச்சி வச்சியான்னு எத்தனை தடவ கேட்டேன்... வாய தொறந்தியா... ஒனக்கு அட்டனுக்கு போற அவுசரம்... நீ பன்னுன வேலயில இன்னக்கி முழு லயமும் எரிஞ்சி போச்சி... நம்ம செட்டிபிக்கெட்டு . அது இதுன்னு எல்லாம் போச்சி..." சேகரு வேணி மேல சரியான கோவமா இருந்தாருங்கிறது நல்லா வெளங்கிச்சி.

"கோவிக்காதிங்க... பூசைக்கு போவனுமினு அவசரப்பட்டுட்டே.... நீங்க சரி பார்த்திருக்கலாம்..."

"பேசாம இங்க ஆலமரத்து புள்ளயார கும்புட்டுப்புட்டு... அம்மா அப்பாவுக்கு சாப்பாட வெள்ளனாவே குடுத்திருக்கலாம்... அவுங்களயும் பட்டினி போட்டுட்டு... ச்சி என்னா எழவோ தெரியல..."

குடிச வீட்டுக்குள்ள சேகரு மெதுவா குசுகுசுன்னு பேசுனது அவனுட்டு அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நல்லாவே கேட்டுச்சி... அவுங்க ரெண்டு பேரும் குடுச வாசலுல தானே ஒக்காந்து இருந்தாங்க.

ரெண்டு மணிய போல ஆலமரம் பக்கம் எட்டி பார்த்தேன்.

யாரோ ஆலமரத்து புள்ளயாருக்கு முன்னால காமாட்சி வெளக்க ஏத்தி வச்சிருந்தாங்க. வேகமா வீசுகிற இந்த காத்திலும் அது நூந்து போகாம சுடர்விட்டு எரியிறது இங்க இருந்து பார்க்கிறப்ப நல்லா தெளிவா தெரிஞ்சிச்சி. மூனு சாமிகளும் அதே மாதிரி நல்லா வெளிச்சமா தெரிஞ்சிச்சிங்க.

"நாங்க இருக்கிறப்ப... எங்கள மறந்துப்புட்டு... புது சாமி கொண்டு வாரீங்களாடா... அதயும் பார்ப்போம்..." அப்புடின்னு மூனு பேரும் கோவத்தோட சொல்லுற மாதிரி தானுங்க இருந்திச்சி.

# குடத்துள்ளிருந்து குன்றின்மேல் ஒளிரும் ஞானவிளக்குகள்

**செண்பகன்**

*'அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை' என்ற பல்துறை கட்டுரைகள் அடங்கிய பி. முத்துலிங்கம் எழுதிய நூல் பற்றிய பரவசப் பார்வை*

*வெளியீடு: தேசிய கலை இலக்கியப் பேரவை, டிசம்பர், 2023*
*பக்கம் : xii + 108*
*விலை : 500/=*




பண்டைய கிரேக்க தத்துவஞானி சோக்கிரடிஸ் ஆசிரியர்களை 'ஞான விளக்குகள்' என்றார். குடத்துள்ளிருந்து குன்றின் மேல் ஒளிரும் ஞானவிளக்குகள் எனும் ஆசிரிய வாண்மையின் வளர்ச்சியே எதிர்கால வளர்ச்சியும் மகிழ்ச்சியும் மிக்கதாக மனித சமூகம் மாற்றமடையும் ஒளி விளக்காக இந் நூலை ஆசிரியர் பி. முத்துலிங்கம் படைத்துப் பகிருகின்றார்.

அறிவுச் சமுதாயமாக மாறும் வளர்ச்சியில் அறிவுசார் பொருளாதாரத்தினை வடிவமைப்பதிலும் மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு- புதிய வார்ப்புகளாக அவர்களைப் புத்தாக்கம் செய்பவராகவும் ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

2017 ஒக்ரோபர் புரட்சியில் சோவியத் சோசலிச குடியரசு உருவாகிய போது லெனின் 'கல்வியும் மின்சாரமுமே சோசலிச நிர்மாணத்தின் அடிப்படைகள்' என்றார். "அமெரிக்கர் விஞ்ஞானத்தைக் கற்றனர். சோவியத் மக்கள் விஞ்ஞானத்தை நிகழ்த்தினர்" என்பதை நிறுவுகிறார்.

இலங்கையில் C.W.W. கன்னங்கராவினால் 1945ல் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டும் S.W.R.D. பண்டாரநாயக்கவினால் 1956ல் ஐம்பெரும் சக்திகளில் ஒரு பிரிவினராகிய ஆசிரியர்கள் என அங்கீகரிக்கப்பட்டு தாய்மொழிக்கல்வி அமுலாக்கப்பட்டும் 1980களில் கல்வியியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டும் 1990ல் தேசிய கல்வி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டும் நாட்டில் 2 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிந்தும் சமூகத்தில் மாற்றம் வளர்ச்சி ஏற்படத் தவறியதேன் என ஆசிரியர் 'நலம் ஓங்கிடுமாறு வருந்துவதனை' இந் நூலில் அவதானிக்கலாம்.

மாகாணங்கள் தோறும் ஆசிரிய வாண்மை அபிவிருத்தி அமைப்புகள் நிறுவிச் செயற்படுவதனால் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் என நம்புகின்றார்.

'இறுக்கமான பொருளாதாரத் தடையை இலங்கை அரசு விதித்திருந்த காலகட்டத்தில் கூட தேசிய பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்வினைக் காட்டிய வடமாகாணம் இன்று தொடர்ச்சியாகப் பெறுபேறுகளில் பின்னடைவைக் காட்டி வருவது தமிழினத்துக்கு மிகவும் வேதனை தரும் விடயமே" என வருந்துகிறார்.

இதற்கான காரணிகளைக் கண்டு தனது கருத்துக்களை முன்வைக்கிறார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்வி வலயப் பிரிப்புகளில் அசமத்துவம் நிலவுவதையும் அரசியல் தலைவர்களின் கல்வி பற்றிய அக்கறையீனமும், கல்வியில் அதீத தலையீடுகள் இடம்பெறுவதையும் பற்றிய விமர்சனங்களைச் சுட்டிக் காட்டி, புதிய வலயப் பிரிப்புகளும் பொருத்தமான ஆளணி நியமனங்களும் நிச்சயமாகப் பாடசாலைகளின் செயற்பாட்டை மேம்படுத்தும் என்கிறார்.

கோட்டங்களை இல்லாமல் செய்து வலயங்களின் எண்ணிக்கையை இரண்டு, மூன்று மடங்காக அதிகரிக்க

வேண்டும் என கல்வி அமைச்சு யோசித் திருப்பதாக வரும் செய்திகளை முன்வைக்கிறார்.

ஆசிரியர் இடமாற்றம், தொண்டர் ஆசிரியர் நியமனம், பெண் ஆசிரியைகளின் இடமாற்றங்களும் கிராமப் பாடசாலைகள், நகரமையப் பாடசாலைகள் என்பவற்றுக்கிடையிலான முரண்பாடும் தமிழ் அரசியல் தலைவர்களின் அநியாயத் தலையீடுகள் பற்றியும் தனது கவலையைப் பகிர்வார். பாடசாலைகளில் மிதமிஞ்சிய விழாக்களும் கல்வி கற்றல் செயற்பாடுகளின் நேரத்தை விரயமாக்குகின்றன என்பது அவரது கருத்தாகும்.

மாகாணங்களின் அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடிய ஜனநாயக நீட்சி, ஜனநாயக ஓட்டம் எமது தலைவர்களுக்கு மிகப் போதாமலே உள்ளது. எமது சமுதாயம் குளத்து நீரைப் போல் தேங்கியுள்ளது என ஆசிரியர் வருந்துகிறார்.

கொரோனா நெருக்கடியில் மாணவர் கல்வியில் 60%மான மாணவர்களுக்குத் தேவையான உதவி, அனுசரணை, வழிகாட்டல்கள் கிடைக்கவில்லை. சிறுவன் ஒருவன் தலைமையில் இயங்கிய கொள்ளையர் குழுவை பொலீசார் கண்டுபிடித்தமை இச் சூழலின் அபாயத்தைக் கட்டியம் கூறி நிற்கிறது என்பதை வெளிப்படுத்துகிறார்.

இலங்கையில் கிராமங்களில் கல்வியில் சமவாய்ப்பு இன்மை, வேலை வாய்ப்பின்மை, சமூக ஒடுக்குமுறை போன்றவற்றால் இளைஞர் கிளர்ச்சிகள் ஏற்படுகின்றன. இக் கிளர்ச்சி தொடர்பாக ‘இளைஞர் தொடர்பான தேசிய ஆணைக்குழு’ ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் றோயல் கல்லூரிக்குச் சுதந்திரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் ஆனந்தா, நாலாந்தாவுக்குச் சுதந்திரம், மக்கள் விடுதலை முன்னணி வீரக் கொட்டிய மகாவித்தியாலயத்துக்கு சுதந்திரம் கேட்டது’ என்றது.

இவ்வேளை தமிழ் மாணவர்கள் கல்வியில் எந்தப் பாடசாலைகளுக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பது பற்றி அக்கறைப்படுமளவுக்கு தமிழ்க் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலில் கல்விக்கு முதன்மை வழங்கப்படவில்லையோ என்ற சந்தேகமும் தோன்றுகிறது.

சிரேஷ்ட விரிவுரையாளர் ம. திருவரங்கன் தனது அணிந்துரையில் “நவதாராளவாத ஆதிக்கத்தின் காரணமாக ஆதிக்க சக்திகளின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தனிநபர் முன்னேற்றத்தில் மாத்திரமே கவனம் செலுத்தும் கல்வியினையே வழங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினை நாம் எதிர் கொள்கிறோம். சமூகம், கலை, கலாசாரம், வரலாறு, மனித நேயம், ஒடுக்குமுறைக்கெதிரான எதிர்ப்புணர்வு, கூட்டுச் செயன்முறை, பன்மைத்துவத்தினை மதித்தல் என்பவற்றை ஊக்குவிக்கும் கல்விக்கு அரசு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பாடப்புத்தகங்களிலும் சிறுபான்மை மக்கள், உழைக்கும் மக்கள், பஞ்சமர்கள், பெண்கள் போன்றோரின் வரலாறுகளும் அவர்கள் சந்திக்கும் வன்முறைகள், புறக்கணிப்புகள், சுரண்டல்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாணவர்கள் மத்தியில் சமூகத்தின் மத்தியில் மறுக்கப்பட்ட வரலாறு, கோட்பாடு, செய்முறை உதாரணங்களை கல்வி மூலமாகவும் தமது எழுத்துக்கள் மூலமும் ஒரு சிலரே துணிச்சலாக வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறு அடக்கப்பட்டிருக்கும் வரலாறுகளை ஆய்வு செய்து வெளிக்கொண்டு வரும் நூலாக திரு. பி. முத்துலிங்கம் அவர்களின் இந்த நூல் அமைந்திருக்கின்றது” என இந்நூலுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளார்.

அரசியல் பொருளாதாரம் பற்றிய ஆய்வில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் S.W.R.D. பண்டாரநாயக்க, சிறிமா, டட்லி, J.R, சந்திரிகா, மகிந்த, மைத்திரி ஆகியோரின் கால நாட்டின் சுதேசிய பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம், அணிசேராக் கொள்கை பற்றியும் ‘இலங்கையைச் சிங்கப்பூராக்க முயன்ற ஜே.ஆர். அதனை இந்து சமுத்திரத்தின் வெடிகுண்டாகவே மாற்றினார்” என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனநாயகம் என்றால் தேர்தல் எனக் கருதும் அரசியல் சூழலில் உள்ளூராட்சித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்களும் அரசியல் வாதிகளின் வெற்றியும் ஊழலும் ஆட்சி யதிகாரமும் பற்றியும் மக்கள் அடைந்த தோல்விகளையும் எடுத்து விளக்குகிறார்.

சமூகத்தில் சிந்தனை, செயற்திறன் என்பவை பற்றி விஞ்ஞானிகள் சேர் ஐசாக் நியூட்டன், வில்லியம் ஹெகல், சோக்கிரடிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், ரெனிராய்ட், டேகாட், ரூஷி, ஏங்கல்ஸ், கார்ல் மாக்ஸ், அல்பேட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் ஹாங்கிங், கலிலியோ கலீலி, லெனின் ஆகிய அரசியல் ஞானிகள், சமூக விஞ்ஞானிகள், பௌதீகவியல், கணிதம், அரசியல், சமூக பொருளாதாரம், சமூக மாற்றத்தில் சாதனை படைத்த விஞ்ஞானிகள் ஆகிய பலரின் சான்றாதாரங்களுடன் நிறுவுகின்றார். உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவு ஆகிய பொருளாதார முறைமை மனித சிந்தனை நடத்தையில் பிரதான இடத்தை வகிப்பதை கார்ல் மாக்ஸ் குறிப்பிடுகிறார் என சிந்தனை, செயல், சமூக மாற்றம் என்பவை பற்றி தனது மெய்ஞ்ஞானத்தை நிறுவித் தத்துவப் பயிற்சி என்பது மனித சமூகத்துக்கு மகிழ்ச்சியும் அளிப்பதென ஆணித்தரமாக முரசறைகிறார்.

பௌத்தம், மாக்சியம், ஜனநாயகம், இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்தவம் பற்றிய மதங்களையும் மாக்சீயத்தையும் ஒப்பு நோக்கி ஆராய்கிறார். இராமகிருஷ்ண பரமகம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றோரையும் குறிப்பிடுகின்றார். 2700 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய பௌத்தத்தினை விட 170 ஆண்டுகள் முன்தோன்றிய மாக்சீயத் த்தத்துவம் சமூக மாற்றத்தை சாதித்து நிதர்சனமாக்கியது என்பார். இயக்கவியல் பொருள்முதல்வாதம், வரலாற்றுப் பொருள்முதல் வாதம், ஐந்து விதிகளை உள்ளடக்கிய இயக்கவியல் இயக்கம், பரஸ்பர வினை, முரண்பாடு, அளவு, பண்பு ரீதியான மாற்றம், பாய்ச்சலில் முன்னேற்றம் என்ற விதிகள் மூலம் மனிதன், சமூகம், இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை விபரிக்கின்றார்.


பாட்டாளி வர்க்கத் தோற்றம் பற்றியும், உபரி மதிப்புக் கோட்பாடும், இழப்பதற்கு எதுவுமற்ற வெல்வதற்கு உலகமுள்ள' உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்' என்ற கோசம் உலக மாற்றத்தை விதைத்தது.

'உலகை தத்துவஞானிகள் வியாக்கியானம் செய்தார்கள். ஆனால் மாக்ஸியர்களின் பணி சமூகத்தை மாற்றுவதே என்பதை உரத்துச் சொல்லி 'இன்பமே எங்கள் இலக்கு' என்ற மனித வாழ்வின் உன்னதத்தை வெளிப்படுத்துகின்றார்.

1971 ஏப்ரலிலிருந்து 2019 ஏப்ரல் வரை இலங்கையில் இடம்பெற்ற ஆயுதக் கிளர்ச்சிகளைக் கால ஒழுங்கில் வரிசைப்படுத்தி வரலாற்று ஆய்வு செய்கின்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஏப்ரல் மாதக் கிளர்ச்சி இருவாரங்கள் இடம்பெற்று 18,000 இளைஞர்கள் கொல்லப்பட்டதுடனும் 19888-89 களில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு 60,000 இளைஞர்களைப் பலி கொடுத்தமை பற்றி வெளிப்படுத்துவதுடன் ஜே.வி.பி யினரிடம் காணப்பட்ட குறைபாடுகளான புரட்சிக்கான சித்தாந்தத் தெளிவீனம், வெகுஜன ஆதரவின்மை, சிறுபான்மை இனங்களை அங்கீகரிக்காமை, அவசர நிலைப்பாடு, பயங்கரவாதச் செயற்பாடு என்பவற்றை இனம் காட்டுகிறார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஜே.வி. பியினரின் தோல்வியை ஆராய்ந்தபின் 'கொரில்லாப் போர்'முறையை உகந்ததென வடகிழக்கில் 30 வருடங்கள் யுத்தம் நீடித்தது என்பதும் இந்திய தலையீட்டுக்கு வழிசமைத்தமையும் இறுதியில் இராணுவ யுத்தமாக நடந்து தோல்வியில் முடிந்தமையை கூறி அதற்கான காரணங்களை ஆராய்கிறார்.




***பின் தொடரும் வலி***

*மு. அநாதரட்சகன்*

*சிறுகதைத் தொகுப்பு*

*விலை :*

*வெளியீடு :*

*ஜீவநதி வெளியீட்டகம்*

*அல்வாய்*

1. கொரில்லாப் போராட்டம் வெகுஜனப் போராட்டமாக மாறாமை.
2. தென்னாசிய பிராந்தியத்தையே அச்சுறுத்தும் தொழில்நுட்பம்
3. சிங்கள சாதாரண மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்.
4. மனித வலு போதாமை.
5. பயங்கரவாதம் மீதான சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு.
6. முக்கிய பேச்சுவார்த்தைகளைச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறியமை.
7. போராட்டக் குழுக்களிடையே குறைந்தபட்ச ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறியமை.
8. முஸ்லிம்களை 24 மணி நேரத்தில் வெளியேற்றியமை.
9. போராட்டத்திற்கு ஆதரவாக எந்தவொரு நாட்டினதும் ஆதரவைப் பெற இயலாது போனமை.

இவ்வாறு தோல்வியுற்ற போதும் கட்டமைப்பு, நிதிவளம், நுட்பமான உளவுத்துறை, இராணுவ விஞ்ஞானப் பகுப்பாய்வு என்பவற்றில் இறுக்கமான குணாம்சத்தை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது என்பார்.

1987 ஜூலை 29-ம் நாள் இலங்கை இந்திய ஒப்பந்தம் நிறைவேறியமை பற்றியும் அதன் பின்புலம் பற்றியும் 13வது அரசியலமைப்புச் சட்டம் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

ஜே.ஆர். இவ்வொப்பந்தத்தை 1918-ல் சோவியத் ஒன்றியம், ஜேர்மனியுடன் செய்த Brest Litovsk ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டுப் பேசியதுடன், தனது

ஒரு பேட்டியில் "இலங்கை ஆளணி மற்றும் நிதி விரயமாகாமல் யுத்தத்தைச் செய்கின்றேன் என்றார்.

1988ல் 13வது திருத்தம் நிறைவேறியபின் யுத்தம் நடந்ததும் 1991-ல் ரஜீவ் காந்தி படுகொலையும் இலங்கை அரசியலிலும் தமிழ்த் தேசியப் போராட்டத்திலும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தின. இனப்பிரச்சினை இன்னும் இழுபட்டுக் கொண்டே போகிறது.

மங்களமுனசிங்க அறிக்கை, சந்திரிகாவின் 'பிராந்தியங்களின் ஒன்றியம்' எனும் தீர்வுப்பொதி, ஒஸ்லோ பிரகடனம், திஸ்ஸ விதாரண அறிக்கை என்பன வெளிவந்தன. ஆனால் அமுல்படுத்தப் படவில்லை என ஆதங்கப்படுகிறார் ஆசிரியர்.

இருபது வருடங்களாக வட-கிழக்கு மாகாண சபை இணைப்பு இருந்தபோது ஜே.வி.பி. 2005ல் இணைப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து 31.12.2006ல் இணைப்பு இரத்துச் செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் சூனிய நிலைக்குச் சென்ற மீளாத வரலாறாக இருக்க, புதிய அரசியல் யாப்பு எவ்வாறு அமையும் என்பதே மக்களின் ஆதங்கம் எனத் தனது சந்தேகத்தைப் பதிவு செய்துள்ளார்.

போருக்குப் பிந்திய சூழலில் எமது சமூகம் எதிர் கொள்ளும் பண்பாட்டு நெருக்கடிகள் பற்றியும், இன்றைய பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

பேராசிரியர் தயா சோமசுந்தரத்தின் சிறுவர்கள் பற்றிய ஆய்வுகள் எமக்கு அதிர்ச்சியைத் தருவன. வடபகுதியில் 57% ஒழுங்கீன நடத்தை, 29% நரம்புத் தளர்ச்சி, வன்னியில் சிறுவர் 80% ஆயுத மோதலில் மரணம், யாழ் மாவட்டத்தில் 2007 முதல் 2014 வரை சிறுவர் துஸ்பிரயோகம் 32% முதல் 99% அதிகரிப்பு எனப் பதிவு செய்துள்ளார்.

வறுமை, வேலையின்மை, விலை அதிகரிப்பு, ஒழுக்கம்- பண்பாட்டுப் பிறழ்வு, நுகர்வுப் பொருளாதாரத் துன்பங்கள் தொற்றியுள்ளன. மதுபானத்தில் யாழ் மாவட்டத்தில் கூடிய வருமானம் கிடைக்கிறது. வெளிநாட்டு மோகம், வெளிநாட்டுப் பணவருகை, பாராட்டு விழா, ஆசிரியர்கள் புலம்பெயர்வு, ஆடம்பர அவா, கல்வித்தர வீழ்ச்சி, 44,000 பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பௌத்த ஆலயங்களின் திடீர் நுழைவுகள், கையடக்கத் தொலைபேசி எனச் சீரழிவில் நாம் சிக்கியுள்ளோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் புதிய பண்பாடு, புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு என்பதற்காக புத்தக அரங்க நிகழ்வுகளும் 'நூறு மலர்கள் மலரவும், நூறு கருத்துக்கள் முட்டி மோதவும் வழிசெய்வோம்.

இத்தாலிய மாக்ஸிஸ அறிஞர் அந்தோனியோ கிராம்ஷியின் மக்களின் மேலாண்மையை குடியியல் சமூகத்தில் ஏற்படுத்தி விடுதலையை விரும்பும் பல்தேசிய இனங்களின் ஒன்றுபட்ட விடுதலைக்குப் போராடத் திடசங்கற்பம் செய்வதே இந்நூலின் சிந்தனை காட்டும் நடைமுறை மகிழ்ச்சியாகும்.

**'இஸ்ரேலின் ஆதிக்க இருப்பும் பலஸ்தீன மக்களின் உரிமையும்' என்ற தலைப்பில் இடம்பெற்ற**

## சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம்

**விசேட கலந்துரையாடல் –28.10.2023**











# தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50வது ஆண்டுவிழா

*புதிய ஜனநாயகம்- புதிய வாழ்வு- புதிய பண்பாடு*

*23.12.2023 அன்று யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50வது ஆண்டு விழாவில் வழங்கிய*

## *வாழ்த்துரை*

**சோ.தேவராஜா**

இன்றைய தினம் இன்பம் பொங்கும் இனிய நாள். திருநாள்.ஈழத்துக் கலை இலக்கிய நெஞ்சங்களின் உள்ளம் துள்ளும் நன்நாள்.

புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு என மகுடம் சூடிய தேசிய கலை இலக்கியப் பேரவை பிறந்த பொன்னாள். ஐம்பது ஆண்டுகள். பொன்விழா நாள்.

ஈழத் தமிழர் வாழ்வில் புத்தொளி வீசியநாள். உழைப்பாளர் உவகை பெற்ற உன்னத நாள். எழுச்சிநாள். ஏற்றம் பெறு கலை இலக்கிய ஊற்று- தோற்றம் பெற்ற தென்றல் வீசிய மார்கழித் திருநாள். பெருநாள். மகிழ்வுடன் கொண்டாடுவோம்.

'இன்பமே எங்கள் இலக்கு' என்பது கவிஞர் முருகையன் வாக்கு. அதுவே எங்கள் நோக்கு.

பாரதிக்குப்பின் பட்டுக்கோட்டைக்குப்பின் நச்சுக் கலை இலக்கியங்களின் ஊடுருவல்களாலும் தமிழகச் சினிமாத்தன விஷவித்துக்களாலும் தேக்கமடைந்த தமிமொழியின் கலை இலக்கியங்களை மீட்கும் பணி சவால் நிறைந்தது.

பல்தேசியக் கம்பனிகளின் எல்லைகள் மீறிய பகிரங்க உலக மய அத்துமீறல்களாலும், 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும்' நுகர்வியப் பண்பாட்டின் நுகத்தடியில் மக்கள் தம் சுயம் கெட்டு- பலம் இழந்து கொத்தடிமைகளாகித் துவளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இச் சூழலின் கெடுபிடிகளைத் தாங்கி, 'நாமும் நமக்கோர் கலையுடையோம். நம்மால் இயன்ற பணிகளை ஆற்றுவோம். சும்மா இரோம்' என்று உயிர் சிலிர்க்க உன்னத கலை- இலக்கியங்களை- உயிர்நிலைக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் படை புடை சூழ கலை- இலக்கியப் படையல்களைத் தேசிய கலை இலக்கியப் பேரவை கடந்த ஐந்து தசாப்தங்களாக வழங்கி வருகின்றது.

இலங்கை எங்கள் நாடு 'ஈழத்திரு நாடே என்னருமைத் தாயகமே' என பல்லினத் தேசியப் பண்பாடுடைய இலங்கைத் தீவின் புவியியற் படத்தை முகப்பாகக் கொண்டு 'தாயகம்' என்ற சஞ்சிகை தோழர் க. தணிகாசலம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு கடந்த ஐந்து தசாப்தங்களாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

கொழும்பில் இளைஞர் அணியினரை மையங்கொண்டு 1990களில் 'பயில்நிலம்' என்ற சஞ்சிகை சிலகாலம் வெளிவந்தது.

'தேசிய கலை இலக்கியப் பேரவையின்' 25வது ஆண்டுமுதல் அவ்வப்போது ஆண்டுமலராக 'புதுவசந்தம்' வெளிவந்தது. 1999-ல் முதலாவது 'புதுவசந்தம்' வவுனியாவில் தோழர் ந. இரவீந்திரனின் பொறுப்பில் மலையக கலை-இலக்கியக் கட்டுரைகளுடன் வெளிவந்தது.

மேலும் தேசிய கலை இலக்கியப் பேரவை பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் பாரதியார் நூற்றாண்டுவிழா ஆய்வரங்குகளை 1982ல் மாதந்தோறும் ஆய்வரங்குகளை நடாத்தியது. அதற்கு முதல் சீனத்துக் கலாசார மூதறிஞர் லூசுன் நூற்றாண்டுவிழாவையும் நடாத்தியது.

பாரதி ஆய்வரங்கில் ஆய்வாளர்களான அ.ஜெயரத்தினம், எம்.

ஏ. நுஃமான், சி. மௌனகுரு, சித்திரலேகா, சிவ. இராஜேந்திரன், ந. இரவீந்திரன், கே. செந்திவேல், எம். சின்னத்தம்பி, சி. தில்லைநாதன், இ. முருகையன் ஆகியோரின் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 'பாரதி பன்முகப் பார்வை' என்ற பெயரில் முதலாவது நூல், தே. க. இல. பேரவையினால் வெளியிடப்பட்டது.

இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை ஸ்தாபித்த மூலவர்களில் ஒருவரும் கண்டியில் 'பாரதி' என்ற இலக்கிய சஞ்சிகை ஆசிரியருமான தலாத்து ஓயா கே. கணேஸ் அவர்களின் லூசுன் கதைகள், வியட்நாம் கதைகள் மூங்கிற்பள்ளம், கூனற்பிறை ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

ஈழத்தின் பிரபல நாவலாசிரியர் சுபைர் இளங்கீரன், நீர்கொழும்பூர் முத்துலிங்கன், மட்டக்களப்பு செ. குணரத்தினம், சி. மௌனகுரு, சி. பற்குணம், தில்லைச்சிவன், சிதம்பர திருச்செந்திநாதன், திக்வல்லை கமால், க. தணிகாசலம், கே. செந்திவேல். ந, இரவீந்திரன், சோ. தேவராஜா, அழ. பகீரதன், இ. முருகையன், சி. தில்லைநாதன், எம். ஏ. நுஃமான், சண்முகதாஸ், சோ. கிருஷ்ணராஜா, கே. எஸ். சிவகுமாரன், சோ. பத்மநாதன், இளவாலையூர் விஜயேந்திரன், நந்தினி சேவியர், சட்டநாதன், சி. சிவசேகரம், க. சிதம்பரநாதன், ம. சண்முகலிங்கம், இரா. சடகோபன், இராகலை பன்னீர், யோ. பெனடிற்பாலன், நாவலன், மஹாகவி, வள்ளியம்மை சுப்பிரமணியம் ஆகிய இன்னும்பல ஈழத்து எழுத்தாளர்களின் பல்துறை சார் நூல்களை 1984 முதல் இன்றுவரை புத்தகப் பண்பாட்டியக்கத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய நூல்கள் தே. க. இ. பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன.

புத்தக-அரங்கப் பண்பாட்டிலும் தே.க.இ.பேரவை பல சாதனைகளைச் சாதித்துள்ளது. 1975-ம் ஆண்டுகளில் கொழும்பில் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை முதன்முதலில் சில மாதங்கள் தொடர்ந்து நடாத்தியது. இதில் நா. சுந்தரலிங்கம், அ. தாசீசியஸ் ஆகியோர் வளவாளர்களாக இளைய பத்மநாதனின் தலைமையில் இடம்பெற்றது. கவிதைப் பயிற்சிப் பட்டறை தொடர்ந்து கவிஞர் இ. முருகையனால் நடாத்தப்பட்டது.

தேசிய கலை இலக்கியப் பேரவை 1984க்குப் பின்னர் ஈழத்துக் கவிஞர்களின் கவிதைகளுக்கு ஈழத்து இசை மேதை எம். கண்ணனின் இசையமைப்பில் 'புதுவரலாறும் நாமே படைப்போம்' என்ற இசைப்பா அரங்கை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தியது. பின்னர் அப்பாடல்களை ஒலிப்பேழையாகவும் வெளியிட்டோம்.

மலையகக் கவிதைகளை தமிழகத்தில் சென்னை புக்ஸ், எம். பாலாஜி, பாடகர் வி. திவ்வியராஜனின் உதவியுடன் 'குன்றத்துக்குமுறல்' என்ற ஒலிப் பேழையையும் வெளியிட்டோம்.

ஈழத் தமி மக்கள் என்றால் 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்தப்பட்டு தமிகத்தில் அவமதிக்கபட்ட காலத்தில் சுபமங்களா ஆசிரியர் நாடகர் கோமல் சுவாமிநாதன் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று தமிழ்-சிங்களக் கலைஞர்களைச் சந்தித்து ஈழத் தமிழர்களின் இன்னல்களை தமிழகத்தி எடுத்துச் சொல்லு ஆதரவு வழங்க தே.க.இ.பேரவை செய்த பணி மகத்தானது.

இலண்டன் களரி அமைப்பினர் நாடகர் அ. தாசீசியஸ்சின் ஏற்பாட்டில் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் அரசு, மங்கை ஆகியோரின் முயற்சியில் 'நாராய் நாராய்' நாடகப் பயணத்தில் நாடக அரங்கஅக் கல்லூரி சார்பில் ஒரு குழுவுடன் இந்தியப் பயணம் சென்று கலைப் பயணத்துக்கு தே.க. இ. பேரவை முழுமையான ஒத்துழைப்பை வழங்கியதுடன் தொடர்ந்து ஐ.பி.சி என்ற ஊடகம் தோன்றிய சமயம் ஆரம்ப நடவடிக்கைகளில் இலங்கையில் பொறுப்பேற்று நடத்துவதில் தே.க.இ.பேரவை தனது ஒத்துழைப்பை வழங்கியது.

அரங்க ஆற்றுகைகளிலும் இலக்கிய ஆய்வரங்கு களிலும் கலை இலக்கியச் செயற்பாட்டிலும் பல்வேறு கலை, இலக்கிய அமைப்புகளுடனும் பேரவை இணைந்து செயற்பட்டது.

அறிஞர்களுடனும் அம்பலத்தாடிகள், அரங்காடிகள், மறுமலர்ச்சி மன்றம், நடிகர் ஒன்றியம், நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்றுக் கலைக்கழகம், விபவி, பெண்கள் கல்வி ஆய்வு நிலையம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், திருமறைக் கலாமன்றம், கலைமதி சனசமூக நிலையம், இருபாலை பாரதி சனசமூக நிலையம், அரியாலை காந்தி சனசமூக நிலையம், கே.ஏ. சுப்பிரமணியம் சத்தியமனை நூலகம், ஜீவந்தி வெளியீட்டகம், சங்கத் தமிழ்ப் பேரவை, மக்கள் களரி, சண் நாடகக் குழு, செம்முகம், உட்பட பல்வேறு அமைப்புகளுடன் இணைந்தும், உறவு பூண்டும், ஈழத்து கலை-இலக்கிய முயற்சிகளில் பரந்த முனைகளில் தே.க.இ.பேரவை செயற்பட்டுவருகிறது.

பேரவை தனித்துவ அமைப்பாக- ஸ்தாபன ஒழுங்கமைப்புடன் செயற்படும் ஓர் அமைப்பாகும். சமூக- விஞ்ஞான அணுகுமுறையில் மக்கள் கலை இலக்கியம் என்ற முனைப்புடன் பேரவை இயங்கி வருகின்றது.

பேரவை இலங்கை தழுவிய ரீதியில் அட்டன், ராகலை, நுவரெலியா, தலவாக்கொல்லை, கண்டி,

மாத்தளை உட்பட மலையகப் பிராந்தியத்திலும், கொழும்பிலும், வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் பிராந்திய பேரவைகளை அமைத்து இயங்கிவரும் பரந்தவோர் அமைப்பாகும்.

இதுவரை தே.க.இ.பேரவையின் இலக்கு, இயக்கம், சாதனை என்பவற்றின் சிறு முன்னுரை மட்டும் வழங்கியுள்ளேன்.

2

இனி நாம் இங்கிருந்து செல்லவேண்டிய திசைமார்க்கம் என்ன? எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டியுள்ளது.

நம் நாட்டிலும் உலகிலும் நடைபெறும் யதார்த்த நிலைமையை- ஸ்தூலமான- பொருண்மியமான நடப்பியலை- நிகழ்வுகளை- நிலைமைகளை ஆராய்வதே உண்மையின் உயிராகும்.

கண்டறிந்த உண்மையை நிலைபெறச் செய்து நன்மை கிடைக்கும் வண்ணம் உயிர்நிலைப் புத்திஜீவிகளின் (organic intelectuals), அறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களைத் தொடர்புபட்டு, உறவாடி, நட்புடன் 'நூறு மலர்கள் மலரவும் நூறு கருத்துக்கள் முட்டி மோதவும் - ஐக்கியத்துக்கான அவாவிலிருந்து போராடவும் ஒன்றுபட்டுச் செயற்படுவது நம் அனைவரினதும் பணியாகும்.

நாம் வாழும் சமகாலச் சமூகக் கடுழியத்துக்கெதிராகச் சங்காரம் நிகழ்த்தி சமத்துவப் பூங்காவை - 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை- நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பது நிரூபிக்கப்பட்டு- முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை, ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை' என நாம் அனைவரும் ஒன்றுபட்டு முரசறைவோம்.

உழைக்கும் மக்கள் தமது சொந்த வர்க்க நலனை விட்டுக்கொடுத்து ஏனைய வர்க்கங்களையும் அணைத்துக் கொள்ளும்போதே அவை மீதான மேலாண்மை சாத்தியமாகும் போதே மக்கள் இயக்கம் என்பது தேசிய அங்கீகாரத்தைப் பெறும் என்பது அந்தோனியோ கிராம்ஷியின் கருத்தாகும். இவரது கருத்துக்கள் எம்மை வழிநடத்தும் ஆயுதங்கள் ஆகும். சொற்களும் ஆயுதங்களே என்பது மெக்சிக்கோ போராளி மார்க்குவேஸின் கருத்தாகும்.

கருத்து நிலை (concepts) என்பதுதான் சமூகம் பற்றிய ஆய்வுகளின் கருவிகளாகும்.

ஜனநாயகம் என்பது மக்களின் சிந்தனைகளைக் கட்டுப்படுத்திச் செயற்படத்தூண்டுவதே என்பது நோம்சோம்ஸ்கிஸின் கருத்தாகும்.

சமூக உறவுகள் எனும் மேற்கட்டுமானத்தின் ஒருபகுதி தான் குடியியல் சமூகம் (civil society) ஆகும். இதில் தனிப்பட்ட அந்தரங்க உறவுகளுடைய, பண்பாட்டு நிறுவனங்கள் மீது நாம் கவனம் செலுத்தவேண்டும். வெகுஜனப் போராட்டங்களின் களமும் குடியியல் சமூகமேயாகும். இனம், சாதி, பால், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் எழும் முரண்பாடுகளும் போராட்டங்களும் குடியியல் சமூகம் எனும் வெகுஜனத் தளத்தில் வெளிப்படும். கருத்தியல் மேலாண்மையின் கருத்துநிலையின் உறைவிடம் குடியியல் சமூகமாகும்.

கருத்தியலால் கவர்ந்திழுத்து அடக்குமுறைக்குப் பதிலாக மேலாண்மை என்ற உபாயத்தின்மூலம்



ஆளுவோர் தமது ஆட்சியை நிலைநிறுத்துகின்றனர். எனவே ஊடக ஊதாரித்தனம், பழைய பண்பாட்டுத் தேக்கம் என்பவற்றால் பொது மக்களின் சம்மதம், இசைவு, இணக்கம் மூலமே மேலாண்மை செய்யப்படுவதனால் மக்களை மீட்க வேண்டிய கடப்பாடு பண்பாட்டு நிறுவனங்கள் மீது சுமத்தப்படுகிறது.

கருத்து நிலைக்கு உயிரும் உருவும் கொடுப்போர் பூர்வீகப் புத்திஜீவிகளான எழுத்தாளரும், கலைஞரும், அறிஞருமேயாவார்.

உலகமயத்தின் நுகர்விய நுகத்தடியில் மட்டுப் பட்டுள்ள மக்களுக்கு– 'இரண்டாயிரமாண்டுப் பழைய சுமையிலும்– பண்பாட்டின் பேரால் பல சோலிகளுக்குள் ஆட்பட்டும்– அகப்பட்டுக் கடூழியம் அநுபவிக்கும் மக்கள் மத்தியில் எதிர்ப்பு இலக்கியத்தின் மூலமும்– புத்தாக்க கருத்தியலும்– கலைகளும் வழங்கி 'சங்காரம் நிசமென்றே சங்கே முழங்கு' எனச் சூழுரைப்போம்.

**புதிய ஜனநாயகம் வாழ்க**
**புதிய வாழ்வு மலர்க**
**புதிய பண்பாடு ஓங்குக**

தேசிய கலை இலக்கியப் பேரவை வளர்க என வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

# தம்பா கவிதைகள்

## கட்டுப்பாடு

*பாவம்*
*அவர்கள் என்ன தான்*
*முஸ்ட்டி வளர்த்து*
*மீசை முறுக்கி*
*மல்லனாகி கர்ச்சித்து*
*மனிதனை,*
*உண்மையை*
*எல்லை கடக்க தடை போட்ட போதும்*
*தோட்டாக்களும்*
*ராக்கெட்டுகளும்*
*பொய்களும்*
*எல்லைகளை கடந்து*
*அதி சுதந்திரமாக நடமாடுகின்றன.*



## ஆசீர்வதிக்கப்பட்டவர்

*உனது வரிப்பணத்தை உறிஞ்சி*
*அயலவனின் அலலது சகோதரனின்*
*உயிரை உறிஞ்சி கொள்ளட்டும்*
*இழப்பை*
*துயரை*
*கவலையை*
*வேதனையை*
*வன்மத்தை*
*வாழ்நாள் முழுதும்*
*சுமையாய் சுமந்து திரி.*
*ஆயுத வியாபாரிகள் மட்டும்*
*செல்வத்தை*
*அதிகாரத்தை*
*நிம்மதியை*
*மகிழ்வை ஏகபோகத்துக்கு*
*கொண்டாடி தீர்க்கட்டும்.*
*ஆமை ஓட்டுக்குள்*
*இனம் என சுருங்கிக்கொள்.*

# பல்கலைக்கழக மாணவியின் வாக்குமூலம்

சை.கிங்ஸ்லி கோமஸ்



மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலை ஒன்றில் அதிபராக பல்கலைக்கழக பட்டதாரியான ஆசிரியையை தேடி ஆரம்பிக்க இருக்கும் ‘மேட்டு நிலத்தின் குரல்’ என்னும் மாதாந்த பத்திரிகைக்கு பிரதான ஆசிரியராக கடமையாற்ற அழைப்பதற்காக சென்று கொண்டிருந்தேன். கண்டியில் இருந்து அட்டன் வந்து கடுமையான மழை காரணமாக மண் சரிவுகள் ஏற்பட்டதனால் பேருந்து வந்தடைய 4.1/2 மணித்தியாலங்கள் ஆகிவிட்டது அட்டனிலிருந்து மஸ்கலியா வருவதற்கு மதியம் ஒரு மணி ஆகிவிட்டது. மஸ்கெலியா நகரில் உணவு உண்பதற்காக கடைகளைத் தேடிப் பிடித்து பகல் உணவை முடித்துக்கொண்டு மறு பஸ் பிடித்து லக்சப்பான தோட்டம் வந்தடைய மாலை 3 மணி ஆகிவிட்டது. அந்த ஆசிரியைக்கு கடிதம் மூலம் குறிப்பிட்ட திகதி அங்கு வருவேன் என்று அறிவித்திருந்தேன் அவரும் என்னை எதிர்பார்த்து காத்திருந்தார்.

புன்னகையுடன் வரவேற்றார் அங்கு போன பின்பு தான் அந்தப் பாடசாலையின் அதிபர் அவர் என்று கண்டு கொண்டேன். ஒரு ஆசிரியர் புலமை பரீட்சை மாணவர்களுக்கு வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். தொண்டர் ஆசிரியை ஒருவர் அந்த அதிபருடன் காரியாலயத்தில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார்.

தோட்டத்து பாடசாலை ஆண்டு ஆறு வரை மாத்திரமே உள்ள பாடசாலை. பாடசாலையை சுற்றியும் தோட்ட குடியிருப்புகள் குடியிருப்புகளில் இருப்பவர்கள் பாடசாலைக்கு வருவோரையும் போவோரையும் நோட்டமிடுவதும் சிலர் பாடசாலையின் காரியாலயத்தை வந்து எட்டிப் பார்ப்பதுமாக இருந்தனர். ஒரு

பெண் தொழிலாளி கொழுந்து கூடையையும் மாட்டிக்கொண்டு மட்ட குச்சியையும் கையில் ஏந்தியவாறு காரியாலயத்திற்கு வந்து "பெரிய பாப்பா ஸ்கொலர்சிப் வகுப்பு நடக்குதா? நம்ம சுரேஷுக்கு சரியான காய்ச்சல். அதனால ஸ்கூலுக்கு வரல. நாளைக்கு வருவான்" என்று கொஞ்சும் மொழியிலும் பாசத்துடனும் அதிகாரத்துடனும் கூறினாள். தோட்டப்புற அழகியலுக்கு ஏற்ப அந்த சூழல் மிக சுவாரசியமாக இருந்தது. அந்த அதிபரின் பதிலும் என்னை மிகவும் கவர்ந்தது.

"லட்சுமி அக்கா, பரவால்ல நல்லா படிக்கிற பையன். கட்டாயம் ஸ்காலர்ஷிப் பாஸ் பண்ணுவான். நாளைக்கு எப்படியாவது ஸ்கூலுக்கு அனுப்புங்க. வீட்டுல பெத்தாயி பாட்டிக்கு சுகம் இல்லைன்னு சொன்னீங்க இப்ப எப்படி?"

"விபூதி புடிச்சி சாமி பார்த்து எதுவுமே சரி வரல அடுத்த கிழமை முஸ்லிம் பள்ளி வாசலில் இருந்து மந்திரிச்ச தண்ணியை கொண்டு வந்து கொடுத்து பார்ப்போம்" என்றாள் அந்த பெண்.

"ஐயையோ லட்சுமி அக்கா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போங்க" என்றார் அதிபர்.

அதிபர் எனக்காக ஆயத்தம் செய்திருந்த பிஸ்கட் மற்றும் ஒரேஞ்ச் பார்லி என்பவற்றை கொடுத்து உபசரித்தார். பின்பு அவரிடம் கேட்டேன் "எனக்கு கண்டிக்குப் போக பஸ் எத்தனை மணிக்கு கிடைக்கும்" என்று.

1993 ஆம் ஆண்டு போக்குவரத்து வசதிகள் இல்லாத காலம். அதிபர் சொன்னார்: "சார் இன்னைக்கு உங்களால போக முடியாது இனிமேல் இங்கே இருந்து மஸ்கலியாக்கு பஸ் இருக்காது நாளைக்கு போகலாம்"

என்னை விட கல்வி தரத்தில் உயர்வானவரும் பாடசாலை ஒன்றில் அதிபருமான அவர் என்னை சேர் என்று அழைப்பது எனக்கு சற்றுச் சங்கடமாக இருந்தது. அதைவிட மீண்டும் போக பஸ் இல்லை தங்குவதற்கு நான் ஆயத்தமாகவும் வரவில்லை என்று பல விடயங்கள் என் சிந்தனையை சிதைவடைய செய்தது. சரி எதுவாக இருந்தாலும் முகம் கொடுப்போம்.

"உங்களைப் பற்றி திரு ஜேசுகோடி என்னிடம் நிறைய கூறியுள்ளார். உங்கள் திறமைகள் பற்றியும் கூறியுள்ளார். மஸ்கெலியா பிரதேசத்தின் பல்கலைக்கழகத்துக்கு சென்ற முதலாவது மாணவியும் நீங்கள் தான் என்று கூறினார். ஆனால் உங்களைப் பார்க்கும்போது மிகவும் எளிமையாக இருக்கின்றீர்கள்" என்றேன்.

கலகலவென்று சிரித்த அவர் "சரி வந்த விடயத்தை கூறுங்கள் "என்றார்.

"நான் ஒரு அரசு சார்பற்ற நிறுவனத்தில் வேலை செய்கின்றேன். எமது நிறுவனம் ‘மேட்டு நிலத்தின் குரல்’ என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றது. எமது நிறுவன நிர்வாக அதிகாரி அதற்காக உங்களின் பெயரை சிபாரிசு செய்துள்ளார். நீங்கள் அந்த பொறுப்பை ஏற்க வேண்டும்" என்றேன்.

அரசு சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக நம்பிக்கை இழந்திருந்த அவரது அமைதி என்னை சங்கடத்திற்கு உள்ளாக்கியது.

"சார் கூறுகிறேன் என்று கோவிக்க வேண்டாம். பல்கலைக்கழக காலம் முதல் இன்று வரை அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஏமாற்றுகளுக்கு முகம் கொடுத்தவள் என்ற வகையில் இதை உங்களிடம் கூறியே ஆக வேண்டும் கேளுங்கள்" என்று கூறிய போது புலமை பரிசில் மாணவர்கள் வகுப்பு முடிந்து வந்து "டீச்சர் தேங்க்யூ டீச்சர் பாய்" என்று கூறிக்கொண்டு வரிசையாக போய்க்கொண்டிருந்தனர் .

வகுப்பு எடுத்த ஆசிரியரும் பாடசாலையின் வகுப்புகளை மூடிவிட்டு சாவியை கொண்டு வந்து அதிபரிடம் கொடுத்தார். அவரிடம் என்னை ஊடகவியலாளன் என்றும் கட்டுரையாளர் என்றும் அறிமுகப்படுத்தினார். நானும் ஆச்சரியத்துடன் அதிபரை பார்த்தேன்.

"உங்களின் கட்டுரைகளை வாசித்துள்ளேன்" என்றார். நானே என்னையும் எனது எழுத்துக்

களையும் மதிக்காத போது இவர் என்னை தெரிந்து வைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சியை தந்தது. சில நேரங்களில் பலர் கட்டுரைகள் கதைகளை விமர்சனங்களை வாசித்து விட்டு தெரியாதவர்கள் போல் இருப்பதும் ஒரு வகையான இருட்டடிப்பே என்று தோன்றியது இந்த காலத்திலும் ஒரு அதிபர் வாசிக்கின்றார் என்றால் அது ஆச்சரியப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அநேகமான ஆசிரியர்கள் வாசிப்பதில்லை. அவர்களின் அறிவை விருத்திப்படுத்திக் கொள்வதில்லை என்ற சிந்தனை எனது எண்ணத்தில் ஓடியது.

பல்கலைக்கழக பட்டதாரி சிறப்பு சித்தி பெற்றவர். நல்ல மொழி வளம். இவர் ஏன் இந்த சிறிய பாடசாலையிலே வந்து அதிபராக இருக்கின்றார் என்ற எண்ணம் எனது மனதில் ஓடியது.

பாடசாலை காரியாலயத்தை மூடிய அவர் பாடசாலையில் ஏனைய வகுப்புகளையும் மண்ட பங்களையும் சென்று பார்வையிட்டு வந்தார். "வாருங்கள் வீட்டிற்கு போகலாம். பாடசாலை அதிபரின் விடுதி இங்குதான் இருக்கின்றது. அங்கே போவோம் "என்றார்.

நான் தயங்கிய போது "அப்பா அம்மா நான் மூவரும் அங்கு இருக்கின்றோம். அப்பாத்தான் இந்த பாடசாலையின் முன்னாள் அதிபர். அவர் ஓய்வு பெற்ற போது விடுதியை அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும் என்ற காரணத்தினால் நகரத்தில் இருந்து மகா வித்யாலயத்தில் கல்வி பொது தராதர, உயர்தர வகுப்பிற்கு கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது இந்த பாடசாலையைப் பொறுப்பேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது" என்றார். அப்போதுதான் எனது மனதில் ஏற்பட்ட கேள்விக்கு பதில் கிடைத்தது.

அழகான தேயிலைத் தோட்டத்தில் அமைந் திருந்த அழகான குளமும் அதனை ஒட்டி இருந்த மாடசாமி கோயிலும் என்னை மிகவும் கவர்ந்தது. கதைத்துக் கொண்டே வரும்போது வீதியில் போனவர்களும் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்களும் அதிபர் என்று எந்த மரியாதையும் இன்றி பெரிய பாப்பா, பெரிய பாப்பா என்று கதை பேசினர். தான் படித்த பாடசாலையின் முதலாவது பல்கலைக்கழக மாணவி தான் என்றும் குடும்பத்தில் தம்பி தங்கைகள் திருமணம் முடித்து விட்டனர் என்றும் ஒரு தம்பியும் ஒரு தங்கையும் கல்வியியல் கல்லூரியில் பயின்று கொண்டிருப்பதாகவும் கூறினார்.

பழைய காலத்து தோட்ட உத்தியோகத்தர் களின் விடுதி. பழமையான பொருட்கள் அங்கும் இங்கும் புத்தகங்களும், வீட்டு முன் அறையில் மாணவர்கள் பலர் தரையில் அமர்ந்து படித்துக் கொண்டும் இருந்தனர். அதிபரின் தந்தையிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவரும் என்னை ஏற இறங்க கண்களாலேயே சோதனை செய்தார். அவரின் தாய் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆனாலும் அன்புடன் உபசரித்தார்.

அழகான மேட்டு நிலம் ஒன்றில் அமைந்திருந்த அந்த விடுதியில் இருந்து பார்க்கும் பொழுது மஸ்கிலியா நீர்த்தேக்கம் மிகவும் அழகாக தெரிந்தது. அடுத்தடுத்து அந்த விடுதிக்கு மாணவர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஆங்கிலம்.சிங்களம். தமிழ். கணிதம். சமூகக் கல்வி போன்று பாடங்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தனர் அதிபரும் அதிபரின் தந்தையும். அவர்கள் மிக கடமைப்பாட்டுடன் அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தனர். மாலை 6:30 மணிக்கு பெரிய இரண்டு பேர் வந்தனர் அவர்களுக்கு ஆங்கிலமும் தமிழும் கற்றுக் கொடுத்தார் அதிபரின் தந்தை. அவர்களின் பேச்சுகளில் இருந்து அவர்கள் இருவரும் அந்தத் தோட்டத்தின் சின்னதுரை என்று நான் ஊகித்துக் கொண்டேன். அவர்கள் போகும் போது மிகவும் மரியாதையுடன் விடை பெற்றுச் சென்றனர்.

இரவு 8 மணிக்கு பின் அந்த வீடு சற்று அமைதியானது. அதிபரின் தாயார் தேநீரும் முறுக்கும் பரிமாறினார். பின்பு முன்னாள் அதிபரும் இந்நாள் அதிபரும் முன் அறையில்

அமர்ந்து என்னோடு கதைக்கத் துவங்கினார்கள். நான் வந்த விடயத்தை பற்றி அதிபர் அவரின் அப்பாவிடம் கூறினார். அப்பா கதைக்க துவங்கினார்.

"தம்பி இந்த வீட்டில் தான் யுக யுகம், அகரம், குன்றத்து அபிவிருத்தி நிலையம் போன்ற அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஆரம்பக் கூட்டங்களை நடத்தினர். எங்களின் பெயர்களையும் அந்த அமைப்புகளின் பதவிகளில் போட்டனர். ஏதேதோ பேசினார்கள். காலப்போக்கில் வெளிநாட்டு நிதி உதவிகளை பெற்று அவர்கள் சுகபோகமாய் வாழத் தொடங்கிவிட்டனர். பிறகு எங்கள் வீட்டு பக்கம் வருவதும் இல்லை. எங்களை அழைப்பதும் இல்லை. எனவே உங்கள் போன்றோரை நாங்கள் நம்புவதில் பிரச்சினை உள்ளது" என்றார்.

அதற்கு அதிபர் "அப்பா... எல்லோரும் அப்படி இல்லை. இவரது அமைப்பின் நிர்வாக அதிகாரி ஒரு வணக்கத்திற்குரிய கத்தோலிக்க குருவானவர். அவரை எனக்கு பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலேயே தெரியும்" என்று எனது சங்கடத்தை குறைத்தார்.

பின்பு கூறினார் "சார்... நாங்கள் பல் கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் பல்கலைக் கழகத்தில் எமக்கு சீனியராக இருந்த லிங்க பிரகாசம் பல்கலைக்கழகத்தில் அவர் படிக்கும் காலத்திலேயே என் ஜி ஓ வைத்திருந்தார். அவர் என்னையும் எனது தோழி தீபனாவையும் பூசல்லாவை பிரதேசத்தில் பாடசாலைக்கு கல்வி பொது தராதர உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்கு செய்வதற்காக போகச் சொல்லி நாங்கள் எமது கையில் சாப்பிடுவதற்காக வைத்திருந்த காசை பஸ்சுக்கு செலவு செய்து போய் படித்துக் கொடுத்தோம். அப்போது சிரஞ்சீவி என்ற சீனியரும் லிங்க பிரகாசமும் பணம் தருவதாக கூறி எம்மை ஏமாற்றி விட்டனர். பொய்யாக இருந்தால் இன்று பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கும் எனது தோழி தீபனாவிடம் கேட்டுப் பாருங்கள்" என்றாள். நானும் மிகவும் சங்கடப்பட்டு அமர்ந்திருந்தேன். அதிபரின் தாயார் இரவு உணவு தயார் செய்து சாப்பிட அழைத்தார். மிகவும் சுவையாக டின் மீன் கறியும், கத்தரிக்காய் கறியும், இலைகோவா கீரை சுண்டலும், பப்படமும் பரிமாறினார். பகல் மஸ்கெலியா நகரில் ஹோட்டலில் சாப்பிட்ட தண்ணீர் போன்ற சாப்பாட்டோடு ஒப்பிடும் போது இது தேவாமிர்தமாக இருந்தது. அதிபரின் தந்தையும் நானும் சேர்ந்து சாப்பிட்டோம். அதிபர் போதும் போதும் என்ற போதும் அன்பாக உபசரிப்பதில் அவர் மிக உயர்ந்தவர் என்று காட்டிவிட்டார். சாப்பிட்ட பின்பு தோட்டத்தில் விளைந்த பப்பாசி பழத்தைக் கொண்டு வந்து தந்தனர் மிகவும் சுவையாக இருந்தது.

உணவிற்குப் பின்பும் எங்கள் சம்பாசனைகள் தொடர்ந்தது. அதிபர் தொடர்ந்தார்.

"சார் உங்களுக்கு தெரியுமா செபஸ்டியன் ஜீவன் என்ற பிரபல எழுத்தாளரை?"

"ஆமா ஆமா அவர் எனது நல்ல நண்பர். எனது தந்தையினதும் நண்பர் என்னையும் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தவர்" என்றேன் பெருமையுடன்.

என் கண்களை பார்த்து சிரித்து விட்டு கூறினார். "சார் எனது பல்கலைக்கழக பட்டம் தமிழ் ஸ்பெஷல். எனது தீசிஸ் 'மலையக கவிஞர்களும் தொழிலாளர் வாழ்வியலும்' என்ற தலைப்பில் செய்தேன். மலையகத்தில் உள்ள சகல கவிஞர்களின் வீடுகளுக்கும் சென்றே அந்த ஆய்வினை செய்தேன். குறிஞ்சித் தென்னவன், மல்லிகை சீக்குமார், மொழி வரதன் போன்றோரின் வீடுகளில் போய் தங்கி இருந்தே எனது தீசிசுக்கு தரவுகளை திறட்டினேன். அப்போது எனக்கு எனது பல்கலைக்கழக தோழி அன்னம் கவிஞர்களின் வீடுகளுக்கு அழைத்துச் சென்று உதவி புரிந்தார். மிகவும் கஷ்டமான காலம்... பஸ்ஸிற்கு கூட காசு இல்லாத காலம். பல தோட்டங்களுக்கு கால்நடையாக சென்று பலரை காணக் கூடியதாக இருந்தது. தீசிசை செய்து பல்கலைக்கழகத்திற்கு சப்மிட் செய்து விட்டு எனது பிரதியை

வைத்திருந்தேன். உங்கள் நண்பர் செபஸ்டின் ஜீவன் ஒரு நாள் என்னைத் தேடி வந்தார். எனது தீசிசை பார்த்துவிட்டு தருகிறேன் என்றார். கொடுத்தேன்... எனது திசீசை வைத்து சின்ன சின்ன புத்தகங்களாக பத்து புத்தகங்களுக்கு மேல் அவரது பெயரில் வெளியிட்டு பெயரும் புகழும் பெற்று விட்டார். அவருக்கு பல விருதுகளும் கிடைத்துள்ளது... ஆனால் அந்த புத்தகங்களில் ஒரு இடத்தில் கூட எனது பெயரை அவர் கூறவில்ல" என்று கண்கலங்கியவாறு கூறினார்.

ஏனடா இங்கே வந்தோம் என்று ஆகிவிட்டது எனக்கு. பின்பு எனக்காக ஆயத்தப்படுத்தி இருந்த படுக்கை அறைக்கு சென்றேன். மிக நேர்த்தியாக தயார் செய்யப்பட்டிருந்த படுக்கையையும் சுத்த மாக போடப்பட்டிருந்த படுக்கை விரிப்புகளும் தலையணையும் நேர்த்தியாக அயன் செய்து வைக்கப்பட்டிருந்த சாரமும் சேட்டும் என்னை சங்கடத்திற்கு உள்ளாக்கியது. 'என்னால் இவர் களுக்கு சிரமமோ' என்று எண்ணத் தோன்றியது.

நான் ஆடை மாற்றி முகம் கழுவ வெளியே எட்டிப் பார்த்தபோது அதிபர் கேத்தலில் சுடு நீரோடு காத்திருந்தார். எனக்கு முகம் கழுவுவ தற்கு படுக்கை அறைக்கு வந்ததும் வெந்நீர் கோப்பையுடன் வந்த அதிபர் "எங்கள் வீடு அவ்வளவு வசதியாக இல்லை. ஆனாலும் எங்களால் முடிந்தது... தூங்குங்கள். காலை நானும் அட்டன் போக வேண்டும் போகலாம்" என்றார். வீடு வசதி இல்லாவிட்டாலும் அந்த வீட்டில் அன்பும் பாசமும் கோடி கோடியாய் கொட்டி இருந்ததனை காணக் கூடியதாக இருந்தது.

கதைத்துக் கொண்டே அட்டன் நோக்கி பேருந்தில் வந்த போது ஒரு காரியாலயத்தை காட்டி "மலையகத்தில் பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் சுகாதார மேம்பாட்டுக்காகவும் நோர்வே நாட்டிலிருந்து நிதி உதவி பெறும் நிறுவனமே இது. இந்த நிறுவனத்தின் அதிகாரிக்கு சமூக சேவைக்கான விருதுகள் கூட வழங்கப்பட்டுள்ளது. இந்த




**கடலலைகளை மேவிய கதை**

*இறுதிப் போரில் மக்கள் அவலம் குறித்த நாவல்*

*அலெக்ஸ் பரந்தாமன்*

*கைவேலி, புதுக்குடியிருப்பு*

*விலை : 950/-*

அதிகாரி தனது சொந்த குடும்பத்தையும் பிள்ளைகளையும் அனாதையாக்கிவிட்டு இந்த நிறுவனத்தில் தொழில் செய்யும் சிங்கள பெண்ணுடன் தனிக் குடித்தனம் வந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இந்த அதிகாரியினால் ஏமாற்றப்பட்ட பெண்களின் கதைகள் ஒவ்வொன்றும் காவியமாக எழுத லாம். இவ்வாறான அயோக்கியர்கள் தான் மலையகத்தில் சமூக சேவை அல்லது மக்கள் தொண்டு என்ற பெயரை நாசம் செய்தவர்கள்" என்று கூற குறித்த அந்த நபரை எனக்கும் தெரியும் என்று கூறி மூக்குடை பட விரும்பாமல் மௌனித்திருந்தேன்.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற காலத்தில் இருந்து இன்று அதிபராகியும் அரசு சார்பற்ற அமைப்புகள் கிறிஸ்தவ சிறிய சிறிய சபைகள் அவர்களையும் மலையகத்தில் வாழும் ஏழை மக்களையும் எவ்வாறு ஏமாற்றுகின்றார்கள் என்பது பற்றியும் மக்களின் அபிவிருத்திக்காக பெற்ற பணத்தை முகாமைச் செலவுக்காக செலவு செய்து விட்டு எந்தவித அபிவிருத்தியும் செய்யாமல் இருப்பது தொடர்பாகவும் பல கதைகளைக் கூறினார். இவரது வாக்குமூலம் அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் எனக்கும் மிக விரைவில் எனது தொழிலை மாற்றி அரசு சேவையில் அல்லது பட்டப் படிப்புக்கு ஏற்ற வேலை ஒன்றினைத் தேட வேண்டும் என்ற சிந்தனையுடனும் அவர்களின் அன்பின் பூரணத்துவத்திலும் அட்டனிலிருந்து கண்டி பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன்.

முன் அட்டை உள்பக்க தொடர்...

# ஒரு பலஸ்தீனக் குரல்

உன் மனச்சாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
உன் சித்தம் கலங்கிவிட்டது

நீ எங்களை விலங்குகள் என்கிறாய்
காட்டுமிராண்டிகள் என்கிறாய்
நாகரீகத்தின் எதிரி என்கிறாய்
எங்களை முற்றாக அழித்துவிட
ஆசைப்படுகிறாய்
எங்களை அழித்துவிட்டு
நிம்மதியாய்த் தூங்கலாம்
எனக் கனவுகாண்கிறாய்

அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது
பிறரின் அமைதியைக் குலைத்தவனுக்கு
ஏது அமைதி
பிறரின் சுதந்திரத்தைப் பறித்தவனுக்கு
ஏது சுதந்திரம்

இன்னும் இன்னும் ஆயிரம் ஆயிரம்
குண்டுகளை வீசி நீ எங்களை அழிக்கலாம்
அந்த இடிபாடுகளில் இருந்து
அந்தச் சாம்பலில் இருந்து
மீண்டும் மீண்டும்
நாங்கள் உயிர்த்தெழுவோம்
உன் கனவுகளைக் கலைப்போம்

உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையைக் கையில் எடுத்துக்கொண்டு
என்னை நோக்கிவா
எழுபத்தைந்து வருடகால
உன் பாவங்களை நான் மன்னித்துவிடுகிறேன்
உன்னை அரவணைத்துக்கொள்கிறேன்
என் மண்ணில் வாழ உனக்கும் இடம் தருகிறேன்
நாம் நம் வீடுகளில் நிம்மதியாகத் தூங்கி எழலாம்
அதற்கு நீ தயாரா

உன் இதயத்தில் ஈரம் கசியட்டும்
உன் உணர்வு துளிர்க்கட்டும்
உன் சித்தம் தெளியட்டும்
அதற்கு நீ தயாரா

உன் ஆயுதங்களைக் கடலில் வீசிவிட்டு
ஒரு ஒலிவம் கிளையுடன் வர நீ தயாரா

அதுவரை கலைக்கப்பட்ட தேனீக்கள்
உன்னைத் துரத்திக்கொண்டே இருக்கும்
உன் காதில் இரைந்துகொண்டே இருக்கும்
எங்களை முற்றாக அழித்துவிடலாம்
என்று மட்டும் கனவுகாணாதே
அது நடக்காது
உலகில் ஒரு துளி நீதி இருக்கும்வரை
அது நடக்காது.

*நன்றி :தாய்வீடு*



# சிதைவு

மு. அநாதரட்சகன்

அந்த வீட்டுக்கு வாடகைக்கு வரும்போதே அக்காணிக்குள் இருந்த பாழ்கிணறு இப்படியேதான் இருந்தது. வீட்டுக்கு வந்து வருடங்கள் மூன்று கழிந்து போயிற்று. வேலிகள் அழிவடைந்திருந்த அக்காணியில் பாதி தூர்ந்து போய்க்கிடந்தது கிணறு. பாழ்கிணற்றடி அதன் சிதிலமடைந்த கட்டு மட்டும் துருத்திக்கொண்டு வெளித்தெரிந்தபடி காட்சி தந்தது. 'பாழ் கிணற்றடி' என்று சொல்லிக்கொள்ளும் அளவுக்கு அற்றகுதி பிரசித்தமாகியிருந்தது. அவ்வழியில் பயணித்த புதிதில் ஆவல்கொண்டு ஒருமுறை எட்டியும் பார்த்திருக்கிறேன். கிணற்றின் உள்ளே உடைத்து வீசப்பட்ட மதுப்போத்தல்கள், காலியான பலரக பியர்ரின்கள், மிக்சர் பைகள், குப்பை கூளங்கள், இன்னும் என்னென்னவோ நிறைந்து போய்க்கிடந்தது. பக்கத்திலிருப்பவர் தம் வீட்டுக்கழிவுகளைக் கொட்டுவதற்கு வசதியான குப்பைத் தொட்டியாக அப்பாழ்கிணறு மாறிப்போயிருந்தது. அக்காணியில் பாம்புகளும் குடிகொண்டிருப்பதாக அயலில் பேசிக் கொண்டார்கள். புதர் மண்டிக்கிடந்த அக் காணியை ஊடறுத்து ஒற்றையடிப் பாதையொன்று பிரதான வீதியை அடைய நீண்டிருந்தது. பக்கத்திலிருப்பவர்களுக்கு அது குறுக்குப்பாதை என்றாகிவிட்டது.

சமீப நாட்களாக, பாதையை அண்டியிருக்கும் அப்பாழ்கிணற்றுக்கட்டு முகமறியாதவர்கள், இளவட்டங்கள் சஞ்சரிக்கின்ற இடமாகி அயலவர்களுக்குப் பயம் காட்டுகிறது. அவர்கள் கிணற்றுக்கட்டை தமக்கு வசதியான இருக்கை யாக்கிக்கொண்டனர். அதுவும் பொழுது சாய்கிற நேரமென்றால் அந்த இடம் களைகட்டிவிடும். யாருக்கும் பரிச்சயமில்லாத முகங்கள் அவை. மீசையும்,



தாடியும், வாரிவிடப்படாத தலையுமாக இருந்தனர். அவர்களைக் கடந்து போகையில் எதுவெனப் பகுத்தறிய முடியாத நாற்றமொன்று முகத்திலடிக்கும். அவ்வேளைகளில் பாதையால் போய்வருகின்ற இளம்பெண்கள் மிரளமிரளபோய் வருவர். கிணற்றுக்கட்டில் குந்தியிருப்பவர்களின் கிண்டல் கேலிகளுக்கும் உள்ளாவர். அதிலும் துணிச்சலான பெண்கள் அவர்களை முறைத்துவிட்டுப்போவதுமுண்டு. பொதுவில் அந்த இளவட்டங்களின் அட்டகாசங்களை யாரும் நேரில் எதிர்க்கத்துணிவதில்லை. அப்படியொரு பயம் அவர்கள் மீது.

இச்சூழலை விரும்பாத சிலர் வேறிடங்களுக்கு வீடுமாறிச்சென்றுவிட்டதாக அயலில் பேசிக் கொண்டார்கள். இன்னும் சிலர் பாதையை மாற்றி சுற்றுப்பாதையில் போய்வருகிறார்கள்..

எப்பவும் கண்ட கண்ட எளியதுகளும் வந்து கூடுகிற இடமென பயந்து போயிருந்தனர். சுற்றுவட்டத்தில் எல்லோருக்கும் கமலா அக்காவின் எழிலன் மீதுதான் கோவம். எழிலன் கூடுவாரோடு கூடி அமைதியைக் கெடுக்கிறான் என்ற மனக்குறை அவர்களுக்கு. இதனால் அவன் யாருக்கும் வேண்டாதவனாகிவிட்டான்.

எழிலன் நான் அங்கு குடியிருக்க வந்த புதிதில் நல்லபிள்ளையாகத்தான் இருந்தவன். யாருடனும் வம்புதும்புக்குப் போகாதவன். எப்போதும் கலகலப்பாகப் பேசுபவன். பாடசாலைக்கும் ஒழுங்காகப் போய்வந்தவன். எப்போதும் கமலா அக்காவின் சொற்கேட்டு, அவவின் கட்டுக்குள் அடங்கிக் கிடந்தவன்தான். சமீபத்தில்தான் அவனது போக்குமாறி தறிகெட்டுப் போயிருக்கிறான். இப்போ வரவர அவனை யாருக்கும் பிடிக்கவில்லை. முன்னர் போல நேர்கொண்டு யாருடனும் பேசுவதில்லை. என்னுடனும் நெருங்கி வந்து பேசுவதில்லை. அவனைக்கடந்து போகையில் ஏதோவொரு புகை நாற்றம் காற்றில் மிதந்து நாற்றமடிக்கும்.

எழிலனுக்குகென்ன வயது இருபதைத் தொட்டிருக்காது. இப்போதெல்லாம் இரவில் தான் வீட்டுக்கு வருகிறான். தெருவில் அசுகையில்லாமல் சுற்றித்திரிகிறானாம். எப்போதாவது என் கண்ணில் படுகிறான். தோற்றத்திலும் விகாரமாகி நேரெதிர் மாற்றம். எப்படியிருந்தவன் இப்படியாகி விட்டான். பொலிவிழந்து போனான். முகத்திலிருந்த குழந்தைத் தனம் இப்போதில்லை. செம்மை பாரித்துக் கிடக்கும் கண்கள் வன்மம் கொண்டு பயம் காட்டுகின்றன. கொழுத்திருந்த உடலும் வாடிக்காய்ந்து போயிருக்கிறது. குரலும் கரகரத்து இனிமையை இழந்துவிட்டது.

அவனது வீட்டுக்கு எதிர்த்துதான் என்வீடும். முன்னர் அவனது அம்மா கமலாக்கா ஒட்டுறவாகிப் பழகிவந்தவ. எல்லாவற்றுக்கும் மாஸ்ரர், மாஸ்ரர் என்று ஓடிவருகிறவ. இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதில்லை. ஒதுங்கிப்போய் யாருடனும் பழகுவதில்லை.

கமலாக்கா பாவம், அயலவர்களின் அவமானங்களையும், தூற்றல்களையும் தாங்கிக்கொண்டு நடைப் பிணமாகிவிட்டா. முகத்திலும் எப்போதும் ஒருவித சோகம் படிந்து கிடக்கிறது.

கமலாக்கா கணவனை போரில் இழந்து நிர்க்கதியானவ. பற்றாக்குறையான வாழ்க்கைக்கு பழக்கப்பட்டுப்போனவ. நகரத்துப் பாடசாலையொன்றில் எழிலனைப் படிக்க வைக்கப் பாத பாடுபட்டவ. கடைசியில் அவவுக்குத் துயரம்தான் மிஞ்சியது. அவவின் தலையில் இன்னும் மூன்று பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது.

சமீப நாட்களாக, எழிலன் பற்றி காதில் எட்டும் செய்திகள் மகிழ்ச்சி தருவதாக இல்லை. நண்பர்களுடன் மோட்டார் சைக்கிள்களில் வந்து பாழ்கிணற்றடியில் கூடுவதும், கமலா அக்காவிடம் முரண்டுபிடித்து காசுபறித்துச் செல்வதுமாக இருக்கிறான். அயலவர்களும் பயந்து போயிருந்தார்கள். சில நாட்களாகப் பக்கத்து வீடுகளில் களவு போவதாக என் மனைவி கூறினாள். பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போவதாகவும் கூறினாள். அந்தப் பழியும் அவன்

மீதுதான். திருட்டில் பிடிபட்டு ஏச்சும் அடியும் வாங்குவது அவனுக்குச் சகஜமாகிப்போனது. சூடு சொரணையற்ற சடமாகிவிட்டான்.

இவனால் கமலாக்காவும் இடிந்துபோய் விட்டா. அயலட்டையில் தலை காட்டுவதில்லை. தவ மிருந்து அவனைப் பெற்றதாக முன்னர் அடிக்கடி கூறுவா. அவனைக் கடிந்துகொள்ளவும் மனம் ஒப்பாமல் தவித்துப்போயிருக்கிறா. கண்டிக்கப் போய் விபரீதத்தில் முடிந்துவிட்டால் என்கிற பயம் கமலாக்காவுக்கு. அவனை எப்படியும் மீட்டுவிடலாமென்ற நம்பிக்கையில் அம்மன்மீது பழிபோட்டுவிட்டுக் காத்திருக்கிறா. தன் உறவுகள் தன்னை வெறுப்பதும், மறை வில் குறை கூறித் திரிவதும் அவவுக்குத் தெரியாததல்லை. எழிலனை நினைக்கையில் இனம்புரியாத வலி வந்து நெஞ்சை அடைக்கும். அவ்வேளையில் வாய்விட்டுக் கத்தவேண்டும் போலிருக்கும் கமலாக்காவுக்கு.

இரவு நேரங்களில் அவன் வாந்தியெடுக்கும் சத்தமும் அடிக்கடி கேட்கிறது. தாயை அதட்டிப் பய முறுத்துவதும், பொருட்களைப் போட்டுடைப்பதும் வீட்டில் இயல்பாகிப் போய்விட்டது.

அவனைத் தேடிக்கண்டு புத்திமதி கூறி வழிக்குக் கொண்டுவர முடியாதா என என்மனம் அடிக்கடி எண்ணிக்கொள்ளும்.

நேற்று, நான் பாடசாலை விட்டுவரும் வரை காத்திருந்து வீட்டுக்கு வந்தான் எழிலன். அவனைக் கண்டதும் மனைவி பீதியில் பதறிப் போய் நின்றாள்.

"சேர்... பட்டுவேட்டி இருந்தால் தாங்கோ சேர்..."

"கோயிலுக்குப் போகவோ...?"

"இல்லை.. சேர். கலியாணவீட்டுக்குப் போகவேணும்"

தயங்கித் தயங்கிக் கேட்டான்.

மறுவார்த்தை பேசாது மடிப்பில் கிடந்ததை எடுத்துக்கொடுத்தேன். பௌவியத்துடன் அதை வாங்கிச் சென்றவன் இன்று காலையிலேயே கொண்டுவந்து தந்தான். அவசரம் என்று கூறி சைக்கிளையும் எடுத்துச் செல்வான். சொன்னபடி தப்பாது தந்துவிடுவான்.

என்னளவில் ஏதோ மரியாதை அவனுக் கிருந்தது. எழிலனை இப்படி அருமையாகச் சந்திப்பது குறைவு. சந்திக் கின்ற தருணங்களில் புத்திமதி கூறவும் முயன்றிருக்கிறேன். எல் லாவற்றையும் கேட்டுக் கொண்டு தலை குனிந்திருப்பான். முகத்தில் சலனமிருக்காது.

இதைப்பார்த்த என் மனைவி என்னுடன் தர்க்கப்பட்டு கோவித்துக்கொள்வதுண்டு. அவனது சகவாசம் ஆபத்தாகி விடுமென்ற பயன் அவளுக்கு.

இன்றிரவு ரியூசன் வகுப்பை முடித்துவிட்டு வரும்போது ஒழுங்கையில் அயலவர் கூடி நின்றதைப் பார்த்தேன். வந்த களையுடன் சாப்பிட உட்கார்ந்தேன். மனைவியின் முகத்தில் ஒருவித களை தெரிந்தது. பொலிஸ் வந்து எழிலனைப் பிடித்துச் சென்றது பற்றி ஆசுவாசப்பட்டுக் கூறினாள். அதில் நிம்மதிப் பெருமூச்சும் கலந்திருந்தது.

அவனிடம் போதை மாத்திரைகள் இருந்த தாகவும், இனி கந்தக்காட்டு முகாமுக்கு அவனைக் கொண்டு போய் தடுத்து வைக்கப் போறாங்களாம் என அயலவர்கள் பேசிக் கொண்டதாக தகவல் தந்தாள்.

அதைக் கேட்டதிலிருந்து மனம் ஏதோ நிம்மதி யிழந்திருந்தது.

பாவம். அவனைச் சீரழித்தது இச்சூழல்தான். பாவம் எழிலன். சீரழிந்துபோன சூழல் அவனை வலிந்திழுத்து, போதைக்கு அடிமையாக்கி விட்டது. அவன் பலிக்கடாவாகி அதிலிருந்து மீள முடியாதவனாகிவிட்டான். இன்று அவனைப் போல இன்னும் எத்தனை இளவயதினர் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இதனால் பெரும் இலாபமீட்டும் பெருச்சாளிகளின் பலம் பெருகித் தானிருக்கிறது. இது பற்றி

யாரும் கவலை கொள்வதில்லை என் மனம் ஆவேசப்பட்டுக்கொண்டது.

கமலாக்கா அழுகின்ற குரலும் இடையிடையே வந்து காதில் விழுந்தது. பெற்றபிள்ளையல்லவா? எழிலனால் குற்றவுணர்வுக்கு ஆட்பட்டு எங்களை நிமிர்ந்து பார்க்கக் கூச்சப்பட்டு ஒதுங்கிப்போன அவவைத் தேற்றுவதற்கு யார் வரப்போகிறார்கள்.

மறுநாள் காலையில் பாடசாலைக்குப் புறபட்டு வந்தேன். காணிக்கு முன்னால் அயலவர்கள் கூடிக்கூடி நின்று வேடிக்கை பார்த்தார்கள். கூட்டமாக நின்றிருந்தனர். முகங்களில் வெற்றிப் பெருமிதம் தெரிந்தது.

"மாஸ்ரர் எங்கடை வேலையைப்பாத்தியளே. இரவிரவா நித்திரையில்லை."

அதிலொருவர் கூறி திருப்திப் பட்டுக் கொண்டார்.

அந்தப் பாழ்கிணறு இருந்த இடமே தெரியவில்லை. முற்றாக மூடப்பட்டிருந்தது. காணிக்குள்ளால் போன பாதையும் அடைபட்டு வெறுமையாகக் காட்சி தந்தது.

அதைப் பார்க்கையில், எழிலனின் முகம் நினைவில் வந்து நின்றது. அவனை இழந்தது போல மனம் கனத்தது.

**யாழ். நிம்மர் மண்டபத்தில் 23.12.2023இல் தேசிய கலை இலக்கிய பேரவையின் 50வது ஆண்டுவிழாவில் கவிதாநிகழ்வில் சுழிபுரம் சத்தியமனை கே .ஏ.எஸ் நூலக மாணவிகளின் மஹாகவியின் 'பிஞ்சுப் பாட்டு' கவிதா நிகழ்வு**



# கியூபக் கவிதைகள்

**மீநிலங்கோ**

1959ம் ஆண்டு பிடல் காஸ்ரோ தலைமையிலான புரட்சி கியூபாவில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. அது இலக்கியத்திலும் எதிரொலித்தது. இயற்கையும் அழகையும் பாடிக்கொண்டிருந்த கவிஞர்கள், மக்களையும் மண்ணையும் அன்றாட வாழ்வியல் போராட்டங்களையும் உலக நிலவரங்களையும் பாடத் தொடங்கினர். இங்கு மூன்று கவிஞர்களின் 5 கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இக்கவிதைகள் 1967ம் ஆண்டு கியூபத் தலைநகர் ஹவானாவில் உள்ள புத்தக நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட "கியூபக் கவிதைகள்: 1959 முதல் 1966 வரை" (Cuban Poetry: 1959 to 1966) என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டவை. இந்நூலுக்கான முன்னுரை பின்வருமாறு அமைகிறது:

"கியூபப் புரட்சியின் வெற்றியுடன் தொடங்கும் ஆண்டுகளை நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளோம், ஏனெனில் இந்த காலகட்டத்தில் நமது கவிஞர்களின் வாழ்க்கையிலும் பணியிலும் ஒரு அசாதாரண மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஏழு வருடங்களில் எழுதப்பட்ட கவிதைகள், நமது இலக்கியத்தில் பெரும் அளவில் ஆதிக்கம் செலுத்திய கவிதையிலிருந்து வெகுவாகப் பிரிந்து செல்வதை எளிதில் உணர முடிகிறது. வெளிப்பாட்டிற்கான புதிய உலகம், ஒரு புதிய உண்மை, ஒரு புதிய வாழ்க்கை உதயமானது.

எங்கள் கவிஞர்கள் மீதான புரட்சியின் தாக்கம், எங்கள் மொழியில் அவர்களை சிறப்பானதாக மாற்றும் தனித்துவமான பண்புகளால் எங்கள் தேர்வில் நாங்கள் வழிநடத்தப்பட்டுள்ளோம். இது அன்றாட யதார்த்தத்தை ஆராய்ந்து, அதை பகுப்பாய்வு செய்து அதன் அனைத்து பரிமாணங்களிலும் பிரதிபலிக்கும் ஒரு தாக்கமாகும். முடிந்த போதெல்லாம், அழகியல் மதிப்பை விட வரலாற்று மதிப்பீட்டின் அளவுகோலை நாங்கள் விரும்புகிறோம். ஒவ்வொரு கவிஞரும் அந்தக் கவிதைகளால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறார். அவருடைய படைப்புகள், அவரது கருப்பொருள்களின் சிறப்பியல்பு என்று நாம் கருதுகிறோம். ஆனால் வரலாற்றால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்துபவற்றை சிறப்பு கவனத்துடன் தேர்ந்தெடுத்துள்ளோம். இந்தக் கவிதைத் தேர்வு முற்றிலும் சமூகம் அல்லது போர்க்குணமானது என்று அர்த்தமல்ல. அதை வாசிப்பது எதிர்மாறாக நிரூபிக்கும். வெவ்வேறு வயது மற்றும் வெவ்வேறு இலக்கியப் பின்னணியில் உள்ள மனிதர்களின் கவிதைகளின் குறுக்குவெட்டுத் தோற்றமே இத்தொகுதி. இது அவர்களின் பணியை அங்கீகரிக்கிப்பதோடு நமது வரலாற்றின் மிகவும் தீவிரமான அதேவேளை மாற்றங்கள் நிகழும் இக் காலகட்டத்தில் சில பங்கேற்பாளர்களின் படைப்புகளை பகிர்ந்தளிக்கிறது."

1. டொமிங்கோ அல்போன்சோ

## சாதாரண மனிதனின் கவிதை

*நான் மிகச் சாதாரணமான மனிதன்*
*ஏனைய பல இலட்சம் மக்களைப் போல*
*நானும் படிகளில் ஏறி இறங்குவேன்*
*மதிய உணவு சாப்பிடுவேன்*
*மாணவர்களோடு உரையாடுவேன்*
*(என் முதுகில் என்றுமே சிலுவை சுமந்ததில்லை)*
*ஒவ்வொரு நாளும் பல்வேறு மனிதர்களைச் சந்திக்கிறேன்*
*பாடுகின்ற மனிதர்களை*
*வாழ்வை வெறுக்கும் மனிதர்களை*
*பொழுதுபோகா மனிதர்களை*
*தினமும் காண்கிறேன்.*
*அவர்களுக்கு நான் ஒரு முக்கியமற்ற அவசியமற்ற ஒருவனாகவே கடந்து செல்கிறேன்.*
*ஊனமடைந்த போர்வீரனும்*
*களத்தில் நிற்கும் மனிதநேயனும்*
*என்னை விட முக்கியமானவர்கள்*
*அன்றாட வாழ்வின் இயல்புகளை*
*எளிய பாடல்களாகப் பாடும் நான்*
*மிகச் சாதாரண மனிதன்*

## நாற்பதில் ஒரு காதல் கதை

*கார்லொஸ்சுக்கு மனைவி என்றொருத்தி இருந்ததில்லை*
*லூசியாவுக்குக் கணவன் என்றொருவன் இருந்ததில்லை*
*கார்லொஸ் மணம்முடிக்க விரும்பினான்*
*லூசியாவும் அவ்வாறே*
*லூசியாவுக்கு முப்பத்தைந்து*
*கார்லொஸ்சுக்கு ஐம்பது*
*இருவரும் மணம் முடித்தனர்.*
*லூசியாவுக்கு கார்லொஸ் மீது காதலில்லை - ஆனால்*
*செல்வியாயிருப்பதில் பயனில்லை*
*கார்லொசுக்கு லூசியா மீது காதலில்லை - ஆனால்*
*ஒரு மனைவி தேவைப்பட்டது*

2. லூயிஸ் சுர்டியாஸ்

## அவர்கள் கடவுளை படைத்த போது

*அவர்கள் கடவுளைப் படைத்தபோது,*
*சொற்கள் உருவாகத் தொடங்கவில்லை*
*எழுத்துக்கள் பிறக்கவில்லை*
*எல்லாம் தொடக்ககாலத்திலேயே இருந்தது.*

*அவர்கள் முதற்புத்தகங்களை உருவாக்கியபோது*
*அதில் பொய்களைத் திணித்தார்கள்*
*(கொஞ்சங் கூட யோசிக்கவில்லை)*
*எல்லாம் இயற்கைக்கு மாறாய் இருந்தது*

*நீண்டகாலம் முன் இறந்துபோன*
*பேராசைப்பட்ட மனிதர்களின்*
*தேய்ந்து போன மதங்களுக்கு எதிராக களமிறங்குதல்*
*ஒரு நன்றியற்ற பணி*
*ஒரு பயனற்ற தந்திரம்.*
*தேவதைகளை அவர்களின் இடத்தில் வைப்போம்.*
*ஆவிகளை எம்நினைவில் இருந்து அகற்றுவோம்.*
*வர்க்கப் போராட்டத்தின் பிறகு*
*பைபிளின் கட்டளைகள் குறித்து யோசிப்போம்*

*சொர்க்கத்துக்கான வழிதேடி*
*பயனற்ற சடங்குகளில் ஈடுபடும்*
*ஒக்ஸ்போர்ட்டில் பட்டம் பெற்ற நம்பிக்கையாளர்கள் மீதும்,*
*பங்குச்சந்தையில் பணத்தைச் சுருட்டத் திரியும் வர்த்தகர்கள் மீதும்,*
*இயக்கவியல்வாதிகளான நாம் பரிதாபப்படுகிறோம்.*

*அவர்கள் கடவுளைப் படைத்தபோது*
*எல்லாம் வேறு மாதிரி இருந்தது.*
*இப்போது நாம் வீட்டை ஒழுங்காக்க வேண்டும்.*
*நாட்டை ஒழுங்காக்க வேண்டும்.*
*சொர்க்கத்தை விண்ணில் தேடாமல்*
*மண்ணில் படைக்க நாம் பாடுபட வேண்டும்.*

3. டிடோரா அலொன்ஸோ

## பேத்திக்கு இரண்டு கவிதைகள்

*மிக விரைவில் உனது பெயர் வனீசா*
*என்பதை நீ அறிவாய் - பின்னர்*
*வனீசா என்பது*
*கெட்டிக்கார வண்ணத்துப்பூச்சியின் பெயர் - பின்னர்*
*வேறும் சில சொற்களை நீ அறிவாய்*
*அணுகுண்டு*
*நேபாம்*
*இனஒதுக்கல் - அப்போது*
*அச்சொற்கள் எதை உணர்த்துகின்றன*
*என்பதையும் நாங்கள் உனக்குச் சொல்வோம்*

*2*
*பிச்சைக்காரர் என்றால் யார் என்று*
*வனீசா என்னைக் கேட்டாள்.*
*புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டியபடி*
*நான் சொன்னேன்:*
*"பிச்சை எடுக்கும் ஒருவர்."*
*அவள் மீண்டும் கேட்டாள்*
*மேலும் வலியுறுத்தியபடி,*
*"பிச்சை எடுப்பது என்றால் என்ன?"*

*எனது புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு*
*அவளைப் பார்த்தேன்*
*நீண்ட நேரம் பார்த்தேன்*
*எனது கண்ணீரின் ஊடு அவளைப் பார்த்தேன்*
*அவளை மீண்டும் மீண்டும் முத்தமிட்டேன்*
*அவளுக்கு எதுவுமே புரியவில்லை.*

*எனது பேத்திக்கு பிச்சைக்காரரைத் தெரியாது*
*எனது பேத்திக்கு பிச்சை எடுப்பது என்றால்*
*என்னவென்று விளங்காது*
*நான் தெருக்களில் ஓட விரும்புகிறேன்*
*நான் காணும் அனைவரையும் வாழ்த்துகிறேன்.*
*வீட்டின் கதவுகளைத் தட்டி*
*எல்லோரையும் முத்தமிடுகிறேன்.*
*நான் தெருக்களினூடே பயணிக்க விரும்புகிறேன்.*
*புரட்சிவழி இதைச் சாத்தியமாகிக்கியவர்களை வாழ்த்தியபடி.*

# அவள் 200

இரா.தனவந்தன்

அவள் கண்கள் மை
பூசியது இல்லை
அவள் கரங்கள்
வளையல் அணிந்ததும் இல்லை
அத்தனையும் அவளுக்கு
வேண்டியதும் இல்லை!
நெற்றியின் மேல் நிலவையொத்த
சிவப்பு நிறத்து பொட்டு...
வாக்கெடுத்து சீவி முக்கால் பாகம் சடையாகவும்
முடிவுப்பாகம்
முடிச்சாகவும் போட்டிருப்பவள்.
இருந்தால் ஒரு ரிபன்
அதுவும் இல்லையென்றால்
ஒரு பட்டுத் துண்டு
மூக்குத்தி துழைவு மாறாமல் இருக்க...
என்றோ அடகு வைத்த அவள்
தாய்வீட்டு சீதனம் வரும் என்ற நம்பிக்கையில்...
இரு கருவேப்பிலை குச்சி
அவள் மூக்குத்துளையடைக்கும் துணைப்பொருள்
வெற்றிலை சாயத்தால்
சிவப்பான உதடு,
கல் வைத்த பித்தளை தோடு..
அபட்டம் இல்லாத அழகு.
மாறுமா என்ற பேராவல் கொண்ட
உழைப்பு வண்ணம்
பூசிய முகம்....
அவ்வளவு தான்
அவள்...200
ஆண்டுகளாக....
பளிங்கு கற்களால் பதம்
பார்க்கப்பட்டு
முட்களினால்
துளைக்கப்பட்டது...
நீண்ட நாள் வரண்ட
நிலத்து வெடிப்புக்களும்
தோற்றுப்போகும்,
அவளின் பாதத்தின்
பக்கங்களை பார்க்கும் போது
பெருவிரல் நகங்கள்
பார்க்காத பாறைகள்
இல்லை,
அத்தனையும்
பழக்கப்பட்ட பாதங்கள்
ஓய்வு பெறும்
ஓர் நாள்..
அந்நாள்
அவள் மூச்சும்
துயில் கொள்ளும்...
முழுச் சேலையில் அரை
பாகம் அவளின்
மேலாடை
பல தையல் போடப்பட்ட
ரவிக்கை மானத்தை
காத்தால் போதும் என்று
அவளின் மேனியை சுற்றி
அன்று அவள்...
இன்று
தன் மகன் உடுத்திய
பழைய முழு கை வைத்த
சட்டை
அகற்றவும்
விலக்கவும் சில வேளை
தப்பிக்கவும் இலகு
என்பதால்...
சில தாயும் பல
குமரி பெண்களினதும்
மேலாடை...
ஓய்வு என்பது
அவளின் அவனுக்கு
உண்டு
அவளின் அவர்களுக்கு
உண்டு ஆனால்
அவள் ஓய்வு
இல்லாத இயந்திரம்
ஓய்வினை
விரும்பாத
மானுடம்

செங்கதிரோன்
அவளை மிஞ்சி
துயில் எழும்ப
எத்தனித்தாலும் வெற்றி
என்பது அவளுக்குதான்
“ஆமாம்”
அவள் இயற்கைக்கு
மாறாக
உழைக்கவும்
உதிரத்தை கொடுக்கவும்
பழக்கப்பட்டவள்
ஆயிற்றே...
200 ஆண்டுகளாக.
அவளுக்கு என்று
எது இருக்கிறது
எதுவும் இல்லை
அவசரம் என்றால்
ஒதுங்க ஒய்வு
அறை இல்லை
இயற்கை அழைத்தால்
செல்ல ஓர் இடமும் இல்லை
தாய் பால் ஊட்ட ஓர்
தனி இடம் இல்லை
தன்னிச்சையாய் ஓர்
முடிவெடுக்க
வாய்ப்பு அமையவே இல்லை

அவள் 200
ஆண்டுகள் பெற்றதைவிட
இழந்தவை அதிகம்
உறக்கம் இழந்தாள்
பாதி உதிரம் இழந்தாள்
கண்ணீரை இழந்தாள்
தன் பொழிவை இழந்தாள்
அத்தனையும்
இழந்தவளை
இறுக்க பற்றுவோம்
அதுதான் 200 ஆண்டுகளுக்காக
அவளுக்காக
நாம் செய்வது...

# களவு அல்லது காணாமல்போன வார்த்தைகள்

**அலெக்ஸ் பரந்தாமன்**

சற்று முன்னர்தான்
அந்த வார்த்தைகள் மனதிலிருந்தன.
வெண்தாள்களில்
அவற்றைப் பதியமிடுவதற்குமுன்
யாரோ அதை
களவாடிச் சென்றுவிட்டார்கள்.
அல்லது
காணாமல் போய்விட்டன.

நினைவாகவிருந்த அவ்வார்த்தைகள்...
மிகவும் எளிமைகொண்டு
அழகானவையாக இருந்தன!
அர்த்தமுள்ளனவாக மிளிர்ந்தன!
வார்த்தைகளில் உள்ள
ஒவ்வொரு எழுத்துக்களும்
சடுதியாக என்முன்னே வந்து நின்றபோது...
அவைகள் கூறிய ஆழக்கருத்துகள்
அதிசயமானவையாக இருந்தன.
சமூகத்துக்கும்
பிரயோசனமானவையாகத் தெரிந்தன.

வெளியுலகு காண்பதற்காய்
அவற்றை வெண்தாள்களில்
பதியமிட முனைகையில்தான்
களவாகப் போயின...
காணாமலாக்கப்பட்டன...
எனதுணர்வுகளையும் மீறி.

தேடினும்
அவையினிக் கிடைக்காதெனினும்
மாற்றுச்சொற்களைப் பொருத்திக் கொள்ளினும்
மனதைவிட்டுப்போன
அச்சொற்களுக்கீடாகா(து)
இனியமையும் புனைமிகு எழுத்துகள்.

## தேசிய கலை இலக்கிய பேரவை யாழ். கொக்குவில் பணிமனையில் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில்....



கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெயசங்கர் நெறியாள்கையில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சத்திய சோதனை' நாடக ஆற்றுகை 25.04.2024



க.வாசுதேவனின் 'பிரஞ்சுப் புரட்சி' நூல் விமரிசன அரங்கு – 21.01.2024



கருணாகரனின் 'எதிர்' (கவிதைகள் குறித்த கட்டுரைகள்) நூல் பற்றிய உரையாடல் –01.10.2023



"மாக்சிசமும் இலக்கியத் திறனாய்வும்" விசேட உரையும் கலந்துரையாடலும் –பேராசிரியர் பா. ஆனந்தகுமார் (தமிழ்நாடு) :–23.10.2023

## தேசிய கலை இலக்கிய பேரவையின் புத்தக அரங்கவிழா

### கோப்பாய் 25.01.2024



### கோப்பாய் 26.01.2024



### கோப்பாய் 27.01.2024



### தர்மபுரம், கிளிநொச்சி 09,10.03.2024



### தெல்லிப்பளை 13,14.04.2024






தேசிய கலை இலக்கிய பேரவையின் கொழும்பு பேரவை ஏற்பாட்டில் 2024.03.31 கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் ஈழத்து இலக்கியங்களில் "பெண் உரிமை" தொடர்பான ஆய்வு, "கல்லாகவே ஆனாள்" நூல் வெளியீடு





தேசிய கலை இலக்கிய பேரவையின் புத்தக அரங்கவிழா–சுழிபுரம் 28,29,30.09.2023/ மாதகல் 25,26.11.2023





யாழ். றிம்மர் மண்டபத்தில் தேசிய கலை இலக்கிய பேரவையின் 50வது ஆண்டுவிழா–23.12.2023